விலை ரூபா 20.00


உறவுகளைத் துண்டித்த இஸ்ரேல்
பக்கம் 09


பட்டினிப்போர் நிறைவு
பக்கம் 11


ஆகப்போவது எதுவுமில்லை
பக்கம் 14


இன்றும் சுழல் வீசுமா?
பக்கம் 27

www.onlineuthayan.com

பக்கங்கள்: 38

# உதயன்

சுடர் 27
கதிர் 124

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 16 வியாழக்கிழமை (29/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# என்ன செய்ய வேண்டும் என்று எவரும் சொல்லத் தேவையில்லை

## வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மத்தியில் ஜனாதிபதி சீற்றம்



கொழும்பு, மார்ச் 29
நல்லிணக்கத்தின் ஊடாக நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு மேலதிகமாக ஒரு மைல் நடப்பதற்கு இலங்கை அரசு தயாராகவுள்ளது. ஆயினும் இலங்கை என்ன செய்ய வேண்டும் என்பதை எவரும் எமக்குக் கூறக் கூடாது. போரை வெற்றி கொண்டு நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்த எமக்கு யாரும் பாடம் கற்பிக்க வேண்டாம். எந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை நாங்கள் தீர்மானிப்போம்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் 'ஸ்ரீலங்கா எக்ஸ்போ 2012' கண்காட்சி நேற்று ஆரம்பமானது. இதில் ஜனாதிபதி மஹிந்த பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர். அங்கு உரையாற்றிஜனாதிபதி இலங்கை மீது மேற்கொள்ளப்பட்டு வரும் சர்வதேச அழுத்தங்கள் 04

### பல்கலை மாணவன் நீரில் மூழ்கிச் சாவு

வடமராட்சி, மார்ச் 29
ஆழியவளைக் கடலில் நீராடச் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார். வடமராட்சி கிழக்கு, ஆழியவளை கட்டைக்காடு, முள்ளிவளையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை றெனோல்ட் எல்ரன் (வயது 27) என்பவரே மரணமானார். இவர் யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருடப் பொதுக் கலைப் பிரிவு மாணவராவார். தனது 4 வயது மருமகளுடன் நேற்றுக்காலை 11 மணியளவில் 04

# ஐ.நாவில் மீண்டும் ஒரு தீர்மானம் வராமல் தவிர்த்துக் கொள்ளுங்கள்

## உலகின் மூத்த தலைவர்கள் இலங்கைக்கு எச்சரிக்கை

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென உலக மூத்த தலைவர்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. மீண்டும் இப்படியான ஒரு தீர்மானம் வராமல் தவிர்த்துக் கொள்ளுமாறும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் மேலும்



அழுத்தங்கள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தலைமையிலான இந்தக் குழு இலங்கை அரசிடம் இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணை அதிகப் 04

# கைகொடுத்த நாடுகளுக்கு இலங்கை நன்றிக் கடிதம்

கொழும்பு,மார்ச் 29
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த மற்றும் நடுநிலை வகித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்து, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடிதங்களை அனுப்பியுள்ளார்.ஆனால், அமெரிக்காவின் தீர்மானத்தின் கடுமையைக் குறைத்து இலங்கையைக் காப்பாற்றிய இந்தியாவுக்கு அவர் எந்த நன்றியையும் தெரிவிக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து - இலங்கைக்கு ஆதரவாக நின்றபங்களாதேஷ், சீனா, கொங்கோ, 04

### விஷாகா கல்லூரி மாணவி முதலிடம்

கொழும்பு, மார்ச் 29
2011ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் விஷாகா கல்லூரி மாணவி உதேஷிகா ஹெட்டியாராச்சி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, மாத்தளை விஞ்ஞானக் கல்லூரி மாணவி அனுஷா பெரேரா இரண்டாமிடத்தையும் கண்டி தர்மராஜ கல்லூரியைச் சேர்ந்த பாரத மதுசங்க மற்றும் பின்னவல மத்திய கல்லூரியைச் சேர்ந்த தில்மி வமல்ரதன ஆகியோர் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளதாகக் கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது. (த)

# பிரேரணையில் இந்தியாவின் திருத்தங்களால் பயனில்லை

## அமெரிக்கா தனது இலக்கை அடைந்துவிட்டது என்கிறார் விமல்

இலங்கைக்கு எதிரான பிரேரணையில் இந்தியா மாற்றங்களைச் செய்ததில் எதுவித பயனும் ஏற்படவில்லை. இறுதியில் தான் நினைத்த இலக்கை அமெரிக்கா அடைந்துவிட்டது என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டினுள் கோதுமை மாவின் நுகர்வை அதிகரிக்கச் செய்வதற்கான ஒப்பந்தத்தை அரச சார்பற்ற அமைப்பொன்று ஏற்றுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குருநாகலை, ஹிம்பாகமுவ பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டினுள் கோதுமை மாவின் நுகர்வை அதிகரிக்கச் செய்வதற்கான ஒப்பந்தத்தை அரச 04

# தொண்டமான் அமைச்சை துருவி ஆராய்கிறது அரசு

கொழும்பு, மார்ச் 29
கால்நடை வள மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அரசை விட்டு வெளியேறியுள்ளார் எனக் கூறப்படும் நிலையில், அவரது அமைச்சு இது வரைகாலமும் முன்னெடுத்த நிதி, நிர்வாக நடவடிக்கைகளை ஆராய்வதற்கு அரச உயர் மட்டம் நேற்று இரகசிய பணிப்புரை விடுத்துள்ளது ணமிகவும் நம்பகரமான முறையில் நேற்று மாலை 'உதயனு'க்குத் தெரியவந்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வது தொடர்பிலான கடிதத்தை அரசுக்கு அனுப்பியுள்ளதாகக் கூறப்படும் நிலையில், 04

# தலையீடுகளைத் தவிர்த்தால் பரிந்துரைகளை செயற்படுத்தலாம்

## நீதி அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29
நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளும். தேவையற்ற தலையீடுகளைத் தவிர்த்தால் அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இருக்காது என நீதியமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்ற பிரபுக்கள் சபை உறுப்பினரான நெஸ்பி பிரபு நேற்று புதன் 04

### மர்மப் பொருள் வெடித்து பெண் காயம்

முல்லைத்தீவு இரணைப்பாலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு இரணைப்பாலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் பெண்ணொருவர் தனது காணியில் குப்பைகளைக் கொளுத்தியபோது மரத்தின் கீழ் புதைந்திருந்த மர்மப் பொருளொன்று வெடித்துச்சிதறியது. இதில் பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் உடனடியாக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்தச் சம்பவத்தில் முல்லைத்தீவு இரணைப்பாலைப் பகுதியைச் சேர்ந்த தனுஜன் அன்ரன் மெனிக்கா ராகினி (வயது 51) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

### 60.8 வீத மாணவர் உயர் கல்விக்குத் தகுதி பெற்றனர்

இம்முறை சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை பரீட்சார்த்திகளில் 60.8 வீதமான மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர். பரீட்சைகள் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய இது கடந்த மூன்று வருடங்களை விடவும் அதிகமாகும். சகல பாடங்களிலும் சித்திபெறாதவர்களின் எண்ணிக்கை 4.47 வீதமாகப் பதிவாகியுள்ளது.

### ஆஸ்திரேலியாவில் அமெரிக்க தளம்

இந்தியப் பெருங்கடலில் ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான காக்கோஸ் தீவில் ஆளில்லா வேவு விமானத் தளத்துடன்கூடிய கடற்படைத் தளத்தை அமைக்க அந்த நாடு அமெரிக்காவுக்கு அனுமதி அளித்துள்ளது. கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் ஒபாமாவின் ஆஸ்திரேலியப் பயணத்தின் போது இருநாடுகளிடையே ராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பதுடன் ஆஸ்திரேலியாவின் டார்வின் தீவில் அமெரிக்க படைகளை நிலைநிறுத்தவும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து இலங்கைக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடைப்பட்ட இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான காக்கோஸ் தீவில் பிரம்மாண்ட கடற்படை தளத்தை அமெரிக்கா அமைக்க உள்ளது.

### புறாப்பொறுக்கியில் வாகன விபத்து

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் குஞ்சர் கடைக்கு அண்மையில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றினால் அப்பகுதி ஊடாக போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டது. யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்த லொறி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற வான் ஒன்றை முட்டியதுடன் எதிரே இருந்த மதிலையும் மோதித் இடித்து விழுத்தியது. எனினும் இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. உடனடியாக அந்தப் பகுதிக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் போக்குவரத்தையும் சீர் செய்தனர்.

# ஜெனிவா நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்கு இரகசிய அறிக்கை

**இலங்கைப் பிரதிநிதிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மற்றும் அமர்வுகளின் பின்னணியில் இடம்பெற்ற சம்பவங்கள் உள்ளிட்ட சகல விடயங்களும் இதில் அடங்கும்**

கொழும்பு, மார்ச் 29

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுகளின் பின்னணியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இரகசிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அமர்வுகளில் பங்கேற்ற இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஜெனிவாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட முல்லைத்தீவு வைத்தியசாலையில் கடமையாற்றிய தமிழ் வைத்தியர் மற்றும் புலி எதிர்ப்பு தமிழர்கள் அங்கு உரிய முறையில் தமது எதிர்ப்பை வெளியிடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இது தொடர்பில், ஜனாதிபதியிடம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் முறைப்பாடு செய்வார் எனத் தெரியவருகிறது.

எனினும், கனடா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து ஜெனிவாவுக்கு வந்த புலி ஆதரவாளர்கள் இலங்கைக்கு எதிராகத் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மற்றும் அமர்வுகளின் பின்னணியில் இடம்பெற்ற சம்பவங்கள் உள்ளிட்ட சகல விடயங்களும் உள்ளடங்கிய இரகசிய அறிக்கை ஜனாதிபதியிடம் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக இளம் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார். (த)

## சுனாமி கோபுரத்தின் பாகங்களைக் களவாடிய இலங்கை மீனவர்கள்

கொழும்பு, மார்ச் 29

இந்திய அரசினால் சர்வதேச கடல் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சுனாமிக் கோபுரத்தின் பாகங்கள் இலங்கையில் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் இந்த கருவியை களவாடிச் சென்றுள்ளதாகவும் ராடர்களின் மூலம் இந்தத் திருட்டுச் சம்பவம் அம்பலமாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் கோபுரத்தின் பாகங்கள் மாத்தறை கந்தர கொட்டியேகொட என்னும் பிரதேச காட்டுப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியில் தகவல்களை பரிமாறிக் கொள்ளக் கூடிய வகையில் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது.

மூன்று நாள்களுக்கு முன்னர் இந்தக் கருவியின் பாகங்கள் காணாமல் போயுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை மீனவர்களினால் சுனாமி கோபுரத்தின் பாகங்கள் எடுத்துச் செல்லப்பட்டதாக ராடர்களின் மூலம் தெரியவந்துள்ளது. இந்தக் கருவியின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய அரசிடம் மீள ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



ஸ்ரீலங்கா எக்ஸ்போ 2012 வர்த்தகக் கண்காட்சியினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை ஆரம்பித்து வைத்தார். இக்கண்காட்சி எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

## வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கு 16 ஆயிரம் கோடி ரூபா செலவீடு

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தகவல்**

கொழும்பு,மார்ச் 29

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மீள் நிர்மாணப் பணிகளுக்கு அரசு 2006ஆம் ஆண்டு முதல் 2011 வரை 16,000 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை கிழக்கு மாகாணம் தேசிய பொருளாதாரத்துக்கு 6 சதவீத பங்களிப்பை இப்போது வழங்குகின்றது. இது வடமத்திய மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் பெற்றுக் கொடுக்கும் பங்களிப்பை விடக் கூடுதலாகும்.

அத்துடன் வடமாகாணம் தேசிய பொருளாதாரத்திற்கு 3 சதவீத பங்களிப்பை வழங்குகின்றதென்றும் அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை கண்ணி வெடி அகற்றுதல் மீள் குடியேற்றம் வாழ்வாதார அபிவிருத்தி உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கண்ணி வெடி அகற்றுவதற்காகப் பயன்படுத்தி வருகின்றது. இவற்றிற்கு மேலதிக 6 அணிகள் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. (த)

### இலங்கைக்கு கால அவகாசம் போதாது

இலங்கை தனது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள எடுத்துக் கொண்ட காலம் சிறிது என்பதால் ஐ.நாவில் வாக்களிப்பதில் சிக்கல் ஏற்பட்டதாக மலேசியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சாட் ரொய்ட் தெரிவித்துள்ளார்.

30 வருட கால யுத்தம் நிறைவடைந்து மனித உரிமை மீறல் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டு அதனை நாடாளுமன்றில் சமர்ப்பித்து 3 மாதத்திற்குள் செயற்படுத்த இலங்கைக்கு காலம் போதாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கையை எதிர்க்கும் அவசியம் எமக்கில்லை

**ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கூறுகிறார்**

கொழும்பு,மார்ச் 29

மேற்குலக நாடொன்றுக்கு இலங்கைக்கு எதிராக செயற்படவேண்டிய அவசியம் இல்லை என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் பேர்னாட் செவேஜ் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சபை எந்தத் தருணத்திலும் மனித உரிமைகள் மற்றும் மானிடவியல் நெருக்கடிகள் தொடர்பிலேயே முன்னிற்பதாகச் செவேஜ் குறிப்பிட்டார்.

அந்த அமைப்பின் ஆரம்பமும், குறித்த காரணங்களை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் நினைவுகூர்ந்தார். இதனடிப்படையில், இலங்கைக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையும் அதே நோக்கத்துடனேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பேர்னாட் செவேஜ் மேலும் தெரிவித்தார். (த)

### கை, கால் உடைப்பது குறைந்த தண்டனை

கொழும்பு,மார்ச் 29

என்னைப் பற்றிய வதந்திகளைப் பரப்புவதன் மூலம் விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்காக எனது பெயரை ஊடகங்கள் பயன்படுத்த விரும்பினால் அப்படி செய்து கொள்ளட்டும் என அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

பண்டைய மன்னர்கள் காலத்தில் வழங்கப்பட்ட தண்டனைகளுடன் ஒப்பிடும் போது கை, கால்களை உடைப்பது குறைந்த தண்டனையாகும் என்பதை நான் கூற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## ஜெனிவாவில் இலங்கை பெற்றது அமோக வெற்றி

**அமைச்சர் வாசுதேவ பெருமிதம்**

கொழும்பு,மார்ச் 29

அமெரிக்கா போன்ற பலமான நாட்டின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் சில நாடுகளின் வாக்குகளைப் பெற முடிந்தமை இலங்கைக்குக் கிடைத்த அமோக வெற்றி என ஜனநாயக இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

மேலும் சில நாடுகள் பிரேரணைக்கு வாக்களிக்காமல் இருந்தமையும் இலங்கைக்கு கிடைத்த வெற்றியே என முன்னணியின் பொதுச் செயலாளர், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

உலகில் அனைத்து நாடுகளுடனும் நட்பை பேணி, பலம் வாய்ந்த நாடுகளின் பிடியில் சிக்காமல் மனித உரிமைகள் கூட்டத்தில் உலகிற்கு பாடம் கற்பிக்க முடிந்துள்ளதென அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## அமெ. பொருளாதாரத் தடையால் தேயிலை ஏற்றுமதியில் பாதிப்பா?

**ஆராய்கிறது இலங்கை அரசு**

கொழும்பு,மார்ச் 29

ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதார தடைகளால் நாட்டின் தேயிலைக் கைத்தொழிலுக்கு ஏற்படக் கூடிய தாக்கங்களை இயன்றளவு குறைக்கும் வழிவகைகளை இலங்கையில் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இலங்கையின் தேயிலையின் இரண்டாவது பெரிய கொள்வனவாளராக உள்ள ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளால் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏதும் இல்லை என கூறப்படுகின்றபோதும் பெயர் குறிப்பிட விரும்பாத இலங்கைத் தேயிலை சபையின் உயர் அதிகாரி ஒருவர், இலங்கைத் தேயிலை வர்த்தகத்தின் எதிர்காலம் நிச்சயமற்றதாக உள்ளது என குறிப்பிட்டார்.

இதன் காரணமாக எது நடந்தாலும் சமாளிக்கும் வகையில் மூலோபாயங்களை வகுப்பதற்குத் தொடர்புடைய பங்குதாரர்களுடன் பேச்சுகள் நடந்துவருவதாக அவர் கூறினார்.

தற்போது கொடுப்பனவுகள் அரச வங்கிகள் ஊடாக செய்யப்படுகின்றன. இப்போது பிரச்சினை ஏதும் இல்லை. நல்ல விளைவும் கிடைக்கின்றது. இந்த வாரமும் நாம் தேயிலை அனுப்பினோம். ஆனால் அடுத்து என்ன நடக்கும் என எமக்கு தெரியாது. எதற்கும் எச்சரிக்கையாக இருப்பதே நல்லது என அவர் கூறினார்.

ஈரான் வருடாந்தம் 45 மில்லியன் கிலோகிராம் தேயிலையை இலங்கையிலிருந்து கொள்வனவு செய்கின்றது. இதன் மொத்த பெறுமதி 200 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். அண்மையில் மத்திய கிழக்கில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் காரணமாக இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் பின்னடைந்தது.

தற்போது தேயிலைச் கைத்தொழில் மீது தாக்கம் ஏதும் இல்லை. ஆயினும் இவ்வருட நடுப்பகுதியில் நிலைமை பாதகமாகலாம் என இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தை சேர்ந்த நிராஜ் டி மெல் கூறினார். (த)

## மன்மோகனின் மன்றாட்டத்தால் அரசு இறுமாப்படைந்துள்ளது

**விக்கிரமபாகு கருணாரத்ன சீற்றம்**

கொழும்பு, மார்ச் 29

மன்மோகன் சிங்கின் மன்றாட்டம் இலங்கை அரசின் இறுமாப்பை அதிகரித்துள்ளதோடு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆப்பு வைத்துள்ளது என்று இடதுசாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.



பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதைவலியுறுத்திச் சர்வதேச ரீதியில் பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவின் ஜெனிவா பிரேரணைக்கு ஆதரவளித்தோம். ஆனால் இலங்கைக்கு பாதகம் ஏற்படாத வகையில் திருத்தம் செய்தோம் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பி மன்றாடுகிறார். தாலாட்டுகிறார்.

ஆனால் இலங்கை அரசு இந்த மன்றாட்டத்தைத் தூக்கியெறிந்து விட்டது. உண்மையில் இந்தியா தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைப்பதை விரும்பவில்லை. இதுவே இந்த மன்றாட்டத்திற்கு காரணமாகும். இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையின் காணிகளையும் கடல் வளங்களையும் சுவீகரிப்பதிலேயே நாட்டம் கொண்டுள்ளன. எனவே, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தப் போவதில்லை.

இதனால் சர்வதேச ரீதியில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளோம். விசேடமாக கியூபாவுக்கு இலங்கை அரசாங்கத்தின் தமிழ்விரோத உண்மையான முகத்தை தெளிவுபடுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்- என்றார். (த)

# நோயாளர் விடுதிகள் இரண்டு மூடப்பட்டன

## யாழ்.போதனா வைத்தியசாலை நெருக்கடியைத் தவிர்க்க திறக்குமாறு கோரிக்கை

*சாவகச்சேரி, மார்ச் 29*

*சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நோயாளர் விடுதிகளாக இயங்கிய இரு கட்டடங்கள் இரண்டு மாதங்களாக மூடப்பட்டுள்ளன. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்தக் கட்டடங்கள் நோயாளர்களுக்குப் பெரும் வசதியாக இருந்தன என்று சுட்டிக்காட்டப்பட்டது.*

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தால் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நான்கு நோயாளர் விடுதிகள் கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டன. இதனை அடுத்து முன்னர் இயங்கிய விடுதிகளின் நோயாளிகள் புதிய கட்டடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

இதனையடுத்து முன்னர் இயங்கிய இரண்டு விடுதிகளும் தளபாடங்கள், உபகரணங்கள் போன்றவற்றுடன் மூடப்பட்டுக் காணப்படுகின்றன.

இந்த விடுதிகளை முதியோர் பராமரிப்பு நிலையமாக மாற்றவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறி கடந்த மாதம் அறிவித்திருந்த போதிலும் இதுவரை அது தொடர்பான எந்தவொரு பணிகளும் இடம்பெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் தொற்றா நோய்ப் பிரிவுகள் பல நோயாளர்களால் நிறைந்து பெரும் இட நெருக்கடிகளின் மத்தியில் இயங்கி வருகின்றன.

அவற்றில் ஒரு பிரிவை தற்போது சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் மூடப்பட்டுள்ள விடுதிகளுக்கு அனைத்துப் பணியாளர்களுடன் தற்காலிகமாக இடம்மாற்றினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்படும் இட்நெருக்கடியை ஓரளவேனும் தவிர்க்க முடியும் என்றும் சுகாதாரத் துறையின் சுட்டிக்காட்டுகின்றனர்

இந்தக் கட்டடங்கள் தலா 40 கட்டில்களுடன் சகல வசதிகளுடனும் கூடிய வகையில் அமைக்கப்பட்டன. இவ்வாறான வசதிகள் கொண்ட விடுதிகளை மூடி வைத்திருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. குறித்த இரண்டு விடுதிகளையும் திறந்து வைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## மாநகர சபை உறுப்பினரானார் ரமணன்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய உறுப்பினராக செல்வராசா ரமணன் பதவியேற்றுக் கொண்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபையின் பெப்ரவரி மாதத்துக்கான கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினராகக் கலந்துகொண்டார்.

ஐ.ம. சு. முன்னணியின் ஆளும் அணியின் உறுப்பினராக இருந்த என். நிஷாந்தன் தமது அணிக்கு எதிராகச் செயற்பட்டதை அடுத்து கட்சியில் இருந்து விலக்கப்பட்டார். இதனையடுத்து புதிய உறுப்பினராக ரமணன் நியமிக்கப்பட்டார். விருப்புவாக்கு அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (ம- 7)

## இளநீருக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்.குடாநாட்டில் செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்து வாகனம் மூலம் தினமும் எடுத்துவரப்படும் செவ்விளநீரை பெரும் எண்ணிக்கையானவர்கள் வாங்கிப் பருகிச் செல்கின்றனர்.

தற்போதைய கடும் வரட்சி, வெப்பம் போன்றவற்றால் குடாநாட்டு மக்கள் பகல் வேலையில் பெரிதும் அவஸ்த்தைப்படுகின்றனர்.

இந்த வரட்சியைத் தணிப்பதற்கு மக்கள் கூடுதலாக செவ்விளநீரைப் பயன்படுத்தியும் வருகின்றனர்.

இந்த செவ்விளநீரின் பயன்பாடு குடாநாட்டில் திடீரென அதிகரித்தும் காணப்படுகின்றன.

குடாநாட்டின் பல்வேறு முக்கிய சந்திகள் மற்றும் பொது இடங்களில் செவ்விளநீரின் விற்பனை களை கட்டிக் காணப்படுகின்றது.

தெற்கில் இருந்து எடுத்துவரப்படும் இந்த செவ்விளநீர் ஒன்று 60 ரூபாவாக இங்கே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட எண்ணிக்கையான உள்ளூர் வியாபாரிகளும் இளநீர் விற்பனையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## உடைந்தது குமுதினியின் சுங்கான்

யாழ்ப்பாணம், மார்ச் 29

சுக்கான் வீல் உடைந்ததில் நெடுந்தீவு அரச படகுச் சேவையில் உள்ள குமுதினி நேற்றுப் புதன்கிழமை தனது சேவையை நிறுத்திக் கொண்டது.

குமுதினியின் நிலைமை தொடர்பாக ஐந்து தினங்களுக்கு முன்னரே படகு ஊழியர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தனர்.

எனினும் இது குறித்து கவனம் எடுக்காத நிலையில் அது உடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மக்கள் பாவனைக்கு விடப்படாத விடுதி

வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட அராலி - கொட்டைக்காடு அரசினர் மகப்பேற்று விடுதி புனரமைக்கப்பட்டும் மக்கள் பாவனைக்கு இன்னும் விடப்படவில்லை. எனவே மக்கள் பாவனைக்கு இதனைவிட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் முன்வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. இந்த விடயம் தொடர்பாகச் சபை உறுப்பினர் நடனேந்திரன் தெரிவித்ததாவது:

மகப்பேற்று விடுதி அராலியில் புனரமைக்கப்பட்டு நீண்டகாலமாக திறக்காமல் கிடக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபருக்கும் சுகாதாரப் பணிப்பாளருக்கும் ஏற்கனவே கடிதம் மூலம் அறிவித்துள்ளேன். எனினும் இந்த விடயம் குறித்து ஆக்கபூர்வமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய காலத்தில் மகப்பேற்று விடுதியை ஆரம்பித்து அதற்குரிய சகல வசதிகளையும் வழங்கிப் பின்தங்கிய பிரதேச அபிவிருத்திக்கு முன்வர வேண்டும்- என்றார். (ம)

## கடற்றொழிலாளர்களுக்கு 2 ஆம் கட்ட மானியம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு இரண்டாம் கட்ட விசேட மானிய முத்திரைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் விநியோகிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மானிய முத்திரைகளை எடுத்து வருவதற்காக மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரிகள் குழு ஒன்று மாத இறுதியில் கொழும்பு செல்லவுள்ளது.

ஏப்ரல் மாதத்துக்கான இந்த மானிய எரிபொருள்களுக்கான முத்திரைகள் வந்து சேர்ந்ததும் அவற்றை உடன் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது விநியோகிக்கப்பட்டுவரும் முதலாம் கட்டத்துக்கான விசேட மானிய முத்திரைகளை இந்த மாதத்துக்குள் விநியோகித்து முடிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டள்ளது.(ம-17)

## 18 கிலோமீற்றருக்கே இதுவரை'காப்பெற்'

யாழ்ப்பாணம், மார்ச் 29

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகளில் சுமார் 18 கிலோமீற்றர் நீளத்துக்கு யாழ். மாவட்டத்தில் 'காப்பெற்' போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வீதிகளை முதல் முறையாக 'காப்பெற்' வீதிகளாக மாற்றும் திட்டத்தின் முதல் கட்டம் தற்போது நிறைவடைந்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 8 வீதிகளில் 'காப்பெற்' போடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதியில் 3 கிலோ மீற்றர் நீளமும், சுண்டுக்குளி - கொழும்புத்துறை வீதியில் 2.56 கிலோ மீற்றர் நீளமான வீதியும் நல்லூர் - ஓட்டுமடம் வீதியில் 2.41 கிலோ மீற்றர் நீளமும், யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதியில் ஒரு கிலோ மீற்றர் நீளமும், யாழ்ப்பாணம் - பண்ணை - ஊர்காவற்றுறை வீதியில் ஒரு கிலோ மீற்றர் நீளமும், சங்கிலியன் தோப்பு - செம்மணி வீதியில் 3.43 கிலோ மீற்றர் நீளமும், .நாவாந்துறை - ஓட்டுமடம் வீதியில் 1.21 கிலோ மீற்றர் நீளமும் இவ்வாறு 'காப்பெற்' வீதியாக மெருகூட்டப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலுள்ள வீதிகளில் 30 கிலோ மீற்றர் நீளத்துக்கு மீள் தார் இடும் பணிகள் இடம்பெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டள்ளது. (ம-3)

## 'காளை' விவகாரம் நீதிமன்றப் படியில்

யாழ்ப்பாணம், மார்ச் 29

திருநெல்வேலி கால்நடைப் பண்ணையில் ஏலத்தில் வாங்கப்பட்ட மாட்டை இறைச்சிக்காக வெட்டக் கூடாது என்று யாழ். அரச அதிபர், யாழ். பொலிஸார் ஊடாக தடை உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், உரியதீர்வைப் பெற்றுத் தரும்படி கோரி மாட்டை வாங்கியவர் யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அதனையடுத்து யாழ். அரசஅதிபர்திருமதிஇமெல்டா சுகுமாருக்கும், யாழ். பொலிஸாருக்கும் அது பற்றிய அறிவித்தல் அனுப்புமாறு கூறி வழக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு நீதிமன்று ஒத்திவைத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த சுமார் 2ஆயிரத்து 500 இறாத்தல் எடை கொண்ட காளையை கடந்த ஞாயிற்றுக் கிழமை இறைச்சிக்காக வெட்ட இருந்த நிலையில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனவே மாட்டை வெட்டுவதற்கு அனுமதிக்குமாறு அல்லது அதற்குரிய பணத்தைப் பெற்றுத் தருமாறு மனுதாரர் கோரியுள்ளார். (ம-4)

## வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் திட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 29

பாடசாலை மாணவர்கள் மத்தியில் அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் வலுவூட்டல்செயற்பாடுகள் கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகள், முன்பள்ளிகள், சன சமூக நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் போன்ற இடங்களில் இடம்பெற்று வருகின்றன.

கோண்டாவில் பொது நூலகர் செல்வி கி. அனிதா தலைமையில் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ். சந்திராதேவியின் ஒருங்கிணைப்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு நூலக அபிவிருத்தியை மேம்படுத்தும் திட்டத்துக்கு அமைய இது இடம்பெற்று வருகின்றது.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வளப்படுத்தும் நூலகமாகத் தெரிவு செய்யப்பட்ட கோண்டாவில் பொது நூலகத்தால் நடைமுறைப்படுத்தும் இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் சிறுவர்கள், பெரியவர்கள், வலுவிழந்தோர் என அதிக நண்மை அடைந்து வருகிறார்கள்.

பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் நூலக வலுவூட்டல் நிகழ்வுகளாக இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2012 ஆம் ஆண்டு 40 நிகழ்வுகளை மையப்படுத்தி, இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

## இடைநடுவில் பயணிகளை இறக்கிவிடும் மினிபஸ்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கனகம்புளியடி ஊடாகக் கொடிகாமம் செல்லும் மினி பஸ்களில் பயணிப்போர் இடைநடுவில் நுணாவில் சந்தியில் இறக்கிவிடப்படும் அவல நிலை அண்மைக்காலமாக இடம்பெற்று வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சாவகச்சேரி சங்கத்தானை, மீசாலை போன்ற இடங்களைச் சேர்ந்த பயணிகள் நீண்டநேரம் நுணாவில் சந்தியில் காத்திருக்க வேண்டியுள்ளது.

கனகன்புளியடி ஊடாகக் கொடிகாமம் என்னும் பயணப் பலகைவைக்காமல் கொடிகாமம் என்னும் பயணப் பலகையுடன் யாழ். மினி பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்படுகிறது. மினி பஸ்களில் பயணிகள் ஏறி நுணாவில் சந்தியில் மட்டுவில் வீதிக்குத் திரும்பும் போதுதான் அந்த மினிபஸ் கனகன்புளியடி ஊடாக செல்லும் பஸ் எனப் பயணிகளுக்கு தெரிய வருகிறது.

இதனால் தினமும் இந்த மினிபஸ்ஸில் பயணிக்கும் 15 இற்கும் மேற்பட்ட பயணிகள் நுணாவில் சந்தியில் இறக்கிவிடப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது. இதனால் நுணாவில் சந்தியில் அடுத்த பஸ் வரும் வரை காத்திருந்து பயணத்தைத் தொடர்வதாகப் பயணிகள் தெரிவித்தனர். தென்மராட்சி மினி பஸ் சங்கத்தினர் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் கேட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக தென்மராட்சி சிற்றூர்திகள் சங்கத் தலைவர் சி.சத்தியமூர்த்தியிடம்கேட்டபோது, உரிய இடங்களுக்கான பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டே பஸ்கள் ஓடப்படுகின்றன. மக்கள் அதனை கவனிக்கத் தவறுகின்றனர் என்று தெரிவித்தார். (ம-9)

## நிகழ்வுகள்

அபிவிருத்திக் கூட்டம்

உலககுடிதண்ணீர்தினத்தை முன்னிட்டு குடிதண்ணீர் முக்கியத்துவம் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி நகர சபைத் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டப் பணிப்பாளர் தி.பாரதிதாசன், வேலணைப் பிரதேச சபைச் செயலர் செ.ரமேஷ் ஆகியோர்கலந்துகொள்வர். (ம-14)

பொதுக்கூட்டம்

யாழ்.மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான மார்ச் மாதப் பொதுக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

# கூட்டமைப்பின் தலைமையில் மேதினம் கோருகிறது தமிழரசு

யாழ்ப்பாணம், மார்ச் 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலேயே யாழ்ப்பாணத்தில் மே தின நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட கிளைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிறிதரன், பேராசிரியர்களான க.சிற்றம்பலம், க.குகபாலன் மற்றும் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இவ்வாண்டு மே தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் எனவும் அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்யவேண்டும்எனவும்முடிவு எட்டப்பட்டது. மே தின நிகழ்வில் விவசாய மற்றும் மீனவர் சங்கங்கள், நிறுவனங்கள், சமூக முன்னேற்ற அமைப்புக்கள் ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்களும் கலந்து கொள்வதற்கு ஒழுங்குகளை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டதாக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (த)

# தலையீடுகளைத் தவிர்த்தால் பரிந்துரைகளை செயற்படுத்தலாம்

01↘ கிழமை முற்பகல் அமைச்சர் ஹக்கீமை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த உரையாடலின் போது லண்டன் மாநகர உறுப்பினரான அவரது மனைவி திருமதி நெஸ்பியும் கலந்து கொண்டார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் நடைமுறை பற்றி நெஸ்பி பிரபு கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் ஹக்கீம், அதில் நல்ல பல அம்சங்கள் அடங்கியிருப்பதாகவும் தேவையற்ற தலையீடுகள் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் அதை நடைமுறைப்படுத்துவதில் சிரமம் எதுவும் இருக்கமாட்டாதெனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

வடக்கிலிருந்து அகதிகளாக வெளியேறிய முஸ்லிம்களில் கணிசமான தொகையினர் யுத்தம் முடிவடைந்த சூழ்நிலையில் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்று மீள்குடியேறி வருகின்றனர் அவர்களுக்கான போதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டிய தேவையிருக்கிறது.

தடுப்புக் காவலில் இருக்கும் பொழுது சித்திரவதைக்குள்ளாகும் நபர்களின் விடயத்தில் சட்ட மா அதிபர் திணைக்களம் கடுமையான நிலைப்பாட்டை மேற்கொண்டு குற்றமிழைப் போருக்காக வாதாடுவதை தவிர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. என்றும் அமைச்சர் ஹக்கீம் அங்கு தெரிவித்தார்.

## கைகொடுத்த நாடுகளுக்கு இலங்கை நன்றிக் கடிதம்

01↘ கியூபா, ஈக்குவடோர், இந்தோனேசியா, குவைத், மாலைதீவு, மொரிட்டானியா, பிலிப்பைன்ஸ், கட்டார், ரஷ்யா, சவூதி அரேபியா, தாய்லாந்து, உகண்டா ஆகிய நாடுகளுக்கும், நடுநிலை வகித்த அங்கோலா, பொட்ஸ்வானா, புர்கினோ பாசோ, டிஜிபோதி, ஜோர்தான், கிர்கிஸ்தான், மலேசியா, செனகல் ஆகிய நாடுகளுக்குமே இலங்கை வெளிவிவகார அமைச்சர் நன்றி தெரிவித்துக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இந்தியா கைவிட்ட பின்னர், தீர்மானத்தைத் தோற்கடித்து இலங்கையைக் காப்பாற்றும் முயற்சியில் சீன வெளிவிவகார அமைச்சர் யங் ஜீச்சி முக்கிய பங்கு வகித்ததாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு இரண்டு நாள்கள் முன்னதாக சீன வெளிவிவகார அமைச்சருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பேசியதை அடுத்தே இலங்கைக்கு ஆதரவு தேடும் தீவிர நடவடிக்கையில் சீனா இறங்கியது.

அத்துடன் அணிசேரா நாடுகள் அமைப்புக்குத் தலைமை தாங்கும் எகிப்து வெளிவிவகார அமைச்சர், இஸ்லாமிய நாடுகள் அமைப்பின் இணைப்புச் செயலராக உள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரபானி கர் ஆகியோருக்கும், கியூபா, ரஸ்யா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கும் பீரிஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

எனினும் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில் இருந்த கடுமையைக் குறைக்கும் திருத்தத்தை முன்வைத்த இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து இலங்கை கடிதம் அனுப்பவில்லை.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரி, இந்தியாவின் திருத்தத்தை மதிக்கிறோம். இதன்மூலம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இருந்த வாசகம், இலங்கை அரசின் விருப்பத்துடன் என்று மாற்றப்பட்டுள்ளது.

இறுதிநேரத்தில் இந்தியா கொண்டு வந்த திருத்தத்தினால், இலங்கையின் மீதான அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் போரில் பின்புலமாக இருந்து உதவிய இந்தியா, முக்கியமான தருணத்தில் இலங்கையைக் கைவிட்டு விட்டது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

தீர்மானத்தில் திருத்தங்களை மேற்கொண்டு இந்தியா உதவியதற்கு இலங்கை இதுவரை நன்றி தெரிவித்து எந்தக் கடிதத்தையும் அனுப்பவில்லை.

அதேவேளை தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது ஏன் என்று விளக்கமளித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதி மஹிந்தவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இதற்கும் ஜனாதிபதி பதில் அனுப்பவில்லை.

இந்தக் கடிதத்துக்கு பதில் அனுப்ப வேண்டியதில்லை என்று இலங்கை அரசு கருதுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார். (த)

### ஆலோசனைகளை மொஹான்பீரிஸ் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 29

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், வெளிநாட்டுச் சக்திகள் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாது. யாருடைய ஆலோசனையும் எங்களுக்குத் தேவையில்லை என முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளை அரசு ஏற்கனவே நடைமுறைப் படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

யுத்தம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு கிட்டத்தட்ட 250 பரிந்துரைகளை முன்வைத்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரேரணையில் இந்தியாவின் திருத்தங்களால் பயனில்லை

01↘ சார்பற்ற நிறுவனம் ஏற்றுள்ளது. இந்த நிறுவனமே விவசாயிகளை தூண்டிவிட்டு போராட்டங்களை நடத்துவதற்கு வழிசமைத்துக் கொடுக்கின்றது. ஒரு கிலோ நெல்லுக்கு 40 ரூபாவை கேட்குமாறு விவசாயிகளைத் தூண்டுவதும் அரச சார்பற்ற அமைப்புத்தான்.

அண்மையில் பொலன்னறுவை விவசாயிகள் வீதியில் இறங்கிப் போராடுவதற்கு நிகழ்ச்சி நிரலொன்றைத் தயாரித்துக் கொடுத்ததும் அரச சார்பற்ற நிறுவனமொன்றுதான். அந்த அமைப்பு நெல் விலையை 40 ரூபாவுக்கு உயர்த்துமாறு கோரி நிற்கின்றது.

40 ரூபாவுக்கு நெல்லைக் கொள்வனவு செய்து அதனைக் களஞ்சியப்படுத்தியப் பின்னர் அதனை அரிசி ஆலைக்கு அனுப்பி சுத்தப்படுத்தி சந்தைக்கு கொண்டு செல்லும்போது செலவுகள் அதிகரிக்கின்றன.

களஞ்சியசாலைச் செலவு, போக்குவரத்துச் செலவு, சுத்தப்படுத்தல் செலவு, பொதி செய்யும் செலவு உட்பட பலவிதமான செலவுகள் ஏற்படுவதால் ஒரு கிலோ அரிசி 100 ரூபாவை தாண்டலாம். இந்நிலை ஏற்பட்டால் அரிசியின் நுகர்வு குறைவடைந்து, கோதுமைமாவின் நுகர்வு அதிகரிக்கும். எனவே, விவசாயிகள் இவ்விடயத்தில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அதில் அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்ததற்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது. - என்றார்.

# ஐ.நாவில் மீண்டும் ஒரு தீர்மானம் வராமல் தவிர்த்துக் கொள்ளுங்கள்

01↘ படியான வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசு நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை குறித்த பிரேரணை வலியுறுத்தியிருந்தது.

இதற்கமைய குறித்த பிரேரணைக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நெல்சன் மண்டேலா தலைமையிலான உலக மூத்த தலைவர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை முன்னாள் உலகத் தலைவர்கள் வரவேற்றுள்ளதாக அந்த அமைப்பின் உறுப்பினரும், அயர்லாந்தின் முதல் பெண் ஜனாதிபதியும், ஐ.நா மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளருமான மேரி றொபின்சன் தெரிவித்துள்ளார்.

உரிய நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் மேற்குலக நாடுகளினால் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை எனவும் தீர்மானத்துக்கு இந்தியா, நைஜீரியா போன்ற நாடுகளும் ஆதரவளித்துள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீண்டும் ஒரு தடவை இவ்வாறு தீர்மானம் நிறைவேறாத வகையில் நடந்து கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், மனித உரிமை மேம்பாடு மற்றும் குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதித்தல் ஆகியவற்றின் மூலம் மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.

உலக மூத்த தலைவர்கள் அமைப்பில் ஐ.நா முன்னாள் பொதுச் செயலர் கோபி அனான், தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மன்ட் டுட்டு, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், இந்திய மனித உரிமைகள் செயற்பாட்டாளர் எலா பாத், நோர்வேயின் முன்னாள் பெண் பிரதமர் குறோ புறொண்ட்லான்ட் ஆகியோர் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

### பல்கலை மாணவன் நீரில் மூழ்கிச் சாவு

01↘ ஆழியவளைக் கடலில் நீராடச் சென்றிருந்தபோது சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவர் நீருக்கு அடியில் சென்று நீண்ட நேரமாக மேலே வராமையால் அங்கு நின்ற அவரது மருமகளான சிறுமி ஓடிச் சென்று அயலவர்களுக்கு தகவல் கொடுத்ததாகத் தெரியவருகிறது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-4-8)

# தொண்டமான் அமைச்சை துருவி ஆராய்கிறது அரசு!

01↘ இந்த அதிரடி முடிவுக்கு அரசு வந்திருக்கிறது என்றும் அறியமுடிகின்றது.

நிதித்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த சிரேஷ்ட அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவொன்றிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், அந்தக் குழு மேற்கொண்டுள்ள ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து பல முக்கிய தகவல்கள் ஆதாரங்களுடன் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அறிய முடிகிறது.

கால்நடை வள மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் பால் பொதி செய்யும் நிறுவனமொன்றிற்கு இயந்திரக் கொள்வனவில் பாரிய நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளன என தொழிற்சங்கப் பிரமுகர்கள் அரச உயர்மட்டத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

குறிப்பாக, பால் பக்கெட் பொதிசெய்யும் இயந்திரம் 70 கோடி ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என அந்த அமைச்சின் நிதி அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அதன் கொள்முதல் பெறுமதி 20 கோடி ரூபா எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, இந்த இயந்திரம் எந்த நிறுவனத்தின் ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்டது? அதன் முகப்பெறுமதி எவ்வளவு? கொள்வனவு செய்யும் விடயத்தின்போது தரகுப் பணம் எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது? வேறு நிறுவனங்கள் கொடுத்த கேள்வி மனு விலை என்ன? என்பது உட்பட முக்கிய பல விடயங்கள் தேடப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பால் பக்கெட் பொதி செய்யும் இயந்திரக் கொள்வனவு விவகாரத்தில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளன என ஏற்கனவே பல தடவைகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த தொழிற்சங்கமொன்று அரச தலைமைக்கு முறைப்பாடு செய்திருந்தது. எனினும், அந்த விடயம் தொடர்பில் அரசு அப்போது கவனம் செலுத்தவில்லை.

ஆனால், அமைச்சர் தொண்டமான் இராஜினாமா செய்தார் என தகவல் வெளியான நிலையில், அரசு இப்போது எடுத்திருக்கும் இவ்வாறான அதிரடி நடவடிக்கை அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# என்ன செய்ய வேண்டும் என்று எவரும் சொல்லத் தேவையில்லை

01↘ குறித்து கடுமையாகச் சாடினார். நாட்டின் இறையாண்மையை மீறும் வகையில் அரசுக்கு எதிராக சிலர் திட்டமிட்ட சதிமுயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குற்றம்சாட்டினார்.

நாடு ஒரு அபிவிருத்திப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் வேளை அதைத் திட்டமிட்டு இடையில் குழப்பி ஆட்சியைக் கவிழ்க்க திரைமறைவில் சிலர் முயற்சி மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார். தேவையற்ற சர்வதேச தலையீடுகளை தாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் எனவும் அவர் அங்கு திடமாகக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெரும் தியாகங்களுக்கு மத்தியில் வென்ற சமாதான சூழலில் இலங்கை உள்ளது. நாம் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நல்லிணக்கத்தின் ஊடாக நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு மேலதிகமாக ஒரு மைல் நடப்பதற்கு எமது அரசு தயாராகவுள்ளது. இது நாம் எமது மக்களுக்காகச் செய்யும் அர்ப்பணிப்பாகும். நாம் என்ன செய்ய வேண்டுமென யாரும் கூறக்கூடாது.

இலங்கை மேற்கொண்டு வரும் துரித அபிவிருத்தி செயன்முறைகள் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முக்கிய செயற்பாடுகளுக்கான ஐந்து கேந்திரங்களை அமைக்கும் செயன்முறை மேற்கொள்ளப்படுகிறது. இது மஹிந்த சிந்தனையின் கீழ் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக, புதிதாக வென்ற சமாதானத்தின் ஆச்சரியமாக, வலிமையான சமாதானத்தினதும் தேசிய ஐக்கியத்தின் ஆச்சரியமாக விரைவில் மாற்றும். இது எமது சொந்தப் பாரம்பரியங்களுடன் எமது சொந்த முயற்சிகளுடான நல்லிணக்கத்தை அடைவதன் ஆச்சரியமாகும் - என்றார் ஜனாதிபதி. (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வீம்புத்தனம் எமது நாட்டுக்கு நலனும் நன்மையும் தருமா?

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறே, ஜெனிவாத் தீர்மானம் கோருகிறது; வலியுறுத்துகிறது.

நாட்டில் ஜனநாயக ஆட்சியைத் தக்கவைப்பது, மனித உரிமைகளை நிலைநிறுத்துவது, வடக்கில் சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்துவது போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பரிந்துரைகள், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டவையே அன்றி, அமெரிக்காவும் இந்தியாவும் மற்றும் உலக நாடுகள் இருபத்தி இரண்டும் சேர்ந்து இயற்றியவை அல்லவே.

அவ்வாறிருக்க, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றாமல், நடைமுறைப்படுத்தாமல், அரசாங்கம் தட்டிக்கழிக்க முயற்சிப்பது ஏன்? அந்த வழியில் நடக்கமுனைவது நாட்டுக்கு மிகவும் ஆபத்தாக முடியும்.

இவ்வாறு எச்சரித்திருக்கிறது நாட்டின் பிரதான எதிர்க்கட்சியும், இலங்கையை மாறிமாறி ஆட்சிசெய்த கட்சிகளில் ஒன்றுமான ஐக்கிய தேசியக் கட்சி.

ஜெனிவாத் தீர்மானத்தை முன்வைத்து, அரசியல் இலாபம் தேட முயல்வதும், காலம் கடத்தத் திட்டமிடுவதும் நாட்டுக்குப் பல வகைகளிலும் பாதிப்பை உண்டாக்கும். இது மிகவும் பாரதூரமான விடயம். - என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கண்டித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் வைத்து, ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா மேற்கண்ட விடயங்களைச் சுட்டிக்காட்டினார்; விஸ்தாரமாக விளக்கியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு, அரசாங்கம் பொதுவான பொறிமுறை ஒன்றை அமைத்துச் செயற்படுத்த வேண்டும் என்றும் ஐ.தே.க. செயலாளர் யோசனை தெரிவித்தார். ஆனால் அரசாங்கம் அதனைத் தூக்கி வீசுமா, அல்லது மனதிற் கொள்ளுமா என்பதிலிருந்து அதன் வருங்காலப் பாதை எத்தகையதாக அமையும் என்பதனை ஊகிக்க இயலும்.

ஜெனிவாத் தீர்மானம் இலங்கையை ஒருபோதும் சர்வதேச நெருக்கடிக்குக் கொண்டுசெல்லாது. அது பொருளாதாரத் தடை குறித்ததும் அல்ல என்றார் அமைச்சர் ஜி.எல். பீரிஸ். அது மட்டுமன்றி அந்தத் தீர்மானம் இந்த நாட்டை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் விளக்கியிருந்தார். அவற்றையும் ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எடுத்துக்காட்டினார்.

அமைச்சர்களில் இன்னொரு தரப்பினர், ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களை மூடிவிட வேண்டும். அமெரிக்க உற்பத்திப் பொருள்களை இலங்கைக்குள் வராமல் தடைசெய்ய வேண்டும் என்றவாறாகக் கருத்துத் தெரிவிப்பது மட்டுமல்லாமல், பிரசாரமும் செய்கிறார்கள்.

மொத்தத்தில், அரச தரப்பினர் வாயில் வந்தவை எல்லாவற்றையும் கொட்டித் தள்ளுகிறார்கள். அனைத்துலகத் தொடர்புகள் கெட்டுப்போவதால், நாட்டுக்கு ஏற்படக்கூடிய பாதகமான அரசியல், வர்த்தகப் பெறுபேறுகள் குறித்து அவர்கள் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவை வெளிநாடுகள் நியமிக்கவில்லை; உருவாக்கவில்லை. சர்வதேசத் தீர்மானம் என்ற வகையில் எதற்கும் இடங்கொடுக்காமல் தப்பிக்கொள்ளும் வகையிலும், சர்வதேச மட்டத்திலான விசாரணை எதுவும் தலையெடுக்காது தடுப்பதற்காகவுமே அரசு, நல்லிணக்க ஆணைக்குழுவை தனக்குரிய தடுப்பு அணையாக உருவாக்கியது.

இது குறித்துப் பல தடவைகள் இப் பத்தியில் முன்னரும் எடுத்துக் காட்டியுள்ளோம். இப்போது என்னவெனில், அரசு தனது சொந்தத்தில் நியமித்த ஆணைக்குழுவின் முக்கியமான, பிரதானமான பரிந்துரைகளைத் தானும் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குப் பின்னடிக்கிறது.

அதன் விளைவே, ஜெனிவாத் தீர்மானம் என்பதனை அது சற்றும் உணர்வதாகத் தெரியவில்லை. பெரும் வீறாப்புப் பேச்சுகளும், உள்ளார்ந்த ரீதியில் அரசியல் இலாபம் தேடுவதிலுமே காலத்தைக் கழிக்கப் போகிறதோ என்ற நிலையை உருவாக்கி வருகிறது, அவ்வளவே.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய பரிந்துரைகளில் ஒன்று, வடக்கில், கிழக்கில் உள்ள ஆயுதக் குழுக்களிடமிருந்து அவற்றின் ஆயுதங்களைக்களைய வேண்டும் என்பதாகும். ஆனால் அது நிறைவேற்றப்பட்டதற்கான எந்தவிதமான அறிகுறியையும் சுமார் ஒரு வருடம் கழிந்துபோன நிலையிலும் காணமுடியவில்லை!

இத்தகைய ஒரு பின்னணியுடன், பின்னணியுடன் நல்லிணைக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் விரும்பியும் விரைந்தும் செயற்படுத்துவதில் முனைப்புடன் ஈடுபடும் என்று நம்பமுடியாத, எதிர்பார்க்கமுடியாத நிலை நாட்டு மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

அவ்வாறிருக்க, வெளிநாடுகள் சேர்ந்து, ஜெனிவாத் தீர்மானம் மூலம், இன்னும் ஒரு வருட காலத்துக்குள், நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கிய பரிந்துரைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கவேண்டும் என்று கோருவது அநீதி என்றோ உள்விவகாரங்களில் தலையிடும் அத்துமீறல் என்றோ கொள்ளத்தக்கவை அல்ல.

அமெரிக்கா தலைமையில் ஜெனிவாவில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அனைத்துலக சமூகத்தால் இலங்கைக்கு எதிராக, விடுக்கப்பட்டுள்ள பயங்கரமான சமிக்ஞை என்று கொள்வது தப்பன்று.

அது மட்டுமன்றி, இந்தியாவின் ஆலோசனைகள் அரசினால் அவற்றுக்குரிய பரிமாணத்தில் செயலாக்கப்படாவிடில், நாட்டின் எதிர்காலம் ஆபத்துக்கு ஆளாகும் என்பதனை அரசு மறந்தால், பல பாதகமான விளைவுகள் உண்டாகும் என்று உள்நாட்டுப் புத்திஜீவிகள் கூறுவதை அரசு புரிந்துகொள்ளுமா என்பது சந்தேகமே.

நாட்டில், நல்லிணக்கத்தின் ஊடாக நிரந்தர சமாதானத்தை எய்துவதற்கு அரசாங்கம் இன்னும் நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளது; அரசின் கடந்த மூன்று வருடச் செயற்பாடுகள் அதனையே புலப்படுத்துகின்றன. அரசின் வினைத்திறனும், அர்ப்பணிப்பும் போதாமையாலேயே நாட்டுக்கும், மக்களுக்கும் அபகீர்த்தி உண்டாகியது. இதனை இனியாவது அரச தலைவர்களும், அதீத பெரும்பான்மைப் பலமுள்ள அரசாங்கமும் உணரக்கூடாதா? வீம்புத்தனமான பேச்சுகளும் நடத்தைகளும் நாட்டுக்கோ, மக்களுக்கோ, அரசுக்கோ நலனையோ, நல்வினையையோ பயக்கப்போவதில்லை. உரியவர்கள் இதனை உணரப்போகிறார்களா? அல்லது தங்கள் சொந்த, தனிப்பட்ட ரீதியிலான எண்ணங்களும் அவை சார்ந்த செயற்பாடுகளுமே சரியானவை, இறுதியானவை என்று வேப்பிலை கையிலெடுத்து உக்கிரமாகச் சன்னதம் ஆடப்போகிறார்களா? காலம் தான் பதில் சொல்லும்!

# தமிழரின் வளங்களையே நேசிக்கின்றது இந்தியா

## நவ சமசமாஜக்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 29

இந்தியா தமிழ் மக்களை விட தமிழர் பிரதேசங்களிலுள்ள வளங்களையே அதிகளவு நேசிக்கின்றது. சோனியா அரசின் செல்லப்பிள்ளையே மஹிந்த அரசு. ஒருமுறை அது அடித்தாலும் மறுமுறை கொழும்பை டில்லி நிச்சயம் அரவணைக்கும்.

இவ்வாறு நவ சமசமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

**இந்தியா தமிழர்களை நேசிப்பது போல் நடித்து, தமிழர் பிரதேசங்களிலுள்ள வளங்களைக் கொள்ளையடிக்க முயற்சிக்கின்றது. இறுதிப் போரின்போது கைகட்டி வேடிக்கை பார்த்த இந்தியாவுக்கு தற்போது திடீரென பாசம் எங்கிருந்து வந்தது?**

இனப் பிரச்சினைக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஆகியவை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தான் விரும்பியதொரு தீர்வை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தமிழர்களுக்குத் திணிப்பதற்கு மஹிந்த அரசு முயற்சிக்கின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என சர்வதேசத்திடம் உறுதியளித்துள்ள மஹிந்த அரசு, அந்த அறிக்கையை முழுமையாக அமுல்படுத்த முடியாது எனக் தற்போது கூறுவது உலகை ஏமாற்றும் செயலாகும்.

தாமே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு திண்டாடும் அரசு உறுதிமொழியை நிறைவேற்றுமா என்பது சந்தேகத்துக்கிடமாகவே உள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என அமைச்சரொருவர் கூறுகின்றார். அவ்வாறு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமானால் வடக்கு, கிழக்கு பகுதியிலேயே வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இருப்பினும் இந்த விவகாரம் சாத்தியமற்றது. சட்டச் சிக்கல்களும் உள்ளன.

இந்தியா தமிழர்களை நேசிப்பது போல் நடித்து, தமிழர் பிரதேசங்களிலுள்ள வளங்களைக் கொள்ளையடிக்க முயற்சிக்கின்றது. இறுதிப் போரின்போது கைகட்டி வேடிக்கை பார்த்த இந்தியாவுக்கு தற்போது திடீரென பாசம் எங்கிருந்து வந்தது? இவையெல்லாம் அரசியல் இலாபங்களுக்காக அரங்கேற்றப்படும் நாடகங்கள். தெற்கு அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டாம் என இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுக்கின்றது. இதனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ம)

# அரச அலுவலர்களுக்கு கணினிப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் கணினிப் பிரயோகம் தொடர்பான பயிற்சியை அரச அலுவலர்களுக்கு வழங்கவுள்ளது.

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணானந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சிக்கு திணைக்கள தலைவர் ஊடாகப் பட்டதாரி அலுவலர், முகாமைத்துவ அலுவலர், நிகழ்ச்சித் திட்ட அலுவலர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

இந்தப் பயிற்சி 10 நாள்களுக்கு இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை பயிற்சி இடம்பெறும். கணினி அறிவு உடையோர் இதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டியதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# சிலுவைத் தியானப் பேரணி

கொழும்புத்துறை, மார்ச் 29

தவக்காலத்தை முன்னிட்டு வருடாந்தம் இடம்பெறும் சிலுவைத் தியானப் பேரணி இந்த முறையும் இடம்பெறவுள்ளது. பாஷையூரில் ஆரம்பித்து வைக்கப்படும் பேரணி மணியந்தோட்டத்தில் நிறைவடையவுள்ளது.

நாளை மாலை 4.30 மணிக்கு பாஷையூர் அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பிக்கும் திருச்சிலுவைப் பேரணி மணியந்தோட்டம் கர்த்தர் கோயிலைச் சென்றடைந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இயேசு சிலுவை சுமந்தபடியாக அமைக்கப்பட்ட திருவுருவத்தைத் தாங்கிய தேர் பாஷையூர் கடற்கரை வீதி, கண்டி வீதி, கொழும்புத்துறை வீதி, மணியந்தோட்டம் வீதி வழியாக ஆலயத்தைச் சென்றடையும்.

வீதிகளில் 14 இடங்களில் தரித்து நின்று இயேசுவின் பாடுகளைத் தியானிக்கும் நிகழ்வுகள் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளை பாஷையூர் பங்குத் தந்தை அருட் திரு. றோய் பேடினன்ட் அடிகள் மேற்கொண்டுள்ளார். (ம-135)

# கிராமங்களில் ஊடுருவும் தென்னிலங்கை வியாபாரிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் வீடு வீடாகச் செல்லும் தென்னிலங்கை வியாபாரிகளால் பல்வேறு வகையான பொருள்கள் விற்பனைசெய்யப்பட்டுவருகின்றன.

இந்த நடமாடும் சேவையில் அதிகமாக தென்னிலங்கை வியாபாரிகள் வாகனங்கள் மூலம் பொருள்களைக் கொண்டு ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தி கிராமங்களின் பொது இடங்களில் நின்று கூவி அழைத்து விற்பனை செய்து வருகின்றார்கள். கிராமங்களில் உள்ளோர் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வரும் பொருள்களை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

**விற்பனை செய்யப்படும் உற்பத்திப் பொருள்கள் கடன் அடிப்படையில் வழங்கப்படுவ தால் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.**

விற்பனை செய்யப்படும் உற்பத்திப் பொருள்கள் அதிகமாகக் கடன் அடிப்படையில் வழங்கப்படுவதால் நுகர்வோரின் எண்ணிக்கை கிராமங்களில் அதிகரிக்கின்றது.

குறிப்பாக வீட்டுப் பாவனைப் பொருள்கள், மின்சார சாதனப் பொருள்கள், ஆடைகள், சமையல் பாத்திரங்கள் போன்றன கடனடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன.

பொதுமக்களின் ஆர்வத்தால் நாளாந்தம் அதிகளவான தென்னிலங்கை வியாபாரிகள் யாழ்ப்பாணம் நோக்கி வந்த வண்ணம் உள்ளனர். (ம-14)

# கூட்டம்

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முதியோர் சங்கங்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று சமூக சேவைகள் அலுவலர் ஆர். புரட்சிதாஸன் அறிவித்துள்ளார்.

(15)

# 40 ரூபாவுக்குப் பாண்

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஐம்பது ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட 454 கிராம் நிறையுடைய பாண் எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக 55 ரூபாவரையில் உயர்வடைந்துள்ளது. ஆனாலும் வெலிக்கடை சிறைச்சாலையின் நலன்புரி பிரிவால் உற்பத்தி செய்யப்படும் அதே நிறையைக் கொண்டுள்ள பாண் 40 ரூபாவாகக் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரிகளின் முழுமையான கண்காணிப்பின் கீழ் அனுபவம் வாய்ந்த சிறைக் கைதிகளை ஈடுபடுத்தி சுகாதாரமாகவும் தர நிர்ணயங்களுக்கு ஏற்பவும் இவை தயாரிக்கப்பட்டு வருகின்றன.

எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ள போதிலும், சிறைச்சாலைகள் திணைக்களத்தால் கோதுமை மாவில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் முன்னர் நிலவிய விலை மட்டங்களிலேயே மக்களுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-22)

# களங்கம் துடைக்கப்பட்டது

## மன்னார் நகரசபைத் தலைவர் தெரிவித்தார்

மன்னார், மார்ச் 29

ஊடகவியலாளர்களின் நடு நிலையான செயற்பாட்டால் எமக்கு ஏற்படவிருந்த களங்கம் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம்.



மன்னார் நகரசபையின் இந்த ஆண்டுக்கான கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம் பெற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மன்னார் தினச் சந்தை வர்த்தக நிலையங்களில் ஏற்பட்ட தீவிபத்துச் சம்பவத்தைத் தொடர்ந்து, சில அரசியல் சக்திகள் எம்மீது சாயம் பூசுவதற்கு முயன்றன. ஆனால் மன்னார் ஊடகவியலாளர்கள் பக்குவமாகச் செயற்பட்டு உண்மைகளை வெளிக்கொணர்ந்ததன் மூலம் அது தடுக்கப்பட்டு விட்டது. என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சபைக் கூட்டம் ஆரம்பமாகியவுடன் அண்மையில் காலமான இந்து மத பிரதம குரு தேசபந்து, கலாநிதி மனோகர சர்மா குருக்களுக்கு சபையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. நகர பிதா உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் தினச்சந்தை வியாபார நிலையம் இனம் தெரியாத விஷமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவத்தின்போது வியாபாரிகளுக்குப் பல லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் எமக்கும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் குறித்த சம்பவத்தை சில அரசியல் சக்திகள் தமது அரசியல் சுய இலாபத்துக்காக எம்முடன் தொடர்புபடுத்த முயன்றன.

எனினும் மன்னார் ஊடகவியலாளர்கள் இந்த விடயம் தொடர்பாக நீதியான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

மன்னார் நகர சபை உறுப்பினர்களை மக்கள் இப்படியான வன்முறைகளைத் தூண்டுவதற்காகத் தெரிவு செய்யவில்லை என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

குறித்த சம்பவம் மன்னார் நகர சபைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இனி வரும் காலங்களில் மன்னாரில் இது போன்ற சம்பவங்கள் இடம் பெறக் கூடாது. மன்னார் மாவட்ட அரச அதிபர் உட்பட அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு அமைவாக மீண்டும் மன்னார் நகர சபை குறித்த வர்த்தக நிலையங்களைப் புதுப்பித்துள்ளது. இனி வரும் காலங்களில் மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

> மன்னார் ஊடகவியலாளர்கள் இந்த விடயம் தொடர்பாக நீதியான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் மன்னார் நகர சபைச் செயலாளர் திருமதி பேனாட் குரூஸ் மற்றும் மன்னார் நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் 04 பேரும் அரச தரப்பு உறுப்பினர்கள் 02 பேரும் கலந்து கொண்டனர். ஓர் உறுப்பினர் கலந்து கொள்ளவில்லை. மன்னார் நகர சபையின் கூட்டத்துக்கு ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். (க-12)

# அக்கராயன் குளத்திலிருந்து 15 முதல் சிறுபோக தண்ணீர்

அக்கராயன், மார்ச் 29

அக்கராயன் குளத்திலிருந்து சிறுபோக நெற்செய்கைக்கென எதிர்வரும் 15 ஆம் திகதி நீர் திறந்து விடப்படவுள்ளது.

இம்முறை அக்கராயன் குளத்தின் கீழ் ஆயிரத்து 690 ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கென அக்கராயன் குளத்திலிருந்து எதிர்வரும் 15 ஆம் திகதி நீர் விநியோகம் இடம்பெறவுள்ளது. இந்த மாதம் 30ஆம் திகதியுடன் விதைப்பு வேலைகளை நிறைவு செய்ய வேண்டும். கால்நடைக் கட்டுப்பாடுகள் தொடர்பாக முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஸ்கந்தபுரம் கால்நடைகள் சமாதானபுரம் வயல் வெளிகளில் காணப்படும் நெற்பயிர்களில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கால்நடைகள் தொடர்பான இறுக்கமான முடிவுகள் இம்முறை எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பூநகரி சின்னப் பல்லவராயன் கட்டுக் குளத்தின் கீழ் விவசாயிகள் தலா 1 ஏக்கர் வீதம் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியும்.

குளத்தின் புனரமைப்பு வேலைகள் இடம்பெறவுள்ளமையால் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதில் தடைகள் காணப்பட்டன.

இந்த நிலையிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதென இந்த முறை முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

சிறுபோக நெற்செய்கை நடைபெறும் அதேவேளையில் குளத்தின் புனரமைப்பு வேலைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (க-18)

# நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு மன்னாரில் நாள் விசேட பயிற்சி



மன்னார், மார்ச் 29

புதிதாக நியமனம் பெற்ற நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

வடமாகாண ஆளுநரின் வழிகாட்டலுக்கு அமைவாக வடக்கு மாகாண சபையில் புதிதாக நியமனம் பெற்ற நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு நான்கு நாள்கள் கொண்ட விசேட பயிற்சிகள், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் ஆரம்பமானது. எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இது தொடரவுள்ளது.

இதனை வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்தப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் மன்னார் அரச அதிபர் சரத் ரவீந்திர, மேலதிக அரச அதிபர் திருமதி எஸ்.மேகநாதன், மன்னார் நகரசபைச் செயலாளர் பேனாட் குரூஸ், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் துரம், வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ். கிருஸ்ணானந்தன் மற்றும் நியமனம் பெற்றவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-12)



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் மாணவர்களுக்கான சித்திரம் வரையும் செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. (405)

## பொங்கல் விழா

அரசமுறிப்பு - ஓமந்தை ஸ்ரீ முத்துகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 5 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் ஆலயத்தில் அன்னதான நிகழ்வும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (க-402)

## வருடாந்த உற்சவம்

வவுனியா செக்கடிப்புலவு வீரபத்திரர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் ஆலயத்தில் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (க-402)

# மருத்துவர் இன்மையால் மக்களுக்கு அலைச்சல்

நெடுங்கேணி, மார்ச் 29

வவுனியா வடக்கிலுள்ள புளியங்குளம், ஓமந்தை ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில் மருத்துவர்கள் இல்லாததால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி முதல் இந்த நிலைமை நீடிக்கின்றது. ஏதோ வகுப்புக்களுக்குச் செல்வதாகக் கூறியே இங்கு கடமையாற்றி வந்த மருத்துவர்கள் கொழும்புக்குச் சென்றிருக்கின்றனர் என்று தெரிய வருகின்றது. பதில் மருத்துவர்கள் எவரும் நியமிக்கப்படாததால் மக்களின் நிலை பரிதாபகரமாக மாறியுள்ளது.

இதனால் தமது மருத்துவ தேவைகளுக்காகப் புளியங்குளத்திலுள்ள மக்கள் நெடுங்கேணி வைத்தியசாலைக்கும், ஓமந்தை மக்கள் வவுனியா வைத்தியசாலைக்கும் செல்கின்றனர்.

> தமது மருத்துவ தேவைகளுக்காகப் புளியங்குளத்திலுள்ள மக்கள் நெடுங்கேணி வைத்தியசாலைக்கும், ஓமந்தை மக்கள் வவுனியா வைத்தியசாலைக்கும் செல்கின்றனர்.

இந்த இரு இடங்களிலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்வதால் உடனடியாகப் பதில் மருத்துவரைத் தற்காலிகமாக நியமிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க)

## ஊற்று விநாயகர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம்

வவுனியா, மார்ச் 29

முரசுமோட்டை 2 ஆம் கட்டை ஊற்று விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்த ஆலயத்தில் கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதற்கான கிரியைகள் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. எண்ணெய்க் காப்பு 8 ஆம் திகதி இடம்பெறும்.

இந்தக் கும்பாபிஷேக நிகழ்வில் மிகவும் சிறப்பு வாய்ந்த சிவாச்சாரியர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

அடியவர்கள் பூசைக்கான திரவியங்களைக் கொடுத்துதவுமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-421)

# வர்த்தக ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

மன்னார், மார்ச் 29

மன்னாரில் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைத் தவிர வேறு இடங்களை ஆக்கிரமித்திருக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் நகரசபை உறுப்பினரானஇரட்ணசிங்கம் குமரேஸ்.

மன்னார் பஸார் பகுதியில் உள்ள பல வர்த்தக நிலையங்கள் தமக்கு வியாபாரத்துக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை மீறி, மக்களின் நடை பாதையில் வியாபாரப்பொருள்களை வைத்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் பாதசாரிகளும், வாகன உரிமையாளர்களும் பெரும் பாதிப்பை அடைந்து வருவதாக தம்மிடம் முறையிடப்பட்டுள்ளனர் என்று மன்னார் நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

> பல வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் வியாபாரப் பொருள்களை அடுக்கி வைத்துள்ளனர். இதன் காரணமாகப் பாதசாரிகள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் வியாபாரப் பொருள்களை அடுக்கி வைத்துள்ளனர். இதன் காரணமாகப் பாதசாரிகள் நடந்து செல்ல முடியாதநிலைஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளினூடாகச் செல்லக்கூடிய வாகனங்கள் செல்ல முடியவில்லை. இது தொடர்பாக வர்த்தகர்களுக்கு மன்னார் நகர சபை பல தடவைகள் அறிவித்தல்களை வழங்கி இருந்தது.

எனினும் வர்த்தகர்கள் இதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை. இந்த நிலையில் மக்களின் தொடர் முறைப்பாடுகளை முன்வைத்து நீதிமன்றில் குறித்த விடயம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்படவிருப்பதாகவும் குமரேஸ் மேலும் தெரிவித்தார். (க-12)

# பழைய பஸ் தரிப்பிடத்தை பொற்பதியில் இடிக்கப் பணிப்பு

## மதுப் பிரியர்களின் அட்டகாசத்தால் அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 29

கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள பழைய பஸ்தரிப்பு கட்டடத்தினுள் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளமையால் அதனை இடித்து அகற்றுமாறு நல்லூர் பிரதேச சபையிடம் யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:

பொற்பதி வீதியில் தனியார் ஒருவரின் காணியுடன் இணைந்ததாகக் கட்டப்பட்டுள்ள பஸ்தரிப்பு நிலையம் தற்போது பாவிக்க முடியாதவாறு மிகவும் பழுதடைந்துள்ளது.

இளைஞர்கள் சிலர் பகல், இரவு பாராமல் இந்தக் பஸ் தரிப்பிடத்தை முறைகேடான இடமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மதுபோதையில் இந்தக் கட்டடத்தினுள் இருந்து அயலவர்களுக்கும், வீதியால் பயணிக்கும் மக்களுக்கும் இடையூறு செய்து வருகின்றனர்.

அத்துடன் குறித்த பஸ் தரிப்பு நிலையத்தை அண்மித்ததாக உப தபால் நிலையம் ஒன்றும் அமைந்துள்ளது.

பாழடைந்த நிலையில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் தினமும் கூடும் மதுப் பிரியர்கள் உப தபால் நிலையத்துக்குச் சேவைபெற வருபவர்களுக்கும் பெரும் தூன்பத்தைக் கொடுத்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த பொற்பதி வீதியூடாக பஸ் போக்குவரத்து சேவைகளும் இல்லாத காரணத்தால் இந்தப் பழைய பஸ் நிலையக் கட்டடத்தை இடித்து அகற்றி மதுப்பிரியர்களின் அட்டகாசத்தைத் தடுக்குமாறு அப்பகுதி மக்கள் என்னிடம் கோரியிருந்தனர்- என்று அரச அதிபர் நல்லூர் பிரதேச சபைக்குத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மேற்படி பழைய பஸ் தரிப்பிடத்தை இடித்து அகற்றுமாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நல்லூர் பிரதேச சபைத் தலைவரைக் கோரியுள்ளார். சபையின் கருத்துக் கேட்கப்படவில்லை (த-5)

# ஆடையைக் கிழித்து அடித்தார் கணவன் மீது மனைவி வழக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 29

தனது ஆடையைக் கிழித்து அடித்தார் என்று கூறி மனைவி ஒருவர் தனது கணவனுக்கு எதிராக யாழ். நீதிமன்றில் குடும்ப வன்முறை வழக்குத் தொடர்ந்துள்ளார்.

கல்வியங்காட்டைச்சேர்ந்த குடும்ப நல உத்தியோகத்தர் ஒருவரே இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்தும் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மனுதாரர் கூறியுள்ளார். மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஆஜராகியிருந்தார். எதிர் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ஜெயம்தேவி இராயப்பு ஆஜராகியிருந்தார்.


விசாரணையின் பின்னர் கணவன், மனைவி இருவரையும் குடும்ப நல ஆலோசகரைச் சந்திக்கும்படி கூறி வழக்கை எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிவான். (ம-4)

# தண்ணீர் இன்றி வாடும் சிறுதானியம்

அளவெட்டி, மார்ச் 29

அளவெட்டி, மல்லாகம், கந்தரோடை விவசாயிகள் இந்த முறை மேற்கொண்ட சிறு தானியப் பயிர்கள் தற்போது நிலவும் கடும் வெப்பத்தால் அழிந்து போகும் தறுவாயில் உள்ளன.

நீர் நிலைகளிலும் தண்ணீர் வற்றிக் காணப்படுகின்றமையால் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலைமை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மழை பெய்து பயிர் நிலங்களை நனைத்தால் தவிர பயிர்களைப் பாதுகாக்க வேறு வழி இல்லை என்றும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-36)



சுன்னாகம் வாழ்வகம் வலுவிழந்தோர் இல்லத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அண்மையில் இரண்டு கணினிகளை வழங்கியுள்ளார். நிறுவனத் தலைவர் ஆ.ரவீந்திரனிடம் கணினிகளை வழங்குகிறார். (ம)

# குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

2 கிலோ 85 கிராம் கஞ்சாவைத் தன்வசம் வைத்திருந்த நபர் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சாவைப் பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கவும் யாழ். நீதிமன்று அனுமதியளித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி யாழ். ஐந்து சந்திப் பகுதியில் வைத்து கஞ்சாவுடன் சந்தேகநபரான சிங்கராஜா ரவிச்சந்திரன் கைது செய்யப்பட்டார் என்று யாழ். பொலிஸார் முறையிட்டிருந்தனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் மீதான வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்குத் தொடுநர் சார்பில் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன்சிகேரா மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

சான்றுப் பொருள்களை கொழும்பு அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி அது பற்றிய விவரங்களைப் பெறுவதற்காக நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனடிப்படையில் சான்றுப் பொருள்களை கொழும்புக்கு அனுப்ப அனுமதியளித்தது மன்று.

சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கு விளக்கத்துக்காக எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-4)

* * *

யாழ். நகரை அண்மித்த பகுதிகளிலுள்ள வீதிகளிலும் பொது இடங்களிலும் குப்பை வீசிய 12 பேருக்கு யாழ். நீதிமன்றம் 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

அத்துடன் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 3 பேருக்கு 6ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் அனைவரும் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

தம்மீதான குற்றங்களை அவர்கள் ஒப்புக்கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)

* * *

620 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்தவருக்கு யாழ். நீதிமன்றம் 21 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

நேற்றுமுன்தினம் நாவாந்துறையைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக கஞ்சாவை வைத்திருந்தபோது யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜாவிடம் முன்னிலைப்படுத்தப்பட்டார். விசாரணையின்போது தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதம் செலுத்தத்தவறின் 6 மாதகால சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது. குற்றவாளி அபராதம் செலுத்திவிட்டுச் சென்றார். (ம-4)

# 75 மில்லியன் ரூபா நிதி கூ. சங்க விருத்திக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்டப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கென கடந்த வருடம் 'என்றிப்' திட்டத்தின் மூலம் 75 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது என யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்துக்காகவே 'என்றிப்' திட்டத்தின் மூலம் 75 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள வலிகாமம் பிரதேசம், வடமராட்சி கிழக்கு ஆகியவற்றில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டதோடு வீரசிங்கம் மண்டபமும் இந்த நிதி மூலம் புனரமைக்கப்பட்டது.

'என்றிப்' திட்டத்தின் மூலம் சமுர்த்தி திட்டத்துக்காகவும், உலக உணவு திட்டத்துக்காகவும் சிறப்புச் சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியில்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டுக்குரிய நிதியை ஜூன் மாதம் வழங்கவுள்ளது. அவற்றில் நலிவடைந்துள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவிகளையும், மீள் குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்பு பணிகளையும் மேற்கொள்ளவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-13)

# இணுவில் தோட்டக் காணியில் யானை முகம் கொண்ட உருவம்

வலி வடக்கு, மார்ச் 29

இணுவில் காரைக்கால் பகுதியில் உள்ள தோட்டக் காணியில் இருந்து யானை முகம் கொண்ட உருவம் ஒன்று நிலத்தில் புதையுண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வரலாற்றுப் புகழ்மிக்க காரைக்கால் சிவன்கோயிலில் இருந்து சுமார் முன்னூறு மீற்றர் தூரத்தில் உள்ள தோட்ட வெளியிலேயே இந்த உருவம் இருந்துள்ளது.

குறிப்பிட்ட தோட்டக் காணியில் மலசலகூடம் அமைப்பதற்காக ஆறு அடி நீளம் நான்கு அடி அகலம் கொண்ட ஒரு குழி வெட்டப்பட்டபோது இந்த உருவம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையானோர் இதனைப் பார்வையிட்டு வருகின்றனர்.



இது காரைக்கால் சிவன் கோயிலுக்குச் சொந்தமான சிலையாக இருக்கலாம் என்றும் அந்நியர் ஆட்சிக் காலத்தில் இது புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)

# விஷமியிட்ட தீயால் நாசமானது வைக்கோல்

சாவகச்சேரி, மார்ச் 29

விஷமியிட்ட தீயினால் சுமார் இரண்டு மைல் சுற்றளவில் நெல்வயல்களில் காணப்பட்ட வைக்கோல் எரிந்து நாசமாகியது.

இந்த வருடம் தொழிலாளர்களின் கூலி அதிகரிப்பால் இயந்திரத்தின் மூலம் அதிக வயல்களில் அறுவடை இடம் பெற்றது.

இயந்திர அறுவடையில் நெற்கதிர்களை மட்டும் வெட்டிவிட்டு வைக்கோல் வயல்களிலே விடப்படும். சூடு மிதிப்பு முடிவடைந்ததும் விற்பனைக்காக வைக்கோல் வயல்களிலேயே விடப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் விஷமிகளால் ஒரு வயலில் வைக்கப்பட்ட தீ பரவி எரிந்து சுமார் இரண்டு மைல் சுற்றளவில் காணப்பட்ட வைக்கோல் முழுவதும் நாசமாகியுள்ளது. (ம-9)

# எழுதுமட்டுவாழுக்கு விரைவில் மின்சாரம்

எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளுக்கு விரைவில் மின்விநியோகம் வழங்கப்படவுள்ளது. அத்துடன் எழுதுமட்டுவாழ்- நாகர்கோயில் வீதியும் புனரமைக்கப்படவுள்ளது.

இந்தப் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து 50 லட்சம் ரூபா செலவில் எழுதுமட்டுவாழ் சந்தியில் பொதுச் சந்தை ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. கொடிகாமத்தில் இயங்கிவந்த எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகத்தை சொந்த இடத்தில் மீள இயங்க நடவடிக்கை எடுத்ததுடன் அதற்குப் புதிய கட்டடம் அமைத்துக் கொடுக்கவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வரவு-செலவுத் திட்ட நிதி மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-9)

## ஐ.நா. தீர்மானத்திற்குப் பின்னரும்

# ஆணைக்குழு அறிக்கையை தூக்கிவீச முயலுகிறது அரசு

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 29

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையிலும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையைத் தூக்கி எறிவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

தொடர்ந்தும் அடம் பிடித்து வரும் அரசும் குற்றங்கள் கூறிக் கடிந்து வரும் அமைச்சர்களும் இதனைத் தவிர்த்து ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் மீது தாங்க முடியாத சுமையை ஏற்றி வைத்துவிட்டு அதனைத் திரையிட்டு மறைப்பது போல் ஜெனிவாவைக் காரணம் காட்டி வரும் அரசு, மலரவிருக்கும் சித்திரைப் புத்தாண்டு முடிவடைந்த பின்னரும் இதனையே துதி பாடும்.

அதுமட்டுமன்றி, அரசின் பலவீனமான வெளியுறவுக் கொள்கைகளினால் எமது நாடு பெரியளவில் பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும்.

ஜெனிவா என்று கூறிக்கொண்டு தொடர்ந்து துதி பாடிவரும் அரசு, நாட்டு மக்களிடமும், சர்வதேசத்தினிடமும் எதிர்ப்பையே சம்பாதித்து வருகின்றது.

இதுவரைகாலமும் ஜெனிவாவைக் காரணங்காட்டி நாட்டு மக்கள் மீது ஏற்றி வந்துள்ள பெருஞ் சுமையை இறக்கி வைப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும் இதற்கு எந்த விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள எமது தூதரகங்களையும் மூடிவிட வேண்டும் என அரசு கூறுகின்றது. இதனால் எமது ஏற்றுமதிப் பொருளாதாரத்திலும் அந்நிய செலாவணியிலும் பாதிப்பு ஏற்பட்டு நாட்டின் பொருளாதாரமே வீழ்ச்சியடையும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், அரச தரப்பிலிருந்து அது தொடர்பில் நம்பகரமான கருத்துகள் எதனையும் வெளியிடவில்லை. அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் குற்றங்குறை கூறிக்கொண்டிருக்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எமக்கு எதிராகப் பொருளாதாரத் தடைவிதிக்க முடியாது எனக் கூறியுள்ளார். இவர் உண்மையில் ஒரு வெளிவிவகார அமைச்சர்தானா என்பது எமக்குத் தெரியாது.

எமது நாட்டிற்குப் பொருளாதாரத்தடையும் விதிக்க முடியாது. ஜனாதிபதியை யுத்தக்குற்ற நீதிமன்றத்திலும் நிறுத்தவும் முடியாது. அப்படியென்றால் எதற்காக இந்தப் பிரேரணை? நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கே என்பதனைக் கருத்தில் கொண்டு அரசு செயற்படவேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் எனக் கூறியும் அரசு இவ்விடயத்தில் பின்வாங்குகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது என எமக்குத் தெரியாது.

எது எவ்வாறாயினும், மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு அமைவாக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை நடைமுறைப்படுத்தப்படாவிடில் அது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பேராபத்தை ஏற்படுத்தும் என்பதை அரசு கருத்தில் கொண்டு பொறுப்புடன் செயலாற்றவேண்டும். - என்றார். (ம)



கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் சி.பாஸ்க்கரா, குகவரதன் ஆகியோரின் அழைப்பை ஏற்று கல்லூரிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்ட கொழும்பு முதல்வர் முஸம்மிலை இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் திருமதி இராஜரட்ணம் வரவேற்கிறார். தமிழ்ச்சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன், செயலாளர் இரகுபதி பாலஸ்ரீதரன் பொருளாளர் திருச்செல்வன் ஆகியோர் முதல்வருடன் கலந்துரையாடுகின்றனர்.(ம)

# நீதிவானை அச்சுறுத்த முயன்ற வழக்கு: ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

நீதிவான் ரீ.ஜே. பிரபாகரன் சாவகச்சேரி நீதிவானாகக் கடமையாற்றிய போது, அவரது வீட்டுக்கு முன்பாக துப்பாக்கியுடன் நடமாடி அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சாள்ஸ் என அழைக்கப்படும் சூசைமுத்து அலெக்சாண்டர், றீகன் என அழைக்கப்படும் துரைராஜா இளங்கோ ஆகியோரே விடுதலை செய்யப்பட்டனர். மாணவன் கபில் நாத் படுகொலை சம்பந்தமான வழக்கில் சாள்ஸ்மீது குற்றச்சாட்டு பதிவாகி வழக்கு நடந்து வருகிறது.

நீதிவானை அச்சுறுத்தும் வகையில் நடமாடியமை தொடர்பான வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, நீதிவானின் பாதுகாவலர்களும் அயலவர்களும் தமது வாக்கு மூலங்களில் குற்றச் சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாக பொலிஸாரால் சமர்ப் பிக்கப்பட்ட மேலதிக அறிக்கைகளும் விசாரணையின் முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதாகவோ அல்லது மன்று திருப்திப்படும் விதமாகவோ அமையவில்லை. இந்த நிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட இருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது முல்லைத்தீவில் நீதிவானாகப் பணியாற்றி வரும் ரீ.ஜே. பிரபாகரன், 2010 ஆம் ஆண்டு இதேமாத காலப் பகுதியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன் திருச்செல்வம் கபில்நாத்தின் (வயது-16) படுகொலையுடன் தொடர்புபட்ட ஈ.பி.டி.பி. சந்தேக நபர்களையும் கைது செய்யும் படி பிடியாணை பிறப்பித்திருந்தார்.

அதனையடுத்து அவரது இல்லத்துக்கு முன்பாக ஈ.பி.டி.பியைச் சேர்ந்த இருவரும் துப்பாக்கியுடன் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடமாடினர் என்று யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டிருந்தது. (ம-4)

### வாகன விற்பனை வழக்கு சந்தேக நபர் விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குருநாகலைச் சேர்ந்த மாரிமுத்து பாண்டியன் என்ற நபர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து கட்டுப்பாடற்ற பகுதிக்கு வாகனங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இவர் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே சந்தேக நபர் மீதான குற்றத்தை நிரூபிக்க முடியாததனால் அவர் விடுதலை செய்யப்பட்டார். (10-4)

## ரஷ்ய செயற்கைக்கோளின் கழிவு இலங்கையில் விழலாம்

காலநிலை குறித்த ஆய்வு செய்ய சோவியத் ரஷ்யா உருவாக்கிய முதன்மைச் செயற்கைக்கோளான மெட்டோர்-1 நேற்று முன்தினம் பூமியை வந்தடைந்தது.

1960 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சோவியத் ரஷ்யா, மெட்டோர் தொடர் செயற்கைக் கோள்களை உருவாக்கியது.

1969 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் திகதி வோஸ்டாக் ரொக்கெட் மூலம் மெட்டோர்-1 செயற்கைக் கோளை ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பியது.

இந்தச் செயற்கைக்கோள், 1970 ஆம் ஆண்டில் தனது செயற்பாடுகளை நிறுத்தியது என நாசா தகவல் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இதன் கழிவுகள், இந்திய பெருங்கடல் மற்றும் இலங்கையின் தெற்கு பகுதியில் விழ வாய்ப்பு உள்ளது என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (ம)

## வடக்கு, கிழக்கு நிலவரம் குறித்து கேட்டறிந்த கனேடியக் குழுவினர்

கொழும்பு, மார்ச் 29

வடக்கு கிழக்கு மாகாணத்தின் சமகால நிலைவரங்கள் குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் கனேடியக் குழுவினர் கேட்டறிந்துள்ளனர்.

இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள கனேடியக் குழுவினருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கொழும்பிலுள்ள கனேடியத் தூதர் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது, வடக்குக் கிழக்கின் தற்போதைய நிலவரம் குறித்தும் கேட்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் கனேடியக் குழுவினருடனான சந்திப்பில் கலந்து கொண்டு பேச்சில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்களின் வாழ்வாதாரங்கள், அவர்களின் மீள்குடியமர்வுகள் மற்றும் போரின் பின்னர் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் என்பன பற்றியும் கனேடியக் குழு அக்கறை செலுத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் சாத்தியப் படக்கூடிய தீர்வு பற்றியும், ஜெனிவாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

கனேடிய அரசு தொடர்ந்தும் நிலைமைகளை அவதானித்து வருகிறது. தங்கள் இராஜதந்திரிகளினூடாகவும் நேரடியாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்தும் உறவைப் பேணுவோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தங்களுடன் தொடர்புகளைப் பேணுமாறும் கனேடியக் குழு கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சரசாலை நீரேரிப் பகுதியில் கொட்டப்படும் மலக்கழிவுகள்

### சுகாதாரச் சீர்கேடு என மக்கள் விசனம்

சாவகச்சேரி, மார்ச் 29

சரசாலை நீரேரிப் பகுதியில் வாகனங்களில் கொண்டு வரப்பட்டு மலக்கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதி அசுத்தமடைவதாக மக்கள் முறையிடுகின்றனர்.

இதனால் இப்பகுதியில் மலக்கழிவுகள் கொட்டுவதை தடை செய்யுமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

தினமும் மூன்றுக்கு மேற்பட்ட வாகனங்களில் கொண்டு வரப்படும் மலக்கழிவுகள் சரசாலை வெளியில் கண்ட இடத்திலும் கொட்டப்படுகின்றன.

இதனால் சரசாலை துன்னாலை வீதியில் செல்வோர் குறித்த தூரம் வரை மூக்கைப் பொத்திக் கொண்டே செல்லவேண்டியுள்ளது. காற்று வீசும் காலத்தில் சரசாலைப் பகுதி மக்கள் மலக்கழிவின் துர்நாற்றத்தைச் சகிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே மிருசுவிலில் அமைக்கப்பட்டுள்ள மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் அவற்றினைக் கொட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து சரசாலைப் பகுதியில் மலக்கழிவு கொட்டுவதைதடைசெய்யுமாறும் கேட்டுள்ளனர்.

இதேவேளை மலக்கழிவு ஏற்றும் வாகனங்களின் சாரதிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

மிருசுவில் சுத்திகரிப்பு நிலையத்தில் மலக்கழிவு கொட்டுவதற்கு பணம் செலுத்த வேண்டும், பணம் செலுத்த தயங்கும் அதிகாரிகள் சரசாலை வெளியில் மலக் கழிவினைக் கொட்டுமாறு கூறுகின்றனர் என்று தெரிவித்தனர்.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மலக்கழிவு கொட்டுவது தொடர்பாக பொது மக்கள் முறைப்பாடு தெரிவித்த போது, விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.


இதுவரை எந்தவொரு பயனும் கிடைக்கவில்லை. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். (ம-9)

# ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் உறவுகளைத் துண்டித்தது இஸ்ரேல்

ஜெருசலேம்,மார்ச் 29

தனக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டதால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுடனான அனைத்து உறவுகளையும் துண்டிப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

பலஸ்தீனத்தின் உரிமையை அபகரிக்கும் வகையில் அங்கு இஸ்ரேலியக் குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றனவா? என்பது குறித்து சர்வதேச அளவிலான விசாரணை நடத்த ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இஸ்ரேலியக் குடி யேற்றங்கள் அமைக்கப்படுகின்றனவா? என்பது குறித்து சர்வதேச அளவிலான விசாரணை நடத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைமையில் இஸ்லாமிய நாடுகள் கடந்த வாரம் இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்தன. அமெரிக்கா மட்டுமே இதனை எதிர்த்தது.

இதைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் சபையுடனான உறவைத் துண்டிப்பதாக இஸ்ரேல் அறிவித்திருக்கிறது.

## மீண்டும் பறவைக் காய்ச்சல்: இந்தோனேஷியாவில் 6 பேர் சாவு

இந்தோனேஷியாவில் பறவைக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இந்தப் பறவைக் காய்ச்சலுக்கு இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர் ஏன அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் உலக நாடுகளை அச்சுறுத்திய பறவைக் காய்ச்சல் மீண் டும் தலைகாட்டத் தொடங்கியுள்ளது.

இந்தோனேஷியாவில் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி காய்ச்சலுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட 17 வயது தொழிலாளி 5 நாள்கள் கழித்து மார்ச் 9ஆம் திகதி உயிரிழந்தார்.

ஆய்வகப் பரிசோதனையில் அவருக்கு பறவைக் காய்ச்சல் இருந்தமை உறுதிப் படுத்தப்பட்டது என்று சுகாதார அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி இந்தோனேஷியாவில் இந்த ஆண்டில் இதுவரை பறவைக் காய்ச்சலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 6ஆக உயர்ந்துள்ளது. இதேவேளை 2003 ஆம் ஆண்டு மட்டும் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கி உலகம் முழுவதும் 155 பேர் உயிரிழந்தனர் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித் துள்ளது.

பறவைகளைத்தாக்கும் வைரஸ் மனிதர்களுக்குக் கடத்தப்படுவதன் மூலம் பறவைக் காய்ச்சல் ஏற்படுகிறது. சாதாரண காய்ச்சலாக தொடங்கி தொண்டையில் புண், உடல் வலி, இருமல், கண் நோய் போன்றவற்றை ஏற் படுத்தும் இது.இறுதியில் மனித உயிர்களை பறிக்கின்றது.

## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, மார்ச் 29

ஜப்பானில் நேற்று மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டது. வடகிழக்கு ஜப்பானில் உள்ள ஹோன்சு தீவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் தலைநகர் டோக்கியோவில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. அதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிவீதிகளில் ஓடினர்.


இந்த நிலநடுக்கம் 6.3 ரிச்டர் அளவில் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. நில நடுக்கம் காரணமாக வழக்கத்தை விட மிகப்பெரிய அளவில் கடல் அலைகள் எழுந்தன. எனவே, சுனாமி ஏற்படலாம் என மக்கள் அச்சமடைந்த னர்.

ஆனால் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை.

ஜப்பானில் கடந்த ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம், சுனாமியை அடுத்து புகுஷிமா அணு உலை வெடித்து கதிர் வீச்சு பரவியது. அதைத் தொடர்ந்து அங்கு அடிக்கடி நில நடுக்கங்கள் மற்றும் அதிர்வுகள் ஏற்பட்டு வருகின்றன.

மேலும் நில நடுக்கம் ஏற்பட்ட வடகிழக்கு பகுதியில் அதிவேகமாக இயங்கும் புல்லட் ரெயில்கள் வழக்கம் போல் இயங்கின.

ரெயில் சேவையில் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. சேத விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.




பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ட் 3 நாள் சுற்றுப்பயணமாக கியூபாவுக்குச் சென்றுள்ளார். 14 வருடங்களுக்குப் பின் முதன்முறையாகப் பாப்பரசர் ஒருவர் அந்தநாட்டுக்கு சுற்றுப்பயணம் செய்கிறார். மெக்ஸிகோவிலிருந்து கியூபா சென்ற பாப்பரசரை, கியூபா அதிபர் ராவுல் காஸ்ட்ரோ வரவேற்றார். அமைதி மற்றும் சுதந்திரத்திற்கான பிரார்த்தனை நிகழ்வுகளில் அவர் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதன்பின் சாண்டிகோவில் உள்ள புரட்சி சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்பாக உரைநிகழ்த்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அணு ஆயுத தீவிரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட உலக நாடுகள் இணக்கம்

அணு ஆயுத தீவிரவாதத்துக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவும் ஒன்றிணைந்து செயற்படவும் சர்வதேச நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

தென்கொரியாவில் கடந்த இரு தினங்கள் நடை பெற்ற அணுசக்திப் பாதுகாப்பு மாநாட்டிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

53 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற இந்த மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில், சர்வதேச பாதுகாப்புக்கு அணு ஆயுத தீவிரவாதம் கடும் சவாலாக நீடித்து வருகி றது. இதனைத் தோற்கடிக்க சர்வதேச நாடுகளுக்கு இடையில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் ஒத்துழைப்பு ஏற்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் உரையாற்றுகையில் ஒபாமா,'' சர்வதேச சமுதாயத்துக்கு அணு ஆயுத தீவிரவாதம் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. அந்த நாடுகளின் பாதுகாப்பு இந்த மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகளைப் பொறுத்தே அமையும்.

அணு ஆயுதங்கள் தீவிரவாதிகளின் கையில் கிடைக்காத வண்ணம் அவற்றைப் பாதுகாப்பதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம்'' எனக் கூறினார்.

இந்த மாநாட்டுக்குப் பின்னர் உலக மக்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்றும் ஒபாமா உறுதியளித்துள்ளார்.

இந்த விடயத்தில் கூட்டுச் செயற்பாடு அவசியம் என சீன ஜனாதிபதி ஜின்டாவோ வலியுறுத்தினார்.

## "ஆழ்கடலில் புதிய கிரகம்"

### ஜேம்ஸ் கெமரூனின் அனுபவம்



ஒஸ்கார் இயக்குநர் ஜேம்ஸ் கெமரூன் தனது ஆழ்கடல்சாகசப்பயணத்தை வெற்றிகரமாக முடித்துத் திரும்பியுள்ளார்.

''இன்னுமொரு புதிய கிரகத்துக்குச் சென்று வந்த உணர்வு ஏற்பட்டுள்ளது'' என்று அவர் தனது அனுபவத்தை விவரித்துள்ளார்.

எவெரெஸ்ட் சிகரத்தின் உயரத்தைவிட அதிகமாக, சுமார் 10,900 மீற்றர் ஆழத்தை கொண்ட கடற்பகுதி பசுபிக் சமுத்திரத்தில் ஜப்பானுக்கு அருகில் உள்ளது.

இதுவரை இருவர் மாத்திரமே இதனூடாக முடிந்தளவு கடல் ஆழத்துக்குச் சென்று திரும்பியிருந்தனர். இந்த நிலையில் உலகின் மையப்பகுதிக்குச்-செல்ல வேண்டும் என்பது தனது சிறு வயதுக் கனவு எனக் கூறிவந்த ஜேம்ஸ் கெமரூன், தனது குழுவினருடன் இணைந்து உருவாக்கிய நீர்மூழ்கிக் கப்பலில் சென்று அந்தக் கனவை தற்போது சாத்தியமாக்கியுள்ளார்.

பல ஒத்திகை முயற்சிகளின் பின்னர், இச்சாகச பயணத்தை ஆரம்பித்தார். ஆழத்தைத் தொட்டு மீண்டும் திரும்பிய அவர், ''இது முற்றிலும் வேற்றுக் கிரகம் சென்று திரும்பியதைப் போன்றது. சூரிய வெளிச்சமோ, வெப்பமோ இந்த ஆழ்கடலுக்குள் ஊடுருவவில்லை. காரிருளும் கடும் குளிரும் எங்கும் சூழ்ந்திருந்தன'' - என்று தனது அனுபவத்தை விவரிக்கிறார்.

இந்தப் பயணம் ஒரு தொடக்கம் மட்டுமே எனக் கூறும் கெமரூன், பூமியின் மையப்புள்ளி வரையிலான பல ஆய்வுகளுக்கு இந்தப் பயணம் நிச்சயம் பல பாதைகளைத் திறந்துவிடும்- என்கிறார்.

## தூக்குத் தண்டனைகள் அதிகரிப்பு

### 2011 இல் 676 பேருக்கு நிறைவேற்றம்; அமெரிக்காவுக்கு நான்காவது இடம்

உலகில் தூக்குத் தண்டனை நிறைவேற்றம் அதிகரித்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளிலேயே அதிக பட்சமான தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

மன்னிப்புச் சபையின் அறிக்கைப்படி சர்வதேச அளவில் 2011 ஆம் ஆண்டு 20 நாடுகளில் குறைந்தது 676 பேர் தூக்கிலிடப் பட்டனர்.

2011ஆம் ஆண்டு சர்வதேச அளவில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது தொடர்பான மன்னிப்புச் சபையின் ஆண்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஈரான், ஈராக் மற்றும் சவூதி அரேபிய நாடுகளால்தான் உலகில் அதிக தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப் பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மன்னிப்புச் சபையின் அறிக்கைப்படி 2011 ஆம் ஆண்டு 20 நாடுகளில் குறைந்தது 676 பேர் தண்டனை பெற்றுள்ளனர்.

2010 ஆம் ஆண்டில் 23 நாடுகளில் 527 தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனினும் சீனா தனது தண்டனை தொடர்பான விவரத்தை ரகசியமாக வைத்திருப்பதால் இதில் அந்தத் தரவுகள் சேர்க்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

ஈரானில் அதிக பட்சமாக 360 பேர் கடந்த ஆண்டில் தண்ட னைக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் பலர் போதைத் தடுப்பு சட்டத்தின் கீழே தண்டனை பெற்றுள்ளனர். சவூதி அரேபியாவில் 82 பேரும் ஈராக்கில் 68 பேரும் கடந்த ஆண்டில் தூக்கில் தொங்கவிடப்பட்டுள்ளனர்.

இந்த வரிசையில் நான்காவது இடத்தில் அமெரிக்கா உள்ளது. இதற்கு மன்னிப்புச் சபை கண்டனத்தை வெளியிட்டுள்ளது. அமெரிக்கா மாத்திரமே கடந்த ஆண்டில் தூக்குத் தண்டனை நிறைவேற்றிய ஒரேயொரு மேற்கத்தைய ஜனநாயக நாடாகும். இது வெட்கத்திற்குரியது என மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு அமெரிக்கா 43 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'ஷம்பூ' விளம்பரத்தில் ஹிட்லர்

### யூதர்கள் கண்டனம்




ஜேர்மானிய சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லரைவைத்து துருக்கி ஷம்பூ நிறுவனம் ஒன்று விளம்பரப் படம் தயாரித்துள்ளது. இந்த விளம்பரத்துக்கு யூதர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த விளம்பரப் படத்தில், பெண்கள் பயன்படுத்தும் ஷம்பூவை ஆண்கள் பயன்படுத்தக் கூடாது. இந்த நிறுவனத்தின் ஷம்பூவைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று ஹிட்லர் மக்களுக்கு கட்டளையிடுவது போல் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

கறுப்பு வெள்ளையில் தயாரிக்கப்பட்ட இந்த விளம்பத்தக்கு யூத அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து யூத அமைப்புகள் கூறியதாவது:- ''லட்சக் கணக்கான யூதர்களைக் கொன்று குவித்த ஹிட்லரை மையப்படுத்தி விளம்பரம் தயாரித்திருப்பது மிகவும் அபத்தமானது. விளம்பர நிறுவனம் இந்தப் படத்தை திரும்ப பெறவேண்டும் ''என்று யீத அமைப்புக்கள் கேட்டுக்கொண்டுள்ளன.

''இந்த விளம்பரம் நகைச் சுவை உணர்வுடன் தயாரிக்கப்பட்டது. அதற்கு எந்தவொரு உள்நோக்கமும் இல்லை'' என உரிய விளம்பர நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சண்டையை நிறுத்த சிரிய அரசு இணக்கம்

கொபி அனானின் திட் டத்தை சிரிய ஜனாதிபதி ஏற் றுக்கொண்டார் என்று நேற்று அனானின் செய்தித் தொடர்பாளர் அறிவித்தார்.

வொஷிங்டன்,மார்ச்29

சிரியாவில் உடனடி சண்டை நிறுத்தம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக் கான தனது ஆறு அம்ச பரிந்துரைகளுக்கு, அந்த நாட்டு ஜனாதிபதி பஷர் அல் அசாத் ஒப்புதல் அளித்துள் ளார் என்று ஐ.நா- அரபு லீக் சிறப்புப் பிரதிநிதி கொபி அனானின் செய்தித் தொடர் பாளர் அறிவித்தார்.

சிரியாவில் அமைதியை நிலைநாட்ட ஐ.நாவும், அரபு லீக்கும் தங்கள் சிறப்புப் பிரதிநிதியாக, ஐ.நா. முன் னாள் பொதுச் செயலர் கொபி அனானை நியமித்தன. ஆனால், சிரிய ஜனாதிபதி அவரது திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அனானின் பயணம் தோல்வி யில் முடிந்தது. எனினும் இதுகுறித்து பேச்சு நடத்த ஐவர் அடங்கிய குழுவை அனான் சிரியாவுக்கு அனுப்பி வைத்தார்.

இந்த நிலையிலேயே கொபி அனானின் திட் டத்தை சிரிய ஜனாதிபதி ஏற் றுக்கொண்டார் என்று நேற்று அனானின் செய்தித் தொடர் பாளர் அறிவித்தார்.


இதேவேளை இருநாள் கள் பயணமாக நேற்றுமுன் தினம், சீனத் தலைநகர் சென்ற கொபி அனான், அங்கு பிரதமர் வென் ஜியாபோவு டன் இதுகுறித்துப் பேசினார்.

சிரியாவில் அந்நிய நாடு களின் தலையீடு கூடாது என, இதுவரை மறுத்து வந்த ரஷ்யாவும், சீனாவும் கொபி அனானின் பரிந்துரைக ளுக்கு ஆதரவு அளித்துள் ளன. இது குறித்து பேட்டிய



ளித்த சீனப் பிரதமர் வென் ஜியா போ,''சிரிய விவகாரம் விரைவில், அமைதியான முறையில் பொருத்தமான வழியில் தீர்வை எட்டும் என நம்புகிறேன்''- என்றார். கொபி அனானின் ஆறு அம்சப் பரிந்துரைகளை ஐ.நா. பாதுகாப்புக் குழு ஏற்றுக் கொண்டதுடன் சீனாவும், ரஷ்யாவும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (ந)

## வடகொரியா விளக்கம்



கிம் 2–சங்கின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு விண்கலம் ஒன்றை எதிர்வரும் ஏப்ரலில் செலுத்த இருப்பதாக முதலில் தெரிவித்தது.

வானிலை ஆய்வு நோக் கத்துக்காகவே விண்கலம் ஏவுவதற்குத் திட்டமிட்டு இருப்பதாக வடகொரியா திடீர் விளக்கம் அளித்துள்ளது.

வடகொரியாவின் மறைந்த தலைவர் கிம் 2-சங்கின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது நினை வாக, விண்கலம் ஒன்றை எதிர் வரும் ஏப்ரல் மாதம் செலுத்த இருப்பதாக வடகொரியா முதலில் தெரிவித்தது.

அணு ஆயுத ஏவுகணை சோதனைக்காகவே வட கொரியா இதனை நடத்துகி றது என அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகள், குற்றம்சாட்டி கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் வட கொரியா சார்பில் தற்போது திடீர் விளக்கம் அளிக்கப்பட் டுள்ளது. அதில் ''வானிலை ஆய்வு நோக்கத்துக்காகவே விண்கலத்தை அனுப்பத் திட்டமிட்டு இருக்கிறோம். விவசாயம் மற்றும் பொருளா தார வளர்ச்சிக்கு வானிலை ஆய்வு மிக அவசியம்'' என்று தெரிவித்துள்ளது. (ந)

## பின்லேடனின் மனைவியை விடுவிக்க ஏமன் வேண்டுகோள்

சனா,மார்ச் 29

பாகிஸ்தான் தடுத்து வைத்துள்ள பின்லேடனின் மனைவிகளில் ஒருவரை விடுவிக்குமாறு ஏமன் வேண்டுகோள் விடுத்துள் ளது.

''ஏமனைப் பிறப்பிடமா கக் கொண்ட அமல் அல் சதா என்ற பின்லேடனின் மனைவியையும் அவரது நான்கு பிள்ளைகளையும் விடுவித்து தமது நாட்டுக்கு அனுப்ப வேண்டும். தந்தை செய்த குற்றத் துக்காகப் பிள்ளைகளைத் தண்டிக்கக் கூடாது. அவர்கள் மீது எந் தக் குற்றச்சாட்டுகளும் இல்லை.

அமல் 2000 ஆம் ஆண் டில் சட்டரீதியாகவே பாகிஸ் தான் சென்றார்''- என்று ஏமன் வெளிவிவகார அமைச் சர் அபுபக்கர் அல் குர்பி தெரிவித்துள்ளார். (ந)

## லிபியாவில் மோதல்; 20 பேர் சாவு

மும்மர் கடாபி அரசுக்கு எதிராகப் போராடிய கிளர்ச் சிப்படையினருக்கும் பழங்குடி மக்களுக்கும் இடையில் ஏற் பட்டுள்ள மோதலில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். லிபி யாவின் நான்காவது மிகப்பெரிய நகரான சபா விலேயே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. கிளர்ச்சிப் படை யினரும் , டைபு பழங்குடி இனத்தவர்களுமே மோதலில் ஈடு பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான சண்டை தொடர்ந்து நீடித்து வருகிறது. சபா விமான நிலையப் பகுதி யில் ஏற்பட்ட மோதலில் ஒரு விமானம் தாக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. லிபியாவில் பழங்குடி மக்கள் இன் னமும் கடாபிக்கு ஆதரவாக உள்ளனர். (ந)

## கராச்சியில் வன்முறை;10 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் கராச்சி நகரில் ஏற்பட்ட வன்முறை யில் 10 பேர் கொல்லப்பட்ட னர். அரச வாகனங்கள் உட் பட 50க்கும் மேற்பட்ட வாக னங்கள் தீக்கிரையாகின.

பாகிஸ்தானின் முத் தாகிதா குவாமி இயக்கம் எனப்படும் கட்சியின் உள் ளூர்த் தலைவர் மன்சூர் முக்தார் என்பவர் தனது வீட்டு வளாகத்திலேயே சில மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனால் ஆத்திரம டைந்த அவரது ஆதரவாளர்கள் திடீர் வன் முறையில் இறங்கினர். கராச்சியின் முக்கிய நகரங்க ளில் இந்த வன்முறைச் சம்ப வங்கள் நடந்தன என்று



உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. (ந)

## அந்தாட்டிக் கடல் மர்மமாக வற்றுகின்றது

அந்தாட்டிக்காவின் ஆழ் கடல் நீர் மர்மமான முறை யில் வற்றி வருகிறது

இது அமெரிக்காவின் மிசுசிப்பி ஆற்றின் தண் ணீரை விட 50 மடங்குகளாகும். இந்த கடல் நீர் வற்று வதற்கான காரணம் மர்மமாக உள்ளது. இது குறித்து ஆய்வாளர்கள் தீவிர ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்ற னர்.

உலகில் உள்ள ஆழ்கடல் களில் இருந்து வெப்பத்தின் மூலம் வெளியேறும் தண் ணீர் பூமியின் மேற்பரப்பை சென்றடைந்து மேகமாக மாறி மழையாகப் பொழிகிறது. இதன் மூலம் பூமியின் பருவநிலை மாற்றம் சமநிலை படுத்தப்படுகிறது.

பனிக்கட்டிகளாலான அந்தாட்டிக்கா கடலின் தென்பகுதியில் உள்ள ஆழ்கடல் நீரும் வற்றி வருகிறது.

கடந்த 50 ஆண்டுகளில் விநாடிக்கு 8 மில்லியன் மெட்ரிக் தொன் தண்ணீர் வற்றி மாயமானதாக கடல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகிலேயே மிகவும் குளிர்ந்த நீரைக் கொண் டுள்ள கடல் அந்தாட்டிக்கா. இந்தக் கடலின் நீர் வற்றிப் போவதற்கு அதிகரிக்கும் புவி வெப்பமும், ஓசோனில் விழுந்த ஓட் டையும்தான் காரணம் எனப் புவியியல் ஆர் வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர் .

(ந)


# N.C.A கல்வி நிறுவனம்
## 1 ஆம் கட்டை - பருத்தித்துறை

**A/L 2014** கலை வர்த்தகம் விஞ்ஞானம்

ஆங்கிலம் / தமிழ் மொழிமூலம்
இரு மொழிகளிலும் ஆரம்பம்
ஆரம்பம்: 03.04.2012


சிவமயம்

## 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 01.09.1939 — மறைவு 28.02.2012

அமரர்
### கணபதிப்பிள்ளை செல்வராஜா
(பெயின்ரர்- செல்வராஜா)



அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்திய கிரியையும் இன்று (29.03.2012) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''கலா பவனம்''
14, மாட்டன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

மருமக்கள், பேரமக்கள், பேரப்பிள்ளைகள்.

(16094) (6,7,10)


**சிமெந்துக் கல் விற்பனைக்கு**

சிமெந்துக் கல் விற்பனைக்கு உண்டு. கல் ஒன்றின் விலை 27/= (கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும். இவற்றுக் கான கட்டணம் அறவிடப்படும்)

தொடர்புக்கு:- 0778162892


**நாமகள் சனசமூக நிலையம் தெல்லிப்பழை.**

**26-03-2012 அன்று நடைபெற்ற அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

1ஆம் பரிசு - 2015
2ஆம் பரிசு - 1452
3ஆம் பரிசு - 1752

**ஆறுதல் பரிசுகள்:-**
1411,313,1211,1950,706,403,446, 2608,698,812

**குறிப்பு:** பரிசிற்குரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் மாலை 3.00 மணிக்கு பின்னர் மேற்படி நிலையத் தில் 03.04.2012 இற்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

(16139) (6,9,10) நிர்வாகம்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நாகேஸ்வரி

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகேஸ்வரி (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், கலைவாணி, கலைச்செல்வன், கலைவாணன், கலைரங்கன், கலைமதி, கலைரூபி ஆகியோரின் அன்புத்தாயும், சிவசுப்பிரமணியம், விஜயலக்ஸ்மி, சுதா, நளினி, முரளிதரன், ஜீவாதரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், இரத்தினசிங்கம், தங்கேஸ்வரி, சிறிஸ்கந்தராஜா, வரதராஜா, காலஞ்சென்ற ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற இராசையா, நாகராசா மற்றும் சோமசுந்தரம், கனகசபை, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 316, பழைய கண்டி வீதி,
இராமநாதபுரம்

தகவல்
குடும்பத்தினர்

(16135) (45 -6 -9)

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் விசுவநாதன்



யாழ். அரியாலையைப் பிறப்பிடமாக வும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் விசுவநாதன் (21.03.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற லிண்டாவின் கணவரும், காலஞ்சென்ற சுயாழன் (கொழும்பு) மற்றும் தேனாழி திருச்செல்வம் (கனடா), மாயந்தன் (கொழும்பு), கவினாழி விஜேந்திரராஜா (சுவிஸ்), ஜாலங்கன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பானுமதி துரைச்சாமி (ஆசிரியை) மற்றும் சந்திரா சோதிநாதன் (லண்டன்), குகநாதன் (ஆசிரியர், லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.03.2012 வெள்ளிக்கிழமை கொழும்பு , கரவெலப்பிட்டிய மயானத்தில் நடைபெற்றது.

அன்னாரின் கிரிகைளுக்கு வருகை தந்தோருக்கும், ஆறுதல் மொழி கூறியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(16142) (45 -6 -9)

# கூடங்குளப் பட்டினிப் போர் நிறைவு

## பேச்சில் எட்டப்பட்டது உடன்பாடு



கூடங்குளம் போராட்டக் குழுவினருக்கும் தமிழக அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சில் உடன்பாடு ஏற்பட்டதன் காரணமாக, ஒன்பது தினங்களாக பட்டினிப் போராட்டம் நடத்தி வந்த உதயகுமார் உட்பட அனைத்துப் போராட்டக்காரர்களும் தமது போராட்டத்தை கைவிட்டனர்.

நெல்லை மாவட்ட ஆட்சியாளர் செல்வராஜ், உள்ளிட்ட அரச அதி காரிகள் கொண்ட குழுவினருக்கும், மதுரை மாவட்ட ஆயர் பீட்டர் பெர்ணாண்டோ, அரிமாவளவன், ஜெயசீலன், சுந்தரி, சாரதி உள்ளிட்ட பத்துக்கும் அதிகமான போராட்டக் குழு தரப்பினருக்குமிடையில், நேற்றுமுன்தினம் பிற்பகல், ராதாபுரம் பரமேஸ்வரம் பிரதேச அலுவலகத்தில் பேச்சு நடைபெற்றது.

இந்தப்பேச்சின் போது, கனிசமான உடன்பாடுகள் காணப்பட்டதாகவும், ஆயினும் பேச்சின்போது முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் அணு உலை தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்றும் குறிப்பிட்ட போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள், ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவு செய்வதாகவும், அணு உலை தொடர்பான அறவழிப் போராட்டங்கள் தொடரும் என்றும் போராட்டக் குழுவினர் தெரிவித்தனர்.

நடைபெற்ற பேச்சின்போது முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றான 144 தடைஉத்தரவு வாபஸ் பெற வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், அணுமின் நிலையப் பகுதிகளில் மட்டும் அது நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை போராட்டக் குழுவினர் தமது போராட்டங்களை அணுமின்நிலையப் பகுதியில் மேற்கொள்ளமாட்டார்கள் என்று உடன்பாடு தெரிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறான உடன்பாடுகள் காணப்பட்ட நிலையில் பட்டினிப்போர் மேற்கொண்ட அனைவருக்கும் நேற்று முன்தினம் மாலை பழச்சாறு கொடுத்து போராட்டம் முடித்து வைக்கப்பட்டது.

இது குறித்து உதயகுமார் தெரிவித்ததாவது:-

''தமிழக அரசுடனான பேச்சில் சுமூக முடிவு ஏற்பட்டதால் பட்டினிப் போர் போராட்டத்தை முடித்துக் கொள்கிறோம். சாகும்வரை பட்டினிப் போர் போராட்டத்தை மட்டுமே கைவிட்டுள்ளோம். கைது செய்யப்பட்ட போராட்டக் குழு வினரை விடுதலை செயயும்வரை, அவர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெறும் வரை இடிந்தகரையில் நடக்கும் போராட்டம் தொடரும்.

இது தவிர கூடங்குளம் அணு உலைக்கு எதிரான அறப்போராட்டம் பல்வேறு முறைகளில் தொடரும். சிறையில் அடைக்கப்பட்டுள்ள போராட்டக்காரர்கள் 200 பேரை விடுவிக்க சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே, விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். இடிந்தகரையில் பட்டினிப் போர் தவிர வழிகளில் போராட்டம் தொடர்ந்து நடக்கும்'' - என்றார்.

# அந்திஸ் மலைத் தொடரில் ஏறி இந்தியர் சாதனை

ஆந்திர மாநிலம் நெல்லூரை சேர்ந்த மல்லி மஸ்தான் பாபு, உலகின் நீண்ட மலைத்தொடரான அந்திஸ் மலைத்தொடரில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

இதன்மூலம், அந்திஸ் மலைத் தொடரின் உச்சியைத் தொட்ட முதல் இந்தியர் என்ற பெருமையை மல்லி மஸ்தான் பாபு பெற்றுள்ளார்.


விவசாய குடும்பத்தைச் சேர்ந்த மல்லி மஸ்தான் பாபு, இமாலய மலைத்தொடரான 6,962 அடி உயர அக்கோன்காகுவா மலைச் சிகரத்தை 3 முறை கடந்துள்ளார்.

இதையடுத்து பெரு நாட்டிலுள்ள ஹூயாஸ்கரன் மலைத் தொடர் (6,768 மீற்றர்), பொலிவியா நாட்டிலுள்ள சஜாமா மலைத்தொடர் (6,542 மீற்றர்), ஈக்வடார் நாட்டி லுள்ள சிம்பரோஜோ மலைத்தொடர் (6,310 மீற்றர்) மற்றும் சிலி நாட்டிலுள்ள ஓஜோஸ் டெல் சலாடோ மலைத்தொடர் (6,800 மீற்றர்) உள்ளிட்ட மலைத் தொடர்களில் மல்லி ஏறி சாதனை படைத்துள்ளார்.

இதுமட்டுமல்லாது, மஸ்தான் பாபு, 172 நாள்களில் 7 மலை உச்சிகளை அடைந்ததன் மூலம் கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்.

## ராஜீவ் காந்தி கொலை:

# தூக்கை ரத்துச் செய்யும் வழக்கு ஒத்திவைப்பு



பேரறிவாளன் சாந்தன் முருகன்

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனையை ரத்து செய்யக் கோரும் வழக்கு நாளை வெள்ளிக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்களை இந்திய ஜனாதிபதி நிராகரித்தார். எனவே இதை எதிர்த்து 3 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் நாகப்பன், சத்திய நாராயணன் ஆகியோர் விசாரணையின் பின் 3 பேரையும் தூக்கிலிட இடைக்காலத் தடை விதித்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது மத்திய அரச சட்டத்தரணி முன்னிலையாகி கொலை வழக்குகளில் தூக்குத் தண்டனை பெற்ற முல்லர், அசாமைச் சேர்ந்த பாஸ் ஆகியோரது கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதை எதிர்த்து அவர் கள் தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசார ணைக்கு வந்துள்ளது. அந்த நிலைமையைப் பார்த்து இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம் - என்றார்.

அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் 3 பேரின் தூக்குத் தண்டனை ரத்து வழக்கை நாளை வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்தனர்.

இதற்கிடையே, முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள்தண்டனை பெற்று வேலூர் மத்திய சிறையில் தண்டனை அனுபவித்து வந்த ராபர்ட் பயாஸ், ஜெயகுமார் ஆகியோர் நேற்றுமுன்தினம் காலை வேலூர் சிறையில் இருந்து திடீரென சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டனர்.

பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் ராபர்ட் பயாஸ், ஜெயகுமாரை சென்னைக்கு அழைத்து வந்தனர். சிறை நிர்வாக வசதிக்காக அவர்கள் சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டதாக சிறைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)



இந்தியாவுக்கு வந்துள்ள ஆஸ்திரேலியாவின் உயர் ஆணையர் பீட்டர் வர்கீஸ், சென்னையில் நடைபெற்ற முக்கிய கூட்டத்தில் பங்கேற்க முன்னர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து மலர் கொத்தை அளித்தார்.

## கட்சிப் பத்திரிகைகளுக்கு தடை விதித்த மம்தா

மேற்குவங்க மாநிலத்தில் உள்ள அரச நூலகங்களில் கட்சி சார்பான மற்றும் அனைத்து ஆங்கிலப் பத்திரிகைகளையும் வைக்க தடை விதித்து அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உத்தரவிட்டுள்ளார்.

மேற்கு வங்கத்தில் தற்போது அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் நூலகங்கள் என்று மொத்தம் 2,842 நூலகங்கள் சேவையாற்றுகின்றன.

இந்த நிலையில் கடந்த மார்ச் 14 ஆம் திகதி அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், பொதுமக்கள் நலன் கருதி இனி நூலகங்களில் கட்சிப் பத்திரிகைகள், அவை தேசிய பத்திரிகையாகவோ, மாநில பத்திரிகையாகவோ இருந்தாலும் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இனி ஆங்கிலப் பத்திரிகைகள் வாசகர்களுக்குக் கிடைக்காது என்று தெரிவிக்கப்பட்டிருந்து. அதன்படி மாநிலத்தில் வெளியாகும் அனைத்து ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அனுமதியில்லை. வங்க மொழி, இந்தி உட்பட 8 பத்திரிகைகள் மட்டுமே நூலகங்களில் வைக்கப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

## வீடு திரும்பினார் நடிகை மனோரமா



முழங்கால் வலி காரணமாக சென்னை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நடிகை மனோரமா, நேற்று முன்தினம் வீடு திரும்பினார்.

நடிகை மனோரமாவுக்கு ஏற்கனவே முழங்கால் வலி காரணமாக, அவருடைய 2 கால்களிலும் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

பின்னர் அவர் காள ஹஸ்திக்கு சென்ற போது, தங்கும் விடுதி குளியலறையில் தவறி விழுந்தார். அதில், அவருடைய தலையில் அடிபட்டது. இதற்காக, அவருடைய தலையில் அறுவைச் சிகிச்சை நடை பெற்றது.

அறுவைச் சிகிச்சைக் குப் பின்பு, அவர் குணம் அடைந்தார். இந்நிலையில், அவருக்கு மீண்டும் முழங்கால் வலி ஏற்பட்டது. சிகிச்சைக்காக மனோரமா சென்னையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# ராமர் பால விவகாரம்: அரசுக்குக் காலக்கெடு

## ஒருநாள் மட்டுமே

டில்லி, மார்ச்.29

ராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிப்பது பற்றிய தனது நிலையை மத்திய அரசு தெளிவாக தெரிவிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஒருநாள் அவகாசம் விதித்துள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சாமி உள்ளிட்டோர் வழக்குத் தொடர்ந்துள்ளனர். இந்த வழக்கு நீதிபதி எச்.எல். தத்தா தலைமையிலான குழு முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

மத்திய அரசு சார்பில் கூடுதல் சட்டமா அதிபர் ஹரேன் ராவல் முன்னிலையாகி ராமர் பாலம் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்படுமா என்று கேட்டார். அதற்கு நீதிபதிகள், குறிப்பிட்ட இடத்தை தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டுமானால் அதற்கு மத்திய அமைச்சரவைச் செயலரின் அனுமதியைப் பெற வேண்டும். அதேபோல், சேது கால்வாய்த் திட்டம் தொடர்பாக ஆய்வு செய்து வரும் பச்செரி குழுவின் அறிக்கையை இறுதி செய்யவும் கால அவகாசம் தேவைப்படுகிறது. அவசர கதியில் ஆய்வுகளை நடத்த இயலாது. எனவே இந்த விடயம் குறித்து மத்திய அரசு ஒரு நாளுக்குள் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

குறிப்பிட்ட இடத்தை தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டுமானால் அதற்கு மத்திய அமைச்சரவைச் செயலரின் அனுமதியைப் பெறவேண்டும்.

# 'ஜெ' உறவை இன்னும் விரும்பும் சசி

சட்டபேரவை அமைச்சர் பதவியில் இருக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் இருந்ததில்லை, முதல்வர் ஜெயலலிதாவுக்கு உண்மையான தங்கையாக இருக்கவே விரும்புகிறேன் என்று சசிகலா தெரிவித்தார்.

ஜெயலலிதாவுடனான உறவு முறிவுக்குப் பின்னர் முதன் முறையாக அவர் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

நானும் முதல்வர் ஜெயலலிதாவும் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 24 ஆண்டுகளாக பழகி வந்துள்ளோம். 1988 ஆம் ஆண்டு முதல் போயஸ் தோட்டத்தில் வசித்து வந்தேன். ஜெயலலிதாவின் பணிச்சுமையைக் குறைக்க விரும்பினேன். அவருக் குப் பணியாற்றும் நோக்கம் தவிர உள் நோக்கம் எதுவும் இல்லை. அவரும் என்னைத் தங்கையாக ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து அவருக்குத் துணையாகப் பணியாற்றி வந்தேன். ஆனால் போயஸ் தோட்டத்தில் இருக்கும்போது எனது உறவினர்கள், நண்பர்கள் எங்களின் பெயரை தவறாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பது ஜெயலலிதா நடவடிக்கை எடுத்த பின்னரே தெரியவந்தது: உறவினர்கள் பல குழப்பங்களை உருவாக்கினர்.

ஜெயலலிதாவுக்கு எதிராக சதி செய்தார்கள் என்ற செய்தி எனக்கு அதிர்ச்சியும், வேதனையும் அளித்தது. அவருக்கு நான் கனவிலும் துரோகம் நினைத்தது இல்லை. ஜெயலலிதாவுக்கு துரோகம் செய்தவர்கள் எனக்கு வேண்டாதவர்கள். அவருக்கு எதிராகத் துரோகம் இழைத்தவர்களை மன்னிக்க முடியாது. அவர்களின் உறவைத் துண்டித்து விட்டேன். சட்டபேரவை அமைச்சர் பதவியில் இருக்க வேண்டும், பொது வாழ்வில் பங்கேற்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. ஜெயலலிதாவுக்கு உண்மையான தங்கையாகவே இருக்க விரும்புகிறேன். ஏற்கனவே அவருக்கு எனது வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டேன். இனியும் எனக்கென வாழாமல் முதல்வருக்கு உதவியாகவே இருக்கவே விரும்புகிறேன் - என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(வ)

## மேரிகொல்வின்; விடியலின் புன்னகை



நாளையை
உலுக்கப்போகும்
செய்திகளுக்காய்
நீ தகித்திருந்தாய்
இரவுகள் தோறும்...!
நேற்றையை உலுக்கிய
செய்தியாய்
உன் மரணம்!

ரத்த நிலங்களையும்
யுத்த களங்களையும் நீ
தேடிச் சென்றாய்
வற்றாத கண்ணீரைச்
சுமந்து நின்ற
மக்களுக்காய்...!

அவர்களின் திரித்த
உளறல்களை
நீ தெரிந்தே இருந்தாய்
வெள்ளைக்
கொடிகளோடு
மரித்த மனிதர்களை
அறிந்தே இருந்தாய்
குருதி படிந்த
உடல்கள் குறித்தும்
கருகி மடிந்த மனிதம்
குறித்தும்
உறைந்த உண்மைகள்
இன்று உயிர் துறந்தன
உன் நிரந்தர
மௌனத்தில்...!

தி.வைதேகி

## விடியலைத் தேடி

வற்றாத கடல் அருகே
அமைந்திருக்கும்
வற்றாப் பளைத் தாயே
கண்களை மூடிக்
கொண்டாயோ
அல்லாவிட்டால் வேறு
எங்கு சென்றாயோ
நாங்கள் படும் துன்பம்
உனக்கு
தெரியவில்லையா
விளக்கெரிப்பதற்கு
வற்றாத கடல் நீர்
போதவில்லை என்று
பல உயிர்களை நந்திக்
கடலில் பலி எடுத்தாயோ
நீ எப்போது கண்
திறப்பாய்
எப்போது விடிவு
கிடைக்கும் அதுவரை
காத்திருப்போம்

க.கஸ்தூரி, தரம் - 8,
யா/டிறிபேக் கல்லூரி.

# இன்றைய கல்வி சமூகத்தைப் பாதிப்பது..

பாடசாலைகளில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களும் பட்டதாரிகள் அல்லது பயிற்றப்பட்டவர்களே. பெரும்பாலான ஆசிரியர் திறமைசாலிகளேயாவர். மாணவர்கள் உள, உடல் நிலையறிந்து கற்பித்து வெற்றிபெறச் செய்யக் கூடியவர்கள். இது இவ்வாறு இருக்கும்போது ஆசிரியர்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சோதிப்பதுபோல அவர்களது கற்பித்தலுக்குத் தொந்தரவு வல்லுநர்களாக நாளாந்தம் வந்துபோகும் ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரின் தலையீடுகள் இருக்கின்றன.


தாங்கள் படிப்பித்து வெற்றிகொள்ளலாம். ஒரு வினாப் பத்திரத்தைத் தயாரித்துக் கொண்டு வந்து மாணவர்களைக் கொண்டு செய்விக்கலாம். அது செய்யவே மாட்டார்கள். உத்தேசத் திகதி, கற்பித்த திகதி, கணிப்பீட்டுக் கருவிகள் ஆகியவற்றைப் பார்ப்பதால் கல்வியின் அறுவடை வெற்றிபெறப் போவதில்லை.




மேலும் அதிபர்கள் சிலர், பாடசாலை நேரங்களில் தமது சொந்த வேலைகளைச் செய்தல், மாணவர்களை தமது சொந்த வேலைக்குப் பயன்படுத்தல் போன்றவற்றையும் செய்கின்றனர். அத்துடன் மேலதிகாரிகளுக்காகப் பாடசாலை நேரத்தில் அவர்களுக்கு மாணவர்களின் பணத்தில் விழா எடுப்பது போன்றவற்றையும் மேற்கொள்கின்றனர்.

இவையனைத்தும் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கின்றது. அத்துடன் தனிநபரின் முடிவுகளான இவை ஏனையோருடன் முரண்பாட்டைத் தோற்றுவிப்பதால் இறுதியில் மாணவர்களின் கல்வியே பாழடிக்கப்படுகின்றது. எனவே இதை உணர்ந்து செயற்படவேண்டும்.

பொன்.தேவபாலன், ஏழாலை, சுன்னாகம்.



## இளவல்கள் வட்டம்

### விமர்சனம்

பாடசாலை அதிபர்கள், கல்வி நிர்வாகத்தினரிடையேயான உட்பூசல்களும், பழிவாங்கல்களும் இன்றைய கல்விந் சமூகத்தை பாதிப்பது தொடர்பில் இளம் சமூகத்தினர் தங்கள் விமர்சனங்களை அனுப்பலாம்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :-.............................................

முகவரி :- .............................................

.............................................

........................ ........................
திகதி கையொப்பம்

## சிந்திக்க சில துளிகள்



* மனித வாழ்க்கையில் நம்பிக்கை எனும் சக்தியைப் பெற்றுவிட்டால் உலகில் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.
* எதை நீ செய்ய விரும்புகிறாய் என்பதைச் சரியாகச் சிந்தித்து முடிவுக்கு வா; அதன் பிறகு வெற்றி உன்னிடம் தஞ்சமாகும்.
* தடைகளை வென்று காரியங்களைச் செய்து முடித்தால்தான் நீங்கள் சாதனை புரியும் மனிதராக உயரமுடியும்.
* நிலத்தை நம்பி வாழலாம். நிழலை நம்பி வாழக் கூடாது.
* முயன்றுபார், முயற்சிதான் வாழ்க்கை, முயற்சியின் வெற்றிக்கு அளவேயில்லை. முடிவும் இல்லை.
* மனச்சாட்டியை மதிக்காதவனை எந்த விடயத்திலும் நம்ப முடியாது.
* கற்றுக்கொள்ளப் பொறுமையுடையவர்கள்தான் கற்றுக்கொடுக்கும் திறமையுடையவர்கள்
* சோம்பலைத் தடுக்க வேண்டுமானால் அதிகமாக உண்பதைத் தவிர்க்க வேண்டும்.
* செல்வம் ஒன்றையே மட்டும் மதித்து நடக்கும் அகந்தை உடையவர்களுடன் அமர்ந்து உணவு உண்ணாதீர்கள். அப்படி உண்பதைவிட ஓர் ஊமையின் அருகில் அமர்ந்து உட்கொள்வது சாலச் சிறந்தது.
* பெற்றோரை நேசி, ஆசிரியரை நேசி, கல்வியை நேசி ஆண்டவர் உன்னை நேசிப்பார்.

க.ரபிதா,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி.

## சிநேகிதியே!



சாதனைகள் பலபுரிந்து காவியம்
படைக்கும் பெண்கள் குலமே நீ வாழ்க்!

பதினெண் கீழ் கணக்கு நூல்களினை- பாதைகளாய்
நீ கொண்டு பரந்துவந்த பூமியிலே
உன் பாதச் சுவடுகளையும் பதித்துவிடு தோழி!
காப்பியங்கள் அத்தனையையும் - நீ பயின்று
பிறரின் நெஞ்சினிலே ஓவியமாய்
நீ வாழ்ந்துவிடு தோழி!

சிற்றிலக்கியங்களிலே
உன் சிந்தனைகளும்
உலாவர பற்றுக்களைத் தகர்த்து
பக்குவ நிலையினை பெற்றுவிடு தோழி!

நாவிற்கு இனிமைதரும்
பாரதியின் - பாடலினை
நீ படித்து பார்போற்றும் கவிஞனாக
மாறி விடு தோழி!
துயரம் நீங்கி துணிவு பெற- தைரியமாய்
கவி எழுதும் வைரமுத்துவின் கவிமாரிக்கு
வசியமாகிவிடு தோழி!

தோல்விகள் நீங்கி வெற்றியைப் பெற
பாரதி காணும் புதுமைப் பெண்ணாய்
மாறிவிடு தோழி!

- தரணிகா


## ஆசிரிய பணியின் மகத்துவம்

சமுதாயக் கோட்டைக்குச் சரித்திரத்துக் கதவுகளாய்
சார்ந்திருப்பது ஆசிரியர் கூட்டம் - அது
அமுதான கல்வி புகட்டும் வண்ணத் தோட்டம்
அது அறிவுநெறி நின்ற கலைக்கோட்டம்

ஏணியிலே மாணவரை ஏற்றிவிட்டுத் தாம் கீழ்
இருப்பாரே இதுவல்லோ புதுமை - அந்த
மேனிநலம் பாராத மேதையரைப் பாடாமல்
பாரினில் இருக்கின்றதோ அமுதான கவி

அன்னவரின் நெஞ்சிலே ஆனந்தம் நின்றால்தான்
அறிவெனும் நதி தேனாக ஓடும்- துன்பக்
கண்ணீரின் கரையோரக் கதைகேட்டு நின்றால்
கவிதை மயில் எங்கனம் எழுந்து ஆடும்

ஆசிரியர் பணியொன்றே அறப்பணி என்றே தம்மை
அர்ப்பணித்து கொண்டவரைத்தொழுது - தென்றல்
வீசிவரும் வேளையில் வித்தாரக கவிதையெனும்
விதையிடுவோம் அறிவு நிலம் உழுது



ர.சாராங்கா,
66/16, இந்து மகளிர்
ஒழுங்கை,
கந்தர்மடம்.

## குறிக்கோள்

②

"டாக்டராக வேண்டும் என்ற கனவு ஒருவருக்கு இருக்கலாம். ஏதேனும் காரணத்தால் அவரால் டாக்டராக இயலவில்லை என்றாலும் தன்னம்பிக்கை இருந்தால் அதே மருத்துவத்துறையில் வேறு துறைகளில் அவரால் சாதிக்க இயலும். குறிக்கோளும் தன்னம்பிக்கையும் ஒன்றையொன்று வளர்த்துவிடும் சிறந்த நண்பர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் எந்த வேலை செய்பவராகவும் இருக்கலாம். அதன் மீது உங்களுக்கு ஆர்வமும், காதலும் இருந்தால்தான் உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும். அவ்வாறு நீங்கள் வளர்த்துக் கொள்ளும் படிப்படியான திறமை உங்கள் தன்னம்பிக்கையையும் அதிகரித்துக் கொண்டு வரும்.

குறிக்கோளின் மீது ஆர்வம், வெறி, விடாமுயற்சி உடையவர்களையே எப்போதும் உங்கள் நண்பராக்கிக் கொள்ளுங்கள். எந்தவிதத்திலும் உங்கள் இலக்குகளைப் பழித்துப் பேசுபவர்களையோ, விரக்தியடையச் செய்பவர்களையோ நெருங்க விடாதீர்கள்.

அந்தப் பெண் மிகவும் பூஞ்சையான தேகம் கொண்டவர். குடும்பத்தை விட்டு முன்பின் அறியாத தேசத்துக்கு வந்து குடியேறியவர். இதற்கிடையில் அவருக்கு ஆஸ்துமா நோய் தாக்கியது. இருப்பினும் அவருக்குள் ஒரு குறிக்கோள் இருந்தது. அதனால் தனது உடல்நிலை, சூழ்நிலை போன்ற எதைப்பற்றியும் கவலைப்படாமல் சோர்வடையாத, தளர்ச்சியுறாத தன்னம்பிக்கையை அவர் பெற்றார். அவரிடம் 'ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும், நோயாளிகளுக்கும் உதவ வேண்டும்' என்னும் உன்னதமான குறிக்கோள் இருந்தது.

அந்தப் பெண் தன் குறிக்கோளுக்காகப் பட்ட அவமானங்களும், துன்பங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு முறை தன் வசமிருந்த ஏழைக்குழந்தைகளுக்காக நிதி திரட்டுவதற்காக ஒரு செல்வந்தரைப் பார்க்கச் சென்றிருந்தார்.

செல்வந்தரிடம் நன்கொடை பெற வந்திருப்பதாகத் தெரிவித்தார். அந்தச் செல்வந்தருக்குப் பணம் இருந்த அளவுக்கு நல்ல மனம் இல்லை. அவர் தன் முன்னே கை நீட்டிய அந்தப் பெண்ணைப் பார்த்து காறி உமிழ்ந்தார்.

உடனே அந்தப் பெண் சிறிதும் கவலைப்படாமல் செல்வந்தர் உமிழ்ந்த எச்சிலைக் காண்பித்து, 'நீங்கள் கொடுத்த இந்த நன்கொடை எனக்குப் போதுமானது. ஆனால் என் குழந்தைகளுக்கு என்ன தரப்போகிறீர்கள்?' என்று கேட்டார்.

அந்தப் பெண்ணின் நல்ல மனதையும் சகிப்புத் தன்மையையும் புரிந்து கொண்ட செல்வந்தரின் மனம் வருந்தியது. அவர் அந்தப் பெண்ணிடம் பெரிய தொகை ஒன்றை நன்கொடையாகக் கொடுத்தார்.

இத்தனை அவமானங்களிலும் சிறிதும் மனம் சோர்வுறாமல் தன்னம்பிக்கையோடு திகழ்ந்த அந்தப் பெண் 'அன்னை தெரேஸா'.

நடுத்தர வர்க்க குடும்பத்தில் பிறந்து, லண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் காந்திஜி. அவர் தென்னாபிரிக்காவில் பல வேளைகளில் வெள்ளையர்களின் நிற வெறிக் கொடுமைக்கு ஆளானார்.

காந்தி கறுப்பின மனிதர் என்று அவரது உடையைச் சலவை செய்து தர மறுத்தார்கள். அவருக்கு முடி திருத்தம் செய்ய மறுத்தார்கள். ரயிலிருந்து கீழே தள்ளி விட்டார்கள். தடி கொண்டு தாக்கினார்கள். குதிரைகளை ஏவி விட்டார்கள். நீதி மன்றத்துக்குள் நுழைந்தாலே அவரைக் கேலி செய்து அவமானப் படுத்தினார்கள்.

ஆனால், இந்தக் கேலிக்கும், புறக்கணிப்புக்கும் காந்தி சிறிதும் கவலைப்படவில்லை. மனம் தளரவும் இல்லை.

கறுப்பின மக்களின் முன்னேற்றம், அவர்களுக்கான உரிமையைப் பெறுதல் போன்ற உன்னத குறிக்கோள் இருந்ததால், தென் ஆபிரிக்காவில் நிகழ்ந்த அத்தனை கொடுமைகளையும், காந்திஜியால் வெற்றி கொள்ள முடிந்தது.

இந்தியா வந்த பிறகு, இந்திய சுதந்திரம், கிராம முன்னேற்றம், ஹரிஜன முன்னேற்றம் என்ற உன்னத குறிக்கோள்களைப் பற்றிக் கொண்டார் காந்திஜி. அந்தக் குறிக்கோள்கள் அனைத்தும் அவரைத் துடிப்போடு செயலாற்ற வைத்தன.

அரை நிர்வாண பக்கிரி என்று இங்கிலாந்து பிரதமர் அவரைக் கூறியபோதும், அதுபற்றி சிறிதும் கவலைப்படாமல் வட்ட மேசை மாநாட்டில் தன் கருத்துக்களை முன்வைத்தார் காந்திஜி.

ஒருவருடைய குறிக்கோள், அவமானங்களைப் பற்றிக் கவலைப்படாது. கேலி, விமர்சனங்களைப் பற்றி அக்கறை கொள்ளாது ஒருவனைத் தன்னம்பிக்கையோடு திகழ வைக்கும் ஆற்றல் நல்ல குறிக்கோளுக்கு எப்போதும் உண்டு.!

-ஷிவேந்த்ரா

முற்றும்.

# போர்க் காலங்களில் துணிந்து சேவையாற்றிய பெண் இமெல்டா

### பீடாதிபதி யோகநாதன் புகழாரம்

**போக்குவரத்து வசதிகள் இல்லை, மின்சார வசதிகள் இல்லை, அடிப்படை வசதிகள் கூட இல்லாத சூழ்நிலையில் முல்லைத்தீவு மக்களுக்கு சேவையாற்ற தற்துணிவோடு சென்று கடமையாற்றியவர்.**

யாழ்ப்பாணம், மார்ச் 29

முல்லைத்தீவில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு சேவை செய்வதற்குத் துணிந்து சென்றவர் அரச அதிபர் இமெல்டா சுகுமார் என யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் புகழாரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியினால் யாழ் அரச அதிபருக்கு 'சேவையின் நாயகி' என்னும் விருதை வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போக்குவரத்து வசதிகள் இல்லை, மின்சார வசதிகள் இல்லை, அடிப்படை வசதிகள் கூட இல்லாத சூழ்நிலையில் முல்லைத்தீவு மக்களுக்கு சேவையாற்ற தற்துணிவோடு சென்று கடமையாற்றியவர்.

போர் முனைப்புப் பெற்றிருந்த போது, பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவராக இருந்து, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, தனது பணியை ஆற்றியவர்.

நல்ல தலைமைத்துவ ஆளுமைப் பண்பும், மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அவர் காட்டும் அக்கறையும், எல்லா மக்களோடும் அன்னியோன்னியமாகப் பழகும் குண இயல்பும் கொண்டவர் அத்தகைய எமது அரச அதிபருக்கு 'சேவையின் நாயகி' என்ற உயர் விருதை வழங்குவதில் நாம் அனைவரும் மகிழ்வடைகின்றோம்.

எமது கல்வியியற் கல்லூரி, 2004 ஆம் ஆண்டிலிருந்து அக்கறையும் பொறுப்பும் மிக்க சமூகத்துக்காக சேவை செய்த பெரியவர்களுக்கு மதிப்பளித்து, விருது வழங்கிக் கௌரவித்து வருகின்றது. அந்த வகையில் 2012 ஆம் ஆண்டுக்கான விருதை, யாழ்.அரச அதிபருக்கு வழங்கியுள்ளது- என்றார். (எ-16)

## தேசிய கலை இலக்கிய போட்டி

சாவகச்சேரி, மார்ச் 29

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் இந்த வருடத்துக்குரிய தேசிய கலை இலக்கியப் போட்டிக்கான விண்ணப்பங்களை அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக கோரியுள்ளனர்.

மாணவர்களுக்கு கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளுக்கான போட்டிகளும், 19 வயதுக்கு மேற்பட்டோருக்கு திறந்த போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

16 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு (கனிஷ்ட பிரிவு) கட்டுரை, கவிதை, கவிதை, பாடல் ஆகிய போட்டிகளும், 16 இற்கும் 19 வயதுக்கும் உட்பட்ட மாணவர்களுக்கு (சிரேஷ்ட பிரிவு) கட்டுரை, கவிதை பாடல், கவிதை நயத்தல் ஆகிய போட்டிகளும், 19 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான திறந்த போட்டியில் பாடல் ஆக்கம், நாட்டார் கலை கற்றல், இலக்கிய விவரணம், சிறுகதை, கவிதை, சிறுவர் கதை ஆக்கம் ஆகியனவும் நடத்தப்படவுள்ளன.

மாணவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் ஹனேசன் தெரிவித்துள்ளார்.

இலக்கியங்கள் மற்றும் கலாசாரத் தின் மீது விழிப்புணர்வினை ஏற் படுத்துவதன் நோக்கிலும், பிரதேச இலக்கியவாதிகளதும், கலைஞர்களதும் படைப்பாற்றல்களை வெளிக் கொணர்வதுமே இந்தப் போட்டியின் நோக்கம் என்று பணிப்பாளர் கூறியுள்ளார். (எ-9)

## விருது பெற்றார்



இலங்கை சமூக பாதுகாப்பு ஒய்வூதியத் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 2010: 2011 ஆம் ஆண்டுகளில் ஆகக் கூடுதலான பயனாளிகளை இணைத்து மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தை கிராம அலுவலர் குமாரசுவாமி கதிரமலைநாதன் பெற்றுள்ளார்.

இவரைப் பாராட்டி யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆவரங் கால் கிழக்கு கிராம அலுவலரான இவர், 2010 ஆம் ஆண்டு, 218 பயனாளிகளையும் 2011 ஆம் ஆண்டு 294 பயனாளிகளையும், இலங்கை சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துள்ளார்.

விருது வழங்கும் கௌரவிக்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது. (எ-11)

## உரும்பிராய் இந்துவுக்கு புதிய அதிபர்

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்து உரும்பிராய் இந்துக்கல்லூரியின் புதிய அதிபராக அப்பர் அருணந்திசிவம் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் அதிபராக கடமை புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# இளைஞர்களே அரசியலின் சக்தி

### தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர்

**இளைஞர்கள் நல்ல தலைமைத்துவப் பண்புகள் கொண்டவர்களாக வளர வேண்டும். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை இளைஞர்கள் சரிவர பயன்படுத்தி தமது ஆற்றல்களை வளர்க்க முன்வர வேண்டும்.**

பண்டத்தரிப்பு, மார்ச் 29

பிரதேச சபையொன்றின் தலைவரைத் தீர்மானிக்கும் அளவுக்கு இளைஞர்கள் சமூகத்தின் சக்தி வாய்ந்த அமைப்பாக உள்ளார்கள் என தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தெரிவித்தார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் ச.செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஈஸ்வரராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

இளைஞர்கள் நல்ல தலைமைத்துவப் பண்புகள் கொண்டவர்களாக வளர வேண்டும். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை இவர்கள் சரிவரப் பயன்படுத்தி தமது ஆற்றல்களை வளர்க்க முன்வர வேண்டும். ஆற்றல்களை வளர்க்க உதவும் சகலவித உதவிகளையும் தேசிய இளைஞர் சேவை மன்றம் வழங்கிவருகிறது.

இலங்கை வரலாற்றில் வலி தென்மேற்கு பிரதேசம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளூராட்சி சபையொன்றின் தலைவராக வந்திருக்கின்றார் என்றால், அந்த அளவுக்கு இளைஞர்கள் சக்தி வாய்ந்த அமைப்பாக இருக்கிறார்கள். இளைஞர்களைச் சரியாக பயன்படுத்துவதிலேயே சமுதாயத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது என்றார்.

மேலும் இந்தப் பொதுக்கூட்டத்தில் சம்மேளனத்தின் புதிய தலைவராக பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் பே.சுபாகர், பிரதேச இளைஞர் சேவை உத்தி யோகத்தர் எஸ்.குணேஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-130)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கடவுளே கவனி

விடுதலைக்கான உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் செல்வச் செழிப்புப் பெற்றவற்றில் முதன்மையானவை ஆலயங்கள். ஆங்காங்கே புதிதாய்த் தோன்றும் விகாரைகள் உட்பட மினுமினுக்கும் வணக்கத் தலங்கள், குறிப்பாக வடக்கில் கடந்த மூன்றாண்டுகளில் அதிகரித்துவிட்டன.

யாழ்ப்பாணத்தில் பல இந்துக் கோயில்கள், கிறிஸ்தவத் தேவாலயங்கள் கடந்த சில வருடங்களில் புதுப் பொலிவு பெற்றன. சில ஆலயங்கள் மீண்டும் மீண்டும் வர்ணம் பூசப்பட்டும் ராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டும் மணிக் கோபுரங்கள் அமைக்கப்பட்டும் வசந்த மண்டபங்கள், தேர்முட்டிகள், டோம்கள், பங்குத் தந்தை இல்லங்கள் என்பன அமைக்கப்பட்டும் கடவுளுக்கான வதிவிடங்கள் பொலிவு பெற்றுக் கொண்டே செல்கின்றன.

போதாக்குறைக்கு, ஆலயங்களுக்குப் பணமாகவும் பொருளாகவும் தங்க நகைகளாகவும் அள்ளிக் கொடுக்கும் கொடை வள்ளல்கள் இங்கும் புலம்பெயர் நாடுகளிலும் தாராளமாக இருக்கின்றனர். [ஆலயத்தில் தங்கள் பூசை நாளில் பெருமைக்காக இவர்கள் செலவிடும் லட்சங்கள் இதில் கணக்கில் கொள்ளப்படவில்லை.] வலது கை கொடுப்பதை இடது கை அறியாத வகையிலான இந்தக் கொடைவள்ளல்களால் அள்ளி வழங்கப்பட்ட பணமும் தொகையும் எவ்வளவு என்பது உடனடியாகத் தெரிய வருவதில்லை.

ஆலயங்களில் திருட்டு நடக்கும்போதுதான் அங்கே எத்தனை லட்சங்கள், கோடிகள் பெறுமதியான சொத்துக்கள் இருந்தன என்ற உண்மை வெளிவருகின்றது. ஒரு சிறிய கோயிலில்கூட திருடர்கள் புகுந்துவிட்டால் அவர்களுக்குச் சில பல லட்சங்களைச் சுருட்டுவது இலகுவாகிவிடுகிறது. எந்தப் பெரிய முயற்சியோ சிரமமோ இன்றிக்கூட சில பல ஆயிரங்களைத்தானும் திரட்டிவிடுவதற்கு திருடர்களால் முடிகிறது. அந்தளவுக்கு ஆலயங்களில் செல்வம் விளைந்து கிடக்கிறது, வெவ்வேறு வடிவங்களில்.

கடந்த ஆண்டில் வடக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டவற்றில் குடும்ப வன்முறைகளுக்குப் பின்னர், ஆலயத் திருட்டுக்கள் தொடர்பான முறைப்பாடுகளே அதிகம் என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

தமிழரின் வரலாற்றுக் காலங்களிலும் ஆலயங்கள் அதிகார மையங்களாகவும் நிதி நிலைகளாகவும் விளங்கியிருக்கின்றன. ஆலயங்களில் இப்போதும் திருட்டுப் போகும் தொகையின் அளவுகளைப் பார்க்கும்போதும், ஆலய நிர்வாக சபைகளைக் கைப்பற்றுவதற்காக நடக்கும் பிடுங்குப்பாடுகளையும் சண்டைகளையும் பார்க்கும்போதும் அவை இன்னும் அதிகார மற்றும் நிதி மையங்களாகவே இருக்கின்றனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வளவையும் இங்கே பேசுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. 30 வருட காலப் போரின் பின்னர், குறிப்பாக வன்னியில் நடந்த இறுதிப் போரின் பின்னர் இந்த மண்ணில் உணவுக்கும் இல்லிடத்துக்கும் வழியின்றி ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். இங்கிருப்பவர்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழேதான் வாழ்கிறார்கள் என்கிறது ஐ.நா. ஆனால், ஆலயங்களில் இருந்து லட்சங்களில் களவு போகிறது.

அரசு தரவில்லை, வெளிநாட்டு உதவிகளையும் தடுக்கிறது என்று குறைபட்டுக் கொண்டே திருடர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்க நாம் ஆலயங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறோம். கடவுளே! உன்பிள்ளைகள் செய்யும் இந்தத் திருவிளையாடல்களையும் கொஞ்சம் கவனி.

# கோபப்படுவதால் ஆகப்போவது ஏதுமில்லை

'ராவய' சிங்களப் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தின் தமிழாக்கம் இது

விஎஸ்ரி



போரை வெற்றிகொள்ள முடிந்தபோதும் அதன் தொடர்ச்சியாக பின்னர் இடம் பெற்ற பரப்புரைப் போரில் புலம் பெயர் தமிழர்தரப்பினால் இலங்கை அரசு தோற்கடிக்கப்பட்டதென்பது இதிலிருந்து புலனாகிறது.

ஜெனிவா, மனித உரிமைகள் சபை மாநாட்டில் இடம் பெற்ற போட்டியில் இலங்கை அரசால் வெல்ல முடியவில்லை. வெளித் தோற்றத்தில் சபையில் நிறைவேறிய இலங்கை மீதான பிரேரணை இறுக்கமானதொன்றாகத் தோன்றாவிட்டாலும், இனிவரும் காலத்தில் இலங்கையின் செயற்பாடுகள் தவறுகள் எதுவுமின்றியும், செயலூக்கம் மிக்கதாகவும் அமையும் விதத்தில் நிர்வாகிக்கப்படாவிட்டால், இந்தத் தீர்மானமே பின்னாளில் அழுத்தங்களை ஏற்படுத்தக் காரணமாக அமையக்கூடும்.

இலங்கை அரசின் தோல்விக்கு, இந்திய மத்திய அரசின் கொள்கை நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றமும் முக்கிய காரணமாக அமைந்தது. தமிழ்நாடு மாநில அரசின் நிலைப்பாடு காரணமாகவே இந்திய மத்திய அரசும் தனது கொள்கை நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது.

இந்திய மத்திய அரசு இலங்கை தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாதிருந்தால், அதன் பிரதிபலிப்பாக மத்திய அரசின் நிர்வாகம் வீழ்ச்சி காண நேர்ந்திருக்கும். இலங்கை அரசு முகம் கொடுக்க நேர்ந்த இந்தச் சிக்கலில் இந்திய மத்திய அரசுக்கு மட்டுமல்லாது தமிழ் நாடு மாநில அரசுக்கும் காத்திரமான பங்குண்டு.

விடுதலைப் புலிகள் அமைப்புடனான போரில் அரசால் வெற்றி கொள்ள முடிந்த போதிலும், அதன் தொடர்ச்சியாக பின்னர் இடம் பெற்ற பரப்புரைப் போரில் புலம் பெயர் தமிழர்தரப்பினால் இலங்கை அரசு தோற்கடிக்கப்பட்டதென்பது இதிலிருந்து புலனாகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பை போரியல் ரீதியாகத் தோற்கடிக்கத் தேவைப்பட்ட பலமும், செயற்திட்டங்களும் இலங்கை அரசுக்குக் கிட்டியிருந்த போதிலும், அதன் பின்னர் உருவான பிரச்சினைகளை வெற்றி கொள்ளத் தக்க பலமும், செயற்திட்டங்களும் இலங்கை அரசிடம் இருக்கவில்லை என்பது இதன் மூலம் உறுதியாகிறது. இந்தத் தவறின் பெரும் பகுதியை வெளியுறவு அமைச்சர் மற்றும் வெளியுறவு அமைச்சு என்பவற்றின் கணக்கிலேயே வரவு வைத்தாக வேண்டும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்கும் விதத்தில் முன்னோக்கிச் செல்லும் முனைப்பு, அரசுக்கு இருந்திருக்குமானால், போரின் பின்னரான பிரச்சினைகளை இலேசாக்கிக் கொள்ள அரசுக்கு வாய்ப்பு அமைந்திருந்தது எனக் கொள்ள முடியும்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் தேசிய அரசொன்றை நிறுவி நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லத் தேவைப்பட்ட இனங்களுக்கு இடையேயான ஐக்கியத்தை-ஐக்கிய இனமொன்றை-உருவாக்க நாம் தவறி விட்டோம்.

பிரித்தானிய அரசிடமிருந்து கிட்டிய ஜனநாயக ஆட்சி நடைமுறையை முறைப்படி முன்னெடுத்து ஜனநாயகவாத சமூகமொன்றை உருவாக்க நாம் தவறிவிட்டோம்.

ஒன்றுக்கொன்று பொருந்தாத சமூகக் கட்டமைப்புக்கள் மத்தியில் எற்பட்ட விரிசல் நிலை அரசியல் நடைமுறையிலும் பிறழ்வுகளை உருவாக்கக் காரணமாகியது. அந்த வகையில் ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் நாம் ஈட்டிய சுதந்திரம், முப்பது ஆண்டுகளிலும் இரத்த ஆறு ஓடும் நாடாக இலங்கையை அடையாளப்படுத்தியது.

விடுதலைப் புலிகளுடனான போர் இடம் பெற்ற மூன்று தசாப்த காலகட்டத்தில் அரச நிர்வாகத்தில் புனரமைப்பை மேற்கொள்ள இயலாது போனதை ஏற்றுக் கொண்டாலும், போர் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த மூன்றாண்டு காலத்திலாவது அரசியல் நடைமுறையில் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்த அரசுக்கு வாய்ப்புக் கிட்டியிருந்தது. அதன் அவசியத்தைக் காலம் கடந்த இந்த வேளையிலாவது புரிந்து கொள்வதற்கு அரசு மற்றும் எதிர்க்கட்சிகள் அக்கறை காட்ட வேண்டியது அவசியமாகும்.

ஒரு நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமேயாயினும், இன்றைய உலகமயமாக்கல் சூழலில் உலக தரப்புக்களின் அழுத்தங்களுக்கு உட்படாது தனித்து இயங்கத் தக்க வலிமையும் உரிமையும் எந்தவொரு நாட்டுக்கும் கிட்டாது.

ஐ.நா.சபையின் உறுப்பு நாடு என்ற வகையில், அங்கு மேற்கொள்ளப்படும் எத்தகைய தீர்மானங்களுக்கும் மதிப்பளித்து ஏற்றுச் செயற்பட வேண்டிய பொறுப்பு அதில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளுக்கு உண்டு. அங்கு தமது சுய விருப்புப்படி செயற்படத்தக்க பலம் பெரும் வல்லரசு நாடுகளுக்கே வாய்த்துள்ளது. இலங்கை போன்ற சிறிய நாடுகளால் அத்தகைய தன்னிச்சைப் போக்கில் செயற்பட இயலாது. எமது தராதரம் அறிந்து அதற்கேற்பவே நாம் செயற்பட்டாக வேண்டும்.

உலக பூகோள அமைவில் இலங்கை முக்கியத்துவம் மிக்க கேந்திர இடத்தில் அமைந்திருக்காவிட்டால், வல்லரசு நாடுகள் இலங்கை நிலைவரம் குறித்து அதிக அக்கறை காட்டியிருக்க மாட்டா. இலங்கை அரசு இவற்றைக் கணக்கிலெடுத்துத் தனது வெளியுறவுக் கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டியுள்ளதுடன், இந்த வட்டகையின் பலவானாக ஆவதற்கு முயல்வதற்கு மேலதிகமாக உலக வல்லரசுகளிலொன்றாக ஆகும் எதிர்பார்ப்புடனிருக்கும் இந்தியாவுக்கு, மிக அண்மையில் எமது நாடு பூகோள அமைப்பில் இடம் பெற்றுள்ளது என்பதையும் நாம் கருத்தில் கொண்டாக வேண்டியுள்ளது.

இவற்றைவிட இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கும், தென்னிந்தியாவில் வாழும் தமிழ் மக்களுக்குமிடையேயான பாரம்பரியத் தொடர்புகள் குறித்தும் நாம் கவனம் செலுத்தியாக வேண்டும்.

நாட்டின் இன்றைய பிரச்சினைக்கு முகம் கொடுத்து உரிய தீர்வொன்றைக் காண்பதற்கு நாம் தவறியுள்ளோம். தற்போது ஆவேசப்படுவதாலோ, கோபப்படுவதாலோ ஆகப்போவது எதுவுமில்லை. நாம் எங்கே தவறிழைத்துள்ளோம் என்பதைக் கண்டுணர்ந்து, பிரச்சினைக்கு அமைதியான வழியில் தீர்வொன்றைக் காண்பதே இன்று நாம் மேற்கொள்ள வேண்டியுள்ள பொருத்தமான செயற்பாடாகும்.

இன்றைய எமது பிரச்சினைக்கு பல தரப்பட்ட தீர்வு முயற்சிகள் பலனற்றவை. நாம் கடும் பொருளாதாரச் சிக்கலில் மாட்டியுள்ளோம் என்பதை மனதில் இருத்தி, சிக்கலாகிப் போயுள்ள சமூக, அரசியல் நடைமுறைகளிலுள்ள பின்னடைவுகளை நேர் சீர் செய்து, வேலைத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதன் மூலம் புதிய அரசியல் நடைமுறையொன்றை நிர்மாணித்து நடைமுறைப்படுத்தும் வழிமுறைக்கு நாம் சென்றாக வேண்டியுள்ளது.

இலங்கை, இந்த நாட்டு மக்களிடம் மட்டுமல்லாது சர்வதேசத்தினது மதிப்பையும் மரியாதையையும் ஈட்டிக் கொள்வதற்குமுரிய நடைமுறை அதுவேயாகும். ✱

# வரலாற்றைத் திருடிவிடும் முயற்சி

தானா

ஓல்ட் இஸ் கோல்ட் (Old is Gold) என்றொரு முதுமொழி வழக்கிலுண்டு. பழையவை பெறுமதிமிக்கவை என இது பொருள்படும்.

தொல்பொருள்கள் வரலாற்றின் அடையாளச் சின்னங்கள். உலகில் வாழும், வாழ்ந்த ஒரு இனம் காலத்தால் அழிந்து போக நேர்ந்திலும், அந்த இனம் வாழ்ந்த வேளையில் அந்த இனத்தின் பயன்பாட்டில் இருந்த மொழி, கலாசாரம், வாழ்க்கை நடைமுறை என்ற வாழ்வியல் வரலாற்றை அந்த இனத்தின் வழித்தோன்றல்களோ, அன்றிப் பின்வந்தோரோ தெரிந்து கொள்ள உதவுபவை, அவ் இனத்தவர் பயன்படுத்திய தொல்பொருள்களே. இன்றைய நவீன விஞ்ஞான யுகத்தில் தொல்பொருள் ஆய்வும், அவற்றைப் பேணிப் பாதுகாத்தலும் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் இதுவே.





ஓர் இனத்தின் பண்டைய வாழ்வியல் நடைமுறைச் சிறப்பு, கலாசார விழுமியங்கள் குறித்து அவ்வினத்தின் பின் தோன்றல்கள் பெருமை பாராட்டுவதும், பெருமிதப் பட்டுக் கொள்வதும் இயல்பானதே; ஒரு வகையில் அது நியாயமானதும் கூட. கல் தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய தமிழினம் என அடையாளப் படுத்திப் பெருமைப்படுவது மிகைப்படுத்தல் எனக் கொண்டாலும், சிந்து நதிக்கரை நாகரிகம், சங்கம் வளர்த்த தமிழ் என்றெல்லாம் தமிழ் மொழியின், இனத்தின் சிறப்பைச் சிலாகிக்க வழியமைத்தவை, சான்றுகளாக அமைந்தவை, தொல்பொருள்களே என்பது மிகைப்படுத்தப்பட்ட கருத்தொன்றல்ல. அந்த வகையில் தமிழினத்தின் வாழ்வியலோடு இரண்டற கலந்திருந்த இந்து மதச் சிறப்பியல்புகளின் தனித்துவத்தை நிரூபிக்கும் வரலாற்றுச் சான்றுகளும் தொல்பொருள்களேயாம்.

இலங்கை வெளிநாட்டவர்களின் ஆதிக்கத்துக்கு உட்படுவதற்கு முன்னர், மன்னராட்சிக் காலத்தில், நாட்டின் வட பகுதி யாழ்ப்பாண இராச்சியமாக விளங்கியது எனவும், அவ்வேளையில் இங்கு வாழ்ந்த தமிழ் இனத்தவர்களின் மொழியும் மதமும் தனித்துவச் சிறப்புக்களுடன் பேணி வளர்க்கப்பட்டதென்பதும் வரலாறு. வெளிநாட்டார் நிர்வாகத்திலும் தமிழ் மக்கள் தம் மொழியையும், மதத்தையும், வாழ்வியல் பண்பாடுகளையும் தனித்துவம் மிக்கதாகப் பேணிப் பாதுகாத்து வளர்த்து வந்தனர் என்ற வரலாற்றை நிரூபிக்கச் சான்றுகளாக அமைந்தவை அவர்தம் தொல்பொருள்களே. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் அரசுகளின் நிர்வாகத்திலும் வடபகுதி மக்கள் தமது வாழ்வியல் நடைமுறைகளைத் தம் பாரம்பரிய தனித்துவத்தின் அடியொற்றியே பேணிவந்தமையும் வரலாற்றுப் பதிவுகளே.

நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் சிங்கள, பௌத்த மேலாதிக்க உணர்வுடன், பேரினவாதச் சிந்தனையுடன் தமிழ் மக்களது பாரம்பரிய வாழ்விடங்களைக் கபளீகரம் செய்யும் குரூர நோக்கில் சிங்களக் குடியேற்றங்களை தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் திட்டமிட்டு நிறுவி இனப்பரம்பலை மேற்கொண்டு வந்த சிங்கள அரசுகளும், அவற்றின் தலைமைத்துவங்களும், தமிழர் தம் தனித்துவ வாழ்வியலின் வரலாற்றைச் சிதைத்து, மாற்றி, பிறழ்வு படுத்தும் நோக்குடன் தமிழ் மக்களது தனித்துவ, பாரம்பரியச் சான்றுகளை வரலாற்றிலிருந்து நீக்கிவிட, மறைத்து விடத் திட்டமிட்டு செயற்பட்டு வந்துள்ளன.

இன்றைய யுகத்தில், எந்தவொரு இனத்தினதும் வாழ்வியல் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் தொல் பொருள்களுக்கு மேற்குலக நாடுகளில் பெரு மதிப்பு உண்டு. அவை புராதன கலை நுணுக்கம் கொண்ட சின்னஞ் சிறு பொருள்கள் முதல் பெருஞ் சிற்பங்கள் என்ற வரை நீளும். அத்தகு புராதனப் பொருள்கள் அவற்றை வைத்திருப்போரின் அந்தஸ்தையும் கௌரவத்தையும் அளவிடும், நிர்ணயிக்கும் கருவிகளாகவும் அமைகின்றன. அதற்காக என்ன விலை செலுத்தியாவது புராதன தொல்பொருள்களை, கலை நயம் மிக்க சிற்பங்களை வாங்குவதில் வெளிநாட்டவர்கள் ஆர்வம் காட்டுவது வழக்கம். அவற்றை வாங்குவதில் ஏற்படும் போட்டி, அவற்றுக்கான விலைகளில் ஆச்சரியப்படத்தக்க பன்மடங்கு விலை உயர்வையும் ஏற்படுத்துவதுண்டு.

நான்காம் ஈழப்போர் முடிவுற்ற கையோடு நாட்டின் வட பகுதியில் - யாழ். குடாநாட்டில் பழையவற்றுக்கு மதிப்பு திடீர் என அதிகரித்தமை கண்கூடு. குப்பையில் வீசி எறிந்த அலுமினியத் தகடு முதல், பாவனைக்கு உதவாதெனக் கோடியில் வீசியெறிந்த இரும்புக் கம்பி முதல் பிளாஸ்ரிக் பொருள்கள் வரை அனைத்தையும் தூசு தட்டி எடுத்து காசாக்கிக் கொள்ளும் நிலை. வளவின் மூலையில் வீசியெறிந்த உடைந்த போத்தல்கள், கண்ணாடித் துண்டுகள்கூட காசாகிக் கைக்கு வரும் நிலை. இந்த இலட்சத்திணல் வெளிநாடுகளில் கொள்ளை விலை போகத்தக்க ஐம்பொன்னால், வெள்ளியால், செம்பினால் வார்க்கப்பட்டு உருவமைக்கப்பட்ட கலைநயம் மிக்க இந்துக் கடவுளர்களின் திருவுருவச் சிலைகளைத் திருடி அவற்றை வெளிநாட்டவர்களுக்கு விற்கும் கைங்கரியத்தை எம்மவர்களில் சிலர் ஆரம்பித்து வைத்தனர். அப்போக்கு காலத்துக் காலம் தீவிரமடைந்து பெரும் பணத்தை இலேசில் ஈட்டத்தக்கதொரு தொழிலாக, வியாபாரமாக வளர்ச்சி கண்டமைக்கு, அவை வெளிநாட்டார்களால் விரும்பி வாங்கப்படும் ஒன்றாக அமைந்தமையே காரணமாகும். எம்மைக் காக்க வேண்டிக் கைகூப்பித் தொழும், உற்சவ நாள்களில் பாலாபிஷேகம் காணும் அந்தக் கடவுளர்களின் திருவுருவச் சிலைகளுக்கே திருடர்களிடமிருந்து பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலை.

ஏ-9 நெடுஞ்சாலையில் வடபகுதியைத் தாண்டி வெளிச் செல்லும் எவரும் ஓமந்தைச் சாவடியில் இராணுவத்தினரின் சோதனைகளுக்கு முகம் கொடுத்தே பயணிக்க வேண்டியுள்ளது. போர் முடிவுக்கு வந்து 3 ஆண்டுகள் கடக்கும் நிலையிலும் அந்த நடைமுறை, மாற்றம் ஏதும் இன்றி தொடர்கிறது. அத்தகைய சோதனை கெடுபிடிகளில் இருந்து தப்பி இராணுவத்தினரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு இத்தகைய கடவுளர்களின் திருவுருவச் சிலைகளைக் கடத்திச் செல்வதென்பது வியப்பூட்டும் ஒரு செய்தியே. இராணுவத்தினரின் அனுசரணையுடனேயே, அவர்களது உதவி ஒத்தாசையுடனேயே இக்கடத்தல்கள் இடம்பெறுவதாகப் பரவலாகப் பேசப்பட்டது. ஆயினும் இவ்விடயம் குறித்து அரசோ, பாதுகாப்புத் தரப்புக்களோ பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை என்பது கசப்பான உண்மையே.

மிக அண்மையில், மலையகத்தின் எல்லைப் பிரதேசம் ஒன்றில் பௌத்த மத வழிபாட்டுச் சின்னமான புத்தர் திருவுருவச் சிலைகள் சில திருட்டுப் போனதாக வெளிவந்த தகவல் அரச உயர்மட்டத்தில் சல சலப்பை ஏற்படுத்தியதுடன், எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கும் உள்ளானது. நாள்கள் கடந்த நிலையில் அச் சம்பவம் மக்கள் மத்தியில் மறந்துபோன தொன்றாக தேய்ந்து உருவற்றுப் போனது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் மனிதனையே கடிக்க முயன்றமைக்கொப்ப, அண்மையில் கொழும்பு தொல்பொருள் காட்சியகத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் சுதேச மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களால் பயன்படுத்தப்பட்ட பெறுமதிமிக்க தொல்பொருள்கள் சில சூட்சுமமான முறையில் ஒரு குழுவினரால் திருடிச் செல்லப்பட்டதான செய்தி மீண்டும் அரசியல் அரங்கில் சூடான சர்ச்சைகளுக்கும், விமர்சனங்களுக்கும் குற்றச் சாட்டுகளுக்கும் வழிவகுத்து வைத்துள்ளது.

கொழும்பு நூதன சாலையில் 2ஆம் மாடியில் பாதுகாக்கப்பட்டு வந்த இந்த அரும் பொருள்கள் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவையாதலால், அவற்றின் பெறுமதியும் அளவிடற்கரியதே. நூதன சாலையின் பாதுகாப்புக்குப் பொறுப்பான தரப்பினரின் உதவி ஒத்தாசையுடனேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்று இருக்கலாம் என்ற ஊகம் ஒருபுறம், பாதுகாப்பு ஏற்பாடுகள் உரிய வகையில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு ஒருபுறம், இவற்றின் மத்தியில் அல்லாடும் அரசு, திருட்டுப் போன அந்த விலை மதிப்பற்ற அரும் பொருள்கள் நாட்டுக்கு வெளியில் எடுத்துச் செல்லப்படுவதை தடுத்து நிறுத்தும் வகையில் விமான நிலையம், துறைமுகம் ஆகிய கேந்திர நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

அந்த வகையில் தனக்குத் தனக்கென வந்தாற்றான் சுளகு படக்குப் படக்கு என அடிக்குமாம் என்பதற்கொப்ப தமிழர் பகுதிகளின் பாரம்பரிய தொல்பொருள் சின்னங்கள் கொள்ளையிடப்பட்டு வெளியில் எடுத்து செல்லப் பட்ட வேளைகளில் அது பற்றி அலட்டிக் கொள்ளாத அரசு, தற்போது சிங்கள மன்னர்களில் வரலாற்றுப் பெருமைக்குரிய தொல் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தை ஜெனிவாப் பிரச்சினை போன்று பெரிய தொரு சவாலாகக் கருதி அச் சம்பவம் குறித்து தீவிர விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளது. அந்த வகையில் இந்த நாட்டின் தமிழ் மக்கள் காலங்காலமாக சிங்கள அரசுக்களால் மாற்றாந் தாய் மனப்பாங்குடனேயே நோக்கப்படுகின்றனர் என்ற குற்றச் சாட்டை நிரூபிக்கும் சாட்சியங்களில் ஒன்றாக கொழும்பு தொல் பொருள் காட்சியகத்தில் நடந்தேறிய கொள்ளைச் சம்பவத்தைக் கணக்கில் வைக்கலாம்.

இந்த நாட்டின் தொல் பொருள் துறைக்குப் பின்னால் நீண்ட நெடும் வரலாற்றுப் பதிவுகள் உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் கவர்னர் ஆக இருந்த வில்லியம் கிறகறி என்பவரின் திட்டத்துக்கமைய 1876ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1877 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியன்று பொது மக்களின் பார்வைக்கு அனுமதிக்கப்பட்ட கொழும்பு தொல்பொருள் காட்சியகம் அந்த வேளையில் நூதனசாலை என அழைக்கப்பட்டு வந்தது. அந்த வகையில் வட பகுதியில் - யாழ்ப்பாணத்தில்கூட யாழ். மாநகர சபையினால் நூதன சாலையொன்று அன்றைய மாநகரசபைக் கட்டட வளாகத்தை அண்டிய பிரதான வீதியில் அமைந்திருந்த கட்டடமொன்றில் இயங்கி வந்த வரலாறு- இன்றைய இளஞ் சந்ததியினருக்குத் தெரியாததொன்று. 1950துகளின் பிற்பகுதியில் அங்கு சென்று பார்வையிட்ட மாணவப் பருவ நினைவுகளின் அடிப்படையிலான இந்த தகவல் குறிப்பு ஓல்ட் இஸ் கோல்ட் என்பதற்குச் சான்றாக அமையக்கூடும்.

மொத்தத்தில் பண்டைய மன்னராட்சிக் காலத்தில் பிறிதொரு நாட்டின் மீது படையெடுத்து அந்த நாட்டைக் கைப்பற்றும் எந்த வொரு நாட்டு மன்னனும் முதலில் தன்னால் கைப்பற்றப்படும் நாட்டின் வரலாற்றுச் சின்னங்களை அழித்தொழித்து அந் நாட்டின் வரலாற்றை இருட்டடித்து விடும் திட்டத்தை நிறைவேற்றி வந்தமை வரலாற்றுப் பதிவுகள். தொடர்ந்து வந்த உலக மகாயுத்த வேளைகளிலும் போரில் வென்ற நாடுகள் தம்மால் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளின் வரலாற்றை சிதைத்தழித்து விடும் கைங்கரியத்தையே கடைக்கொண்டு வந்தன. இன்றைய நவீன உலகில் பல்லினங்கள் வாழும் நாடொன்றில் ஓர் இனத்தை நலிவுபடுத்த ஆட்சி அதிகாரம் படைத்த தரப்பினர் குறிப்பிட்ட அந்த இனத்தின் வாழ்வியல் தொன்மையை வெளிப்படுத்தும் அனைத்து வகை அடிப்படைகளையும் படிப்படியாக வரலாற்றிலிருந்து அழித்து விடுவதன் மூலம் அவ்வினத்தின் மூல வேரையே வேரறுத்து விட இயலுமென்ற கோட்பாட்டுடன் செயற்பட முனைகின்றனர். அந்த வகையில் இலங்கையின் வடபகுதியின் பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்களையும் அடையாளங்களையும் திட்டமிட்டு வரலாற்றிலிருந்து நீக்கி விடும் முனைப்பின் ஓர் அங்கமாக இத்தகைய தொல்பொருள் சின்னங்களினதும், இந்துக் கடவுளர்களின் திருவுருவச் சிலைத் திருட்டுச் சம்பவங்களையும் கருதுவது தவறாக ஆக மாட்டாது. ✱

# குலமா? குணமா?

ஒரு நாள் ஆற்றுக்குக் குளிக்க போனார் ராமானுஜர் . அவருடன் கூட ,அவருடைய சீடர்களும் போனார்கள் . இது வழக்கமாக நடப்பது தான். அந்தச் சீடர்களில் உறங்காவில்லி என்று ஒருவர் ராமானுஜருக்கு நிறைய நெருக்கமான சீடர் . வேடர்குலம். எல்லோரும் ஆற்றில் குளிப்பார்கள்.

ராமானுஜர் தினமும் குளித்து முடித்துக்கொண்டு கரையேறும்போது இந்தச் சீடர் உறங்கா வல்லி அவர் பக்கத்தில் போய் நின்று அவர் தோளைப் பிடித்துக் கொண்டு கரையேறுவார். இவ்வாறு தினமும் இவ்வாறு நடக்கும் . இது மற்றசீடர்களுக்குப் பொறுக்கவில்லை ..... முணு முணுக்க ஆரம்பித்தார்கள் .''என்ன இது! இவர் குளித்த பின்னர் வேடர்மற குலத்தைச் சேர்ந்த அந்த ஆளைப் போய் தொடுகிறாரே'' என்று பேச ஆரம்பித்தார்கள் .

இது ராமானுஜர் காதுக்கும் எட்டியது . சில நாள்களுக்குப் பின் வழக்கம்போல் ஒருநாள் எல்லோரும் ஆற்றில் குளித்து விட்டு வந்தார்கள். வந்து பார்த்தால், அந்தச் சீடர்கள் முதல் நாள் துவைத்துக் காயப்போட்டிருந்த துணிகளெல்லாம் கிழிந்திருந்தன. ஒவ்வொருத்தர் வேட்டியிலும் ஒரு முழம் துணி காணாமல் போயிருந்தது.

ராமானுஜர் ''ஒரு முழம் தானே போய் இருக்கிறது. ஆனால் ஒன்றும் நஷ்டமில்லையே திருடியவனுக்கும் கருணை உள்ளம் இருந்திருக்கிறது; அதனால்தான் மீதி ஆடையை உங்களுக்காக விட்டுச் சென்றிருக்கிறான்'' என்று ஆறுதல் சொன்னார்.

இருந்தாலும் சீடர்கள் இதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ள வில்லை. அன்று முழுவதும் தியானம் செய்வதைக் கூட விட்டு திருடனைத் திட்டிக் கொண்டே இருந்தார்கள்.

அன்று இரவு உறங்காவில்லி வீட்டில் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டு அவர் வீட்டுக்குப் போனார்கள்-திருடர்கள். உறங்கா வில்லியினுடைய மனைவி பொன்னாச்சி ஒரு பக்கமாய்ச் சாய்ந்து படுத்திருந்தார்.

திருட வந்தவர்கள் வீட்டில் இருந்த பொருள்களையெல்லாம் திருடி முடித்ததும் கடைசியாக அந்த அம்மாவிடம் வந்தார்கள். அவருடைய ஒரு பக்கத்தோடு, ஒரு பக்க முக்குத்தி- ஒரு பக்கக் கொலுசு எனக் கழற்றி எடுத்தார்கள்.

அந்த அம்மாவுக்கு இது தெரிந்து விட்டது. இருந்தாலும் தூக்கம் கலைந்ததைக் காட்டவில்லை. ''அய்யோ பாவம் இவர்களுக்கு என்ன கஷ்டமோ தெரியாது வறுமையில் வாடுகின்றார்கள்'' போலும் இன்னொரு பக்கத்திலும் உள்ள நகைகளையும் எடுத்துக் கொண்டு போகட்டும் நான் தூக்கத்தில் புரண்டு படுப்பது போலவே படுப்போம் என்று நினைத்து திரும்பிப்படுத்தார் திருடவந்தவர்கள் பயந்த விட்டார்கள்.

இந்த அம்மா முழித்து விட்டார் போல இருக்கு என்று நினைத்துக் கொண்டு ஓடிப்போய் விட்டார்கள். நிறைய நேரத்திற்குப் பின் அந்த அம்மாவினுடைய வீட்டுக்காரர் உறங்காவல்லி வீட்டுக்கு வந்தார், மனைவியைப் பார்த்தார்.

''என்ன ஒரு பக்கத்து நகைகளைக் காணவில்லை!'' என்றார்.

அந்த அம்மா விவரத்தைச் சொன்னார். அதைக் கேட்டதும் இவருக்குக் கோபம் வந்து விட்டது.

''என்ன இது இப்படிச் செய்து விட்டாய்? வீடு தேடி வந்த திருடர் களை வருத்தப்படுவது போல் விரட்டி அடித்து விட்டாயே! நகைகள் உன்னுடையது நீ நினைத்தது உன்னுடைய ஆணவத்தையல்லவா காட்டுகிறது! இனி உன் னோடு வாழ நான் தயாராக இல்லை...! நீ உடனே உன்னுடைய பிறந்த வீட்டுக்குப் போ!'' என்று அனுப்பிவைத்தார்.

மறுநாள்

ராமானுஜர் தன்னுடைய சீடர்கள் அனைவரையும் கூப்பிட்டார். அவர்களை அமர வைத்துப் பேச ஆரம்பித்தார்.

''உங்கள் துணிகளை கிழிக்கிறதுக்கும், உறங்காவில்லி வீட்டில் கொள்ளையடிக்கிறதுக்கும் திருடர்களை அனுப்பினது நான்தான். அந்தத் திருடர்கள் பேறு யாரும் இல்லை. எமது சீடர்களில் இரண்டு பேரைத் தான் திருடர்களாகத் தயார் செய்து அனுப்பினேன். உறங்காவல்லி வீட்டில் என்ன நடந்தது என்று விவரத்தை அவர்களிடம் கேளுங்கள்!'' என்றார்.

அவர்களும் அங்கே ஒழிந்திருந்து தெரிந்து கொண்ட விவரத்தைச் சொன்னார்கள். அதன் பின்னர் மறுபடியும் ராமானுஜர் பேச ஆரம்பித்தார்.

''ஆடையில் ஒரு முழம் கிழித்ததற்காக நீங்கள் அந்தத் திட்டுத் திட்டினீர்கள். ஆனா அந்த உறங்காவில்லியும் - அவர் மனைவியும் நகைகள் எல்லாம் திருட்டுப் போன பிறகும் எப்படிப்பட்ட மனப்பான் மையோட ஒருத்தரோடு ஒருத்தர் போட்டி போட்டுக் கொண்டு நடந்து கொண்டார்கள் பார்த்தீர்களா? நீங்கள் எங்கே? அவர்கள் எங்கே?'' ''அப்படிப்பட்ட அந்தச் சீடர் - உறங்காவில்லியின் தோளில் நான் கை வைத்துக் கரை ஏறுவதனால் எந்தக் குறைபாடும் வந்து விடாது'' என்றார். சீடர்கள் திருந்தினார்கள்.


வில்லியும் - பொன்னாச்சியும் ராமானுஜரால் மறுபடியும் சேர்த்து வைக்கப்பட்டார்கள்.. அதனால் குலமா - குணமா? என்று கேட்டால் குணம்தான் பெரிது.

எனக்குத் தெரிஞ்ச இந்தக் காலத்து சாமியார் ஒருத்தர் இருந்தார் அவருக்கு ஆச்சிரமம் எல்லாம் உண்டு. பல சீடர்கள் அதில் ஒரு பிரதம சீடரும் இருந்தார்.

அந்தச் சாமியார் குளிக்கப் போனாலும் சரி... வேறு எங்கு போனாலும் சரி... குறிப்பிட்ட ஒரு சீடர் கையைப் பிடித்துக் கொண்டுதான் போவார், வருவார்.

''அந்தச் சீடர் மேல் தான் உங்களுக்கு நம்பிக்கை அதிகமா?'' என்று கேட்டார் ஒருத்தர்.

அப்படி இல்லை... அவனைத் தனியா விட்டுவிட்டால் ஆச்சிரமத்தில் இருப்பதையெல்லாம் கொள்ளை அடித்துக் கொண்டு போய்விடுவான். அதனால்தான் அவனை என் கைப் பிடியில் வைத்திருக்கிறேன்'' என்று அதற்கு விளக்கம் கொடுத்தார் அவர்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வரலாற்றுச் சிறப்பு மிக்கது புத்தூர் சிவன் கோயில்

ஞானி



(கடந்தவாரத் தொடர்ச்சி)

காலத்தால் முந்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படும் புத்தூர் சிவன் கோயில் பற்றிய சிறப்புகள் ஸ்ரீ தஷிண கைலாச புராண நவசைப் படலத்தில் விதந்துரைக்கப்படுகின்றது. '' புத்தூரில் உள்ள சிவன் கோயில் பற்றியும், அதன் தீர்த்தக் கேணி பற்றியும்; ஆலயத்தின் பயன்பாட்டுக்கு அமைக்கப்பட்டி ருந்த நந்தவனம் பற்றியும் பல இடங்களிலும் உள்ள அடியவர்கள் ஆலயத்தை வழிபட்டு பேறு பெற்றது பற்றியும் கூறப்படுகின்றது.

இதன் தீர்த்தக்கேணி நிலாவரை வற்றா நீர் ஊற்று. போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் அச்சுவேலிக்கு தெற்கே புத்தூரில் உள்ள இரண்டு பிரசித்திபெற்ற ஆலயங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதில் ஒன்று புத்தூர் சிவன் கோயில் என்றும் மற்றையது புத்தூர் காரைக்கூடல் வைரவர் கோயில் என்றும், கூறப்படுகின்றது. இதனை வரலாற்றுத் துறை பேராசிரியர் ப.புஷ்பரத்தினமும் தனது தொல்பொருள் ஆய்வுகள் மூலம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

''யாழ்ப்பாணத்து அரசன் சங்கிலியனுடன் நடைபெற்ற போரில் போர்த்துக்கேயர் வெற்றியடைந்ததை அடுத்து சங்கிலியனுக்கு உதவி புரிவதற்கு தென்னிந்திய நாயக்க வம்சப் படைகள் கடல் கடந்து வடமராட்சி ஊடாக புத்தூர் நோக்கி வந்ததாகவும்; அப்போது போர்த்துக்கேயப் படைகள் புத்தூரில் உள்ள இரண்டு ஆலயங்களையும் தமது பாதுகாப்பு அரண்களாக வைத்துக் கொண்டு நாயக்க வம்ச படைகளுடன் பெரும் சண்டையில் ஈடுபட்டதாகவும் சில தினங்கள் போர்த்துக்கேயப் படைகள் நடத்திய சண்டையில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், போர்த்துக்கே யரால் பெருமளவு போர் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், 1621 காலப் பகுதியில் இது நடந்ததாகவும்'' கூறப்படுகின்றது.

வீரகத்தி சிதம்பரநாதர் பற்றைகளை வெட்டி, பலா மரத்தடியில் அம்மனுக்கு ஓலையால் ஆலயம் அமைத்த வேளையில் காணப்பட்ட கட்டட இடிபாடுகள் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்ட ஆலயத்தின் இடிபாடுகளே என்றும், இந்த வகையில் ஆரம்பகால புராதன ஆலயம் கல்லால் கட்டுமானம் செய்யப்பட்ட ஆலயமாக இருந்தது. அதனை போர்த்துக்கேயர் தளமாகப் பயன்படுத்தி நாயக்க வம்சப் படைகளுடன் சண்டையிட்டனர் என்பதும் வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படுவனவாகும்.

1876- 1877 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் கல்லால் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பூதத்தம்பி சிற்றம்பலம் தலைமையில் திருப்பணிகள் நடைபெற்றதை அடுத்து விசேட பூசை வழிபாடுகளுடன் ஆண்டுதோறும் அலங்கார உற்சவம் பக்திபூர்வமாக நடைபெற்றதாகவும்; அதை அடுத்து சிவன், விசாலாட்சி அம்பாள்,விநாயகர், வைரவர் முதலிய விக்கிரகங்களையும் பிரதிட்டை செய்து ஆயலத் திருப்பணி மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் மூல மூர்த்தமாக ஸ்ரீ விசுவநாதப் பெருமானும், ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் உள்ளடக்கிய ஸ்ரீ விசாலாட்சி உடனமைந்த ஸ்ரீ விஸ்வநாதசுவாமி தேவஸ்தானமாக (சிவன்கோயிலாக) உருப்பெற்றது.

ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்யப்பட்டுள்ள காணிகள் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதியிலும் அமைந்திருப்பதால், நில மானிய முறையில் ஆலயத்தின் தேவைகள் நிர்வகிக்கப்படுவதோடு, வருமானமும் ஆலயத்தின் தேவைக்கு உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

1896 ஆம் ஆண்டு ஆறுமுகம் பூதத்தம்பி கோயிலுக்கான புதிய தீர்த்தக்கேணியை ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் நிர்மாணித்து பொழி கல்லால் படிகள் அமைத்து, திருக்குளத்தை பராமரிப்பதற்கு, சில காணிகளையும் வழங்கியுள்ளார். அவரின் உபயமாக தற்பொழுதும் ஆடிப்பூர தீர்த்த விழா நடைபெற்று வருகின்றது.

1901ஆம் ஆண்டு சிற்றம்பலம் மழவராயரால் ஆலயம் பொறுப்பேற்கப்பட்டு நித்திய, நைமித்தியக் கிரியைகள் ஒழுங்காக நடைபெறத் தொடங்கின. 1903 ஆம் ஆண்டு ஆலயத்தில் திருப்பணிவேலைகள் மீண்டும் ஆரம்பமாகின. 1911 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பூர்வ பட்ச சதய நட்சத்திரத்தில் முதலாவது திருக்குட முழுக்கு பெருவிழா நடை பெற்றது. 1911 ஆம் ஆண்டு அருணாசலம் கனகசபையால் அசையா மணிக்கோபுரம் அமைக்கப்பட்டு அசையாப் பெருமணி ஒலிக்கத் தொடங்கியது.

சிற்றம்பலம் மழவராயர் ஆலயத்தை பரிபாலனம் செய்த காலப் பகுதியில் அவரது மகன் கந்தையா தந்தைக்கு உதவியாக இருந்து ஆலயப் பணிகளை மேற்கொண்டு வந்ததோடு, பின்னர் ஆலயத்தைப் பொறுப்பேற்று பெருமளவு காணிகளையும் சொத்துக்களையும் ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்ததோடு, ஆல யத்தோடு இணைந்த சூழலில் பாடசாலையையும் நிறுவினார். அத்துடன் ஆலயம் - பாடசாலைக்கு வடக்குப் புறமாக புத்தூர் - சுன்னாகம் வீதியில் அன்ன சத்திரம், தங்குமிடம் என்பனவற்றையும் நிறுவி ஆன்மிகம், அறிவுப் பணி, அறப் பணி மூன்றையும் ஒன்று சேர மேற்கொண்டார்.

சிற்றம்பலம் மழவராயர் 1912 ஆம் ஆண்டில் தனது சொத்தில் பத்தில் ஒரு பங்கை ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்து உயில் எழுதப்பட்டதை அடுத்து மழவராயர் கந்தையா 1934 ஆம் ஆண்டும் பெருமளவில் காணிகள் மற்றும் சொத்துக்கள் தர்மசாதனம் செய்யப்பட்டு ஆலயத்தின் எந்த வகையான தேவைகள் உற்சவங்களுக்கு அவற்றில் இருந்து வரும் வருமானம் செலவு செய்யப்பட வேண்டும் என விவரித்துக் கூறப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்யப்பட்டுள்ள காணிகள் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதியிலும் அமைந்திருப்பதால், நிலமானிய முறையில் ஆலயத்தின் தேவைகள் நிர்வகிக்கப்படுவதோடு, வருமானமும் ஆலயத்தின் தேவைக்கு உரிய முறையில் பயன்படுத்தப் படுகின்றது.

ஆலயத்தின் திருக்குட முழுக்கு பெரு விழாக்கள் 1989 ஆம் ஆண்டு, 1999 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது அண்மையில் 2008 ஆம் ஆண்டு திருக்குடமுழுக்கு பெருவிழா நடை பெற்றது. ஆலயத்தில் சிவன் திருவிழா, அம்மன் திருவிழா என ஆண்டுதோறும் இரண்டு வகையான திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சிவன்திருவிழா ஆண்டு தோறும், ஆனி உத்திரத்தை தீர்த்தமாகக் கொண்டு 10 தினங்களும் அம்மன் திருவிழா ஆடிப்பூரத்தை தீர்த்தமாகக் கொண்டு 10 தினங்களும் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் 12 மாதமும் பௌர்ணமி உற்சவம்,தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், வைகாசி விசாகம், சித்திரை வருடப் பிறப்பு, புரட்டாசிச் சனி, ஐப்பசி வெள்ளி, மார்கழி திருவெம்பாவை உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தின் தற்போதைய நிர்வாகம் மழவராயர் கந்தையாவின் பரம்பரை வழித்தோன்றலும் ஆலய உரிமையாளருமான ஸ்ரீ தேவசேனாவின் கணவன் த.விசுவலிங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் திருப்பணிகள் மற்றும் கருமங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஆலோசனைச் சபை ஒன்றும் பெயரளவில் உள்ளது.

(முற்றும்)

# 40,000 போலி வைத்தியர்கள்

### சுகாதார அமைச்சு தகவல்


கொழும்பு,மார்ச் 29

இலங்கை முழுவதும் சுமார் 40,000 போலி வைத்தியர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

''இதனால் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இந்தப் போலி வைத்தியர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது'' என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்யாமல் சிகிச்சை அளிப்பதோ, மருந்து வழங்குவதோ தண்டனைக்குரிய குற்றம் என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ச)



கம்பளை தேர்தல் தொகுதியில் பொது மக்கள் நன்மை கருதி புதிதாக அமைக்கப்பட்ட 5 மின் சார விநியோகத் திட்டங்களை பிரதமர் தி.மு. ஜயரத்ன நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

# பொலிஸ் நிலையங்கள் ஒரே வலையமைப்பில்

கொழும்பு,மார்ச் 29

நாட்டின் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் ஒரே வலையமைப்பின் கீழ் கொண்டுவரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் தலைமையகத்துக்கும் நாட்டின் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் இடையில் நேரடியான இணைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

இதன் முதலாம் கட்டப் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதம் அளவில் பூர்த்தியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலையமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைகள், சுற்றிக்கைகள் போன்றன நேரடியாகவே வலையமைப்பில் இணைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் இடையில் நேரடியாக வீடியோ உரையாடல்களை நடத்தும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்காக 41 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. (ச)

# கொழும்பு மாவட்ட எம்.பி. எண்ணிக்கை குறையும்

### தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தகவல்

கொழும்பு, மார்ச் 29

கொழும்பு மாவட்டத்துக்கான நாடாளுமன்ற ஆசனங்களில் ஒன்று குறைக்கப்படவுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். தற்போது இருக்கும் பட்டியலில் இருந்து 62,000 வாக்காளர்கள் குறைவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தற்போதுள்ள 19 என்ற நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 18 ஆகக் குறைக்கப்படும்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வாக்காளர் பட்டியலில் இரட்டைப்பதிவு வழுக்கள் சீர் செய்யப்பட்டதை அடுத்து, கொழும்பு மாவட்ட வாக்காளர் எண்ணிக்கை குறைந்துள்ளதால் ஒரு ஆசனத்தை கொழும்பு மாவட்டம் இழக்கவுள்ளது.

கொழும்பு மாவட்ட வாக்காளர் பட்டியலில், 62,700 இரட்டைப் பதிவுகள் இருப்பதை தேர்தல் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது. இதனால், வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இலங்கை முழுவதும் ஒரு லட்சத்து 65,000 பேர் இரண்டு இடங்களிலும், ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் மூன்று இடங்களிலும் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளமை தேர்தல் திணைக்களத்தினால் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வெவ்வேறு மாவட்டங்களில் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளோர் ஏதாவது ஒரு மாவட்டத்தில் தமது பதிவை நீக்குவதுக்கு தேர்தல் திணைக்களம் கொடுத்திருந்த கால அவகாசம் கடந்த 20ஆம் திகதி முடிவுக்கு வந்துள்ளது.

இதனையடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் வாக்காளராகப் பதிவு செய்துள்ள வாக்காளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றனர்.(ச)

## சிரேஷ்ட நபர்களுக்கு விசேட அடையாள அட்டை

கொழும்பு,மார்ச் 29

சிரேஷ்டநபர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

சிரேஷ்ட நபர்களுக்கு சலுகைகளை வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக சிரேஷ்ட நபர்களுக்கான செயலகத்தின் பணிப்பாளர் திருமதி. ஜே.கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

2050 ஆம் ஆண்டளவில் நாட்டின் முதியோரின் எண்ணிக்கை 27 வீதமாக உயர்வடையும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதியவர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தீப்பெட்டியின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கும்

கொழும்பு, மார்ச் 29

தீப்பெட்டி ஒன்றின் விலையை ஐந்து ரூபாவால் அதிகரிப்பதற்குத் தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

அதற்கமைய, இதுவரை நான்கு ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட தீப்பெட்டியொன்றுக்கு அடுத்த வாரத்தில் இருந்து மேலதிகமாக ஐந்து ரூபாவைப் பாவனையாளர்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

எரிபொருள்களின் விலையேற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள தாக்கமே தீப் பெட்டியின் விலையை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ச-22)

## 463 பேரின் பெறுபேறுகள் நிறுத்தி வைப்பு

கொழும்பு, மார்ச் 29

2011ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ சாதாரண பரீட்சை முடிவுகளில் 463 மாணவர்களின் முடிவுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களை கருத்திற் கொண்டே இந்த மாணவர்களின் முடிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

# நூதனசாலைத் திருட்டு 52 பேரிடம் விசாரணை

### இரகசியப் பொலிஸார் தகவல்

கொழும்பு, மார்ச் 29

கொழும்பு தேசிய நூதனசாலையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் இதுவரை 52 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இந்த வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இரகசியப் பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

நூதனசாலை பாதுகாப்புக் கமரா குறித்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அறிக்கை கோரியுள்ளபோதும் இதுவரை அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்று இரகசிய பொலிஸார் கூறியுள்ளனர்.

நூதனசாலையில் இருந்து மீட்கப்பட்ட ஒருவகை திரவம் டி.என்.ஏ. பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கையும் இதுவரை கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கம்புலி, வழக்கை எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். அன்றைய தினம் இந்தச் சம்பவம் குறித்த விசாரணை அறிக்கை சமர்பிக்குமாறு இரகசியப் பொலிஸாருக்கு நிதிவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மலையகத்துப் பெண்களின் வாழ்வு மேம்பட வேண்டும்

### பிரபா கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்29

பெருந்தோட்டங்களில் தொழில் புரியும் பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு மலையக அரசியல்வாதிகள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெருந்தோட்டங்களில் வாழும் தோட்டத் தொழிலாளப் பெண்கள் கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் பின்தங்கியுள்ளார்கள். அதே போல் விழிப்புணர்வற்றவர்களாகவும் விளங்கிவருகிறார்கள். இவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும். வெறும் விளம்பரத்துக்காக மகளிர் தினத்தைக் கொண்டாடுவதன் மூலமாக இவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்த முடியாது.

இன்றைய தோட்டங்களில் பெண்கள் எந்த நிலையில் வாழ்ந்துவருகிறார்கள் என்பது ஒரு குழந்தைக்குக் கூடத் தெரியும். நிலைமை இப்படி இருக்கையில் தோட்டத்துப் பெண்கள் எல்லோரும் முன்னேறிவிட்டார்கள் என்று சொல்லி இவர்கள் யாரை ஏமாற்றப் போகிறார்களோ தெரியவில்லை. நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்கள் மத்தியில் உள்ள விழிப்புணர்வினதும், முன்னேற்றத்தினதும் 25 வீதம்கூட பெருந்தோட்டங்களில் வாழும் பெண்களிடம் இல்லை.

இவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய பிரசாரத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். கட்டாயக் கல்வி முறைமை ஏற்படுத்தப்படவேண்டும். - என்றார். (ச)

## போதைப் பொருள் வைத்திருந்தவர் கைது

கொழும்பு, மார்ச் 29

கற்பிட்டி, பத்தலங்குண்டு பிரதேசத்தில் கடற்படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

ஒவ்வொன்றும் 240 மில்லிகிராம்களைக் கொண்ட ஹெரோயின் போதைப்பொருளடங்கிய 30 பைக்கட்டுக்கள் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

# கைவிடப்பட்டது ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச் 29

கொழும்பில் சட்டத்தரணிகள் நடத்திவந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கோட்டை பிரதேசத்தில் சட்டத்தரணி ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்தும் சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு கோரியும் கடந்த சில நாள்களாக சட்டத்தரணிகள் போராட்டம் நடத்தி வந்தனர்.

சந்தேகநபர்களை கைது செய்வதாக பொலிஸார் அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து சட்டத்தரணிகளின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கோட்டே ரஜமஹா விகாரை பௌத்த பிக்குகள் இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மீது பௌத்த பிக்கு உள்ளிட்ட சிலர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இவ்வாறு தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யுமாறே கொழும்பு நீதிமன்ற சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரும்பு விற்பனை நிலையத்தில் தண்டவாளப் பாகங்கள் மீட்பு

### பொலிஸாரால் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 29

புத்தளம், ரத்மல்யாய பகுதியில் இரும்பு வியாபாரம் செய்யப்படுமிடத்திலிருந்து இலங்கை புகையிரதத் திணைக்களத் துக்குச் சொந்தமான தண்டவாளத்தின் பாகங்கள் மற்றும் இதர பகுதிகளை நேற்று முன்தினம் புத்தளம் பொலிஸார் கைப்பற்றினர்.



இரும்பு விற்பனை செய்யுமிடத்திருந்து லொறியில் ஏற்றும்போது இவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு நபர்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட துடன், இது தொடர்பாக புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## G.C.E O/L RESULTS - 2011
## RAVEENS ENGLISH MEDIUM CLASSES KARAVEDDY

| NAME | RESULT | ENG | RELI | MAT | TAMI | SCI | HIST | OPTIONAL-SUB ENLIT | ICT | GEO | COM(TA) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. T.GOHULAN | 8A1B | A | A | A | A | A | A | B | A | A | - |
| 2. K.ARTHIKA | 8A1B | A | A | A | A | A | A | B | A | A | - |
| 3. P.VAIGUNTHAN | 8A1C | A | A | A | A | A | A | C | A | A | - |
| 4. T.MAOLOGAN | 8A1C | A | A | A | A | A | A | C | A | A | - |
| 5. S.JASEETHA | 7A2B | A | A | A | A | A | B | B | A | - | A |
| 6. S.VITHURSHA | 7A2B | A | A | A | B | A | A | B | A | - | A |
| 7. T.PIRAVEEN | 6A3B | A | A | A | A | A | A | B | B | B | - |
| 8. S.SOMINI | 6A2B1C | A | A | A | A | B | A | C | B | - | A |
| 9. R.ATHAVAN | 6A2B1S | A | A | A | A | B | A | S | B | - | A |
| 10. K.NIROJAN | 5A4B | A | A | A | B | B | A | B | B | A | - |
| 11. S.SATHEESWARAN | 5A4B | A | A | A | B | B | A | B | A | B | - |
| 12. S.VINOTHAN | 5A3B1C | A | A | A | B | A | B | C | A | B | - |
| 13. T.THAGSHA | 4A4B1C | A | A | A | A | B | C | B | B | - | B |
| 14. A.VAIKARAN | 4A3B2C | A | A | A | A | B | C | C | B | - | B |
| 15. E.ANITHA | 4A1B3C1S | A | A | A | A | C | S | C | C | - | B |
| 16. S.PIRATHEEP | 3A3B3C | A | A | A | B | C | B | C | B | - | C |
| 17. M.THIVASANGAR | 3A3C3S | A | A | A | C | S | C | S | S | - | C |

DIRECTOR-P.EASWARANATHAN B.Sc(Agr)Hons Dip.In.Edu
KARAVEDDY EAST - KARAVEDDY. T.P: 0212263321
WEB: www.raveensemc.com
e-mail: info@raveensemc.com

# சங்கீத சபையின் செயன்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 29

வட இலங்கை சங்கீத சபையால் தரம்- 1 முதல் 4 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 12 ஆம் திகதி வியாழக்கிழமைவரை நடத்தப்பட வுள்ளன.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யா/ இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி றிபேக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலேயே பரீட்சைகள் இடம் பெறவுள்ளன.

வெளிமாவட்ட பரீட்சார்த்திகளில் தரம் ஒன்று தொடக்கம் 4 வரையானவர்களுக்கான செய்முறை பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைவரை தெரிவு செய்யப் பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெற வுள்ளன.

தரம்-5, 6 இற்கான செய்முறைப் பரீட்சைகள் யாழ். மாவட்டம் மற்றும் வெளிமாவட்ட பரீட்சாத்திகளுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் எதிர் வரும் 7 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன எனவும் அனைத்து பரீட்சார்த்திகளையும் குறித்த பரீட்சை நிலையங்களில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் வட இலங்கை சங்கீத சபையின் தலை வருமான வை.செல்வராசா குறிப்பிட்டுள்ளார்.

(ம-13)

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இவ்வுலகில்
19.06.1942

இறையுலகில்
25.03.1996

திதி: ஸப்தமி

அமரர்
**முருகேசு பாலசிங்கம்**
(சந்தம்புளியடி-காரைநகர்)

எத்தனை ஆண்டுகள் ஓடிமறைந்தாலும்
'' எங்கள் வாழ்வு'' உங்கள் நினைவுகளுடன் தான்
நித்தம் நிகழும் நிகழ்வுகளிலெல்லாம்
நீங்காத உங்கள் நினைவுகள்தான்

118/2, சிவராஜா அவெனியூ,
பலாலி வீதி, திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

திருமதி பா.யோகமலர் (மனைவி)
குடும்பத்தினர்.

(C204) (6,9,10)

## நீத்தார் திங்கட் கடன் அழைப்பு

கடந்த (29.02.2012) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி



பிறப்பு
1936-05-18

இறப்பு
2012-02-29

அமரர்
**பொன்னம்மா இராசதுரை**
(சீனியம்மா)

அவர்களின் நீத்தார் திங்கட்கடன் (அந்தியஸ்தி) இன்று (29.03.2012) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணி அளவில் ''ஞானவில்லா'' கரவெட்டி, மத்தி புதிய அம்பம் வைத்திய சாலை அருகிலுள்ள அவர்களது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியம் நடைபெறும் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''ஞானவில்லா''
புதிய அம்பம் வைத்தியசாலை
அருகில், கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

இராசதுரை (கணவர்)
மற்றும் குடும்பத்தினர்.

(12705) (6,9,10)



அம்பாள் துணை

## நயினாதீவு ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்பாள் கோயில்

### பாலஸ்தாபன கும்பாபிஷேகம் - 30.03.2012

அருள்மிகு ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்பாளின்
திருவருளால் நிகழும் கரவருஷம்
பங்குனித் திங்கள் 17 ஆம் நாள் (30.03.2012)
வெள்ளிக்கிழமை
**காலை 7 மணிதொடக்கம் 7 .45 மணி**
வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் அம்பாளுக்கும், ஏனைய மூர்த்திகளுக்கும்

### பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் அனைவரும் வருகைதந்து கும்பாபிஷேகத்தின் முன்பும், பின்பும் நடைபெறும் கிரியைகளை தரிசித்து இஷ்டசித்திகளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

இன்று (29.03.2012) வியாழக்கிழமை அதிகாலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகும்.

### கும்பாபிஷேக குருமணி

நயினை ஆகமபிரவீணா
*சிவஸ்ரீ கையிலாயநாத வாமதேவக் குருக்கள்*
(நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய ஆதீனகுரு)
அறங்காவலர் சபை
ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோயில்
நயினாதீவு (16138) (45.6.9)

**Kids Computer SCHOOL**

யாழ். நகரில் முதல் முறையாக அரச மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களுக்கான விசேட கொம்ப்யூட்டர் பயிற்சி நிலையம்

சிறுவர்களின் எதிர்காலத்திற்கு தேவையான அடிப்படை கணினி பயிற்சிகள்

- Junior Diploma in Computer Science
- Junior Diploma in Computer Programming
- Junior Diploma in Graphics & Animation
- Junior Diploma in Digital Creativity
- Diploma in Digital Pre Press
- Diploma in Cartoon Animation



CSC



இலகுவான விளக்கங்களுடன் இலவச பாடப்புத்தகங்கள்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்
பாடசாலைக்கல்வி மற்றும் தனியார் வகுப்புக்கள் (ரியூஷன்)
பாதிக்காத வகையில் பயிற்சி நேரங்களை தெரிவுசெய்யலாம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம் 30/3/2012 மற்றும் 2/4/2012

**இப்பயிற்சியின் சிறப்பம்சங்கள்**
- 7 வயது முதல் 14 வயதுள்ள சிறுவர்கள் மேற்குறிப்பிட்ட பயிற்சிகளில் இணைந்து கொள்ளலாம்
- கணனி உலகில் தடம்பதிக்க இதுவே சரியான தருணம்
- குழந்தைகளின் கணனி அறிவையும். கலை உணர்வையும் கொம்ப்யூட்டரில் வெளிப்படுத்தும் கிராபிக்ஸ் கோர்ஸ்
- கொம்ப்யூட்டரில் ஓவியம் வரைதல். வண்ணங்களை அளித்து அசைய வைத்தல் ஆகியன கற்கலாம்
- ஒலி-ஒளி ஸ்பெஷல் எபெட்ஸும் கற்றுக்கொள்ளலாம்
- சிறு வயதிலேயே கிராபிக்ஸ் அறிவை ஊட்டி வருங்காலத்தில் பெரிய வல்லுனராக்கலாம்

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

All Parents & Students are invited for Free Demo
#9, குமார வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம் T.P-021 2229191

## நெஞ்சை விட்டகலா
## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
04 ★ 01 ★ 1933

மறைவு
01 ★ 04 ★ 2009

*அமரர்* **தம்பு தியாகராசா** (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
**B.A(Hons)(Mad).B.A(special)Dip.in(Cey)**

எங்கள் குடும்ப ஒளிவிளக்கே பாசத்தின் பிறப்பிடமே!
பார்க்கும் இடமெல்லாம் எம் பார்வையுள் தெரிகின்றீர்கள்
3 ஆண்டுகள் உருண்டு ஓடி விட்டது
எம் இதயத்தில் உம் நினைவுகள் என்றும் வளர்பிறையே
கண்ணிவே நீரும் கூட்டி கலங்கியே நிற்கின்றோம் - நீங்கள்
மண்ணிலே வாழுங்காலம் மறுபடி எப்போதென்று!
காலமெல்லாம் நம் சந்ததிக்குத் துணையாக
நற்தெய்வமாய் நின்று வழிகாட்டுவீர்
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
சந்திரசேகரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.22, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# ஆங்கில ஆசிரியரை உருவாக்க அமெரிக்க உதவி நாடப்படுகிறது

## மட்டக்களப்பு சந்திப்பில் வலியுறுத்து

மட்டக்களப்பு,மார்ச் 29

கிழக்கில் ஆங்கில ஆசிரிய பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு 1984 ஆம் ஆண்டில் ஆங்கில ஆசிரியர்களை உருவாக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது போல் மீண்டும் ஒரு பயிற்சித் திட்டத்தினை உருவாக்கித் தருமாறு மட்டக்களப்பில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அமெரிக்க நிலையத்தின் பணிப்பாளர் கிறிஸ்டோபர்ரீலிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை மட்டக்களப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சந்தித்துப் பேசியபோதே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

பயிற்சித் திட்டத்தை ஆரம்பிக்க அமெரிக்க வள நிலையம் ஒன்றை மட்டக்களப்பில் நிறுவுவதற்குப் பொருத்தமான இடம் ஒன்றை அடையாளப்படுத்தித் தருமாறு கிரிஸ்டோபர் ரீல் கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து பயிற்சித் திட்டத்துக்கான நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இடம்ஒதுக்கித்தருவதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் கிறிஸ்டோபர் ரீல் மேலும் தெரிவித்ததாவது:

இளைஞர்களுக்கான அபிவிருத்தி தொடர்பான நிதிகள் ஒதுக்கப்படும்போது, மட்டக்களப்பு உள்ளூர் அரச சார்ற்ற நிறுவனங்கள் கூடுதலாகப் பங்குபற்ற வேண்டும். அமெரிக்காவுடனான மாணவர் பரிமாற்றத் திட்டத்தில் கூடுதலாக பங்கெடுக்க வேண்டும். அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு வந்து அறிஞர்கள் பணிபுரிய வேண்டும். அத்துடன் இலங்கையிலிருந்து அதிகமானவர்கள் அமெரிக்கா சென்று கல்வி கற்க வேண்டும்.

சுற்றுலாத் துறைசார்ந்த விடயத்தில் சிறிய, நடுத்தர தொழில்துறைகளை ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா அதிக அக்கறை கொண்டுள்ளது.

இலங்கையில் தேசிய இனங்கள் நீண்டகால நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே ஜெனிவாவில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை முழுமையாக வாசித்துப் புரிந்து கொள்ளாதவர்களே இதுசம்பந்தமான பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள்.

இலங்கையில் தேசிய நல்லிணக்கம் உருவாவதற்கான பங்களிப்புக்கு அமெரிக்கா தயாராக உள்ளது.

அமெரிக்காவுக்கு தேசிய நல்லிணக்கம் தொடர்பில் அனுபவம் உண்டு. பெரு நாட்டில் இதே விதமாக 15 வருடமாக நீடித்த மோத லுக்குப் பின்னர் உண்மையைக் கண்டறியும் குழுவின் முயற்சியினால் ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்கம் இன்றும் நீடிக்கிறது.- என்றார். (ச)



கிழக்கு மாகாணத்தின் முதலாவது மருத்துவக் கண்காட்சி நேற்று புதன்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட அரசடி வளாகத்தில் ஆரம்பமானது. இந்த நிகழ்வில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கலந்துகொண்டு கண்காட்சியை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு,மார்ச் 29

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டபத்தடி பிரதேசத்தில் ஒரு தொகுதி ஆயுதங்களை நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

தமக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் தேடுதல்களின் போது முன்பும் இவ்வாறு ஆயுதங்கள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கஞ்சா கடத்திய மூவர் கைது

அம்பாறை,மார்ச் 29

அம்பாறை, பொத்துவில், சியம்பலாண்டுவ பிரதான வீதியில் கஞ்சாவுடன் ஓட்டோவில் பயணித்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொத்துவில் பொலிஸ் நிலைய அதிகாரிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை ஓட்டோ ஒன்றை மறித்துச் சோதனை செய்தபோது அதிலிருந்து 1 கிலோ 15 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதனையடுத்து ஓட்டோவைக் கைப்பற்றிய பொலிஸார் அதில் இருந்த மூவரையும் கைது செய் துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சியம்பலாண்டுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் பொத்துவில் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். (ச)

## பல்கலை. மாணவனுக்கு 5 வருடம் வகுப்புத் தடை

பேராதனை, மார்ச் 29

பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களை தாக்கினார் என்று குற்றஞ் சாட்டப்பட்ட நுவான் சமீர என்ற மாணவனுக்கு ஐந்து வருடகால வகுப்புதடையை பல்கலைக் கழக நிர்வாகம் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை விதித்துள்ளது.

புவியியற்துறை பேராசிரியர் சாந்த ஹென்னாயக்கா, விவசாயத்துறை பேராசிரியர் ஒருவர் ஆகியோரை தாக்கினார் என்ற குற்றஞ்சாட்டு விசாரணையில் நிரூபிக்கப்பட்ட பின்னர்இந்த மாணவனுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவனின் வகுப்பு தடையை எதிர்த்து பல்கலைகழக மாணவர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

## யானை தாக்கியதில் ஆசிரியை படுகாயம்

வெல்லாவெளி,மார்ச் 29

போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாலையர்கட்டுப் பகுதியில் பாலர் பாடசாலை ஆசிரியை ஒருவரை யானை தாக்கியதில் அவர் படுகாயம் அடைந்தார்.

சிகிச்சைக்காக அவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

பாலையர்கட்டு பாலர் பாடசாலையில் கற்பிக்கும் இந்த ஆசிரியை (வயது-20) செவ்வாய்க்கிழமை 2.30 மணிக்குத் தனது வீட்டில் இருந்து சென்ற போது யானையால் தாக்கப்பட்டார்.

உடனடியாகக் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் பின்னர் மேலதிகச் சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டார். (ச)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை 30.03.2012 பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

**குறிப்பு:** எம்மிடம் புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர் களிடம் திரும்பவும் இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

**தொடர்பு:**

நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944.

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.0776225944.

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை, 0778996085.

(16102)(6,7,12)

**கல்வாரிகளம்**

சாவகச்சேரி கச்சாய் வீதி, புனித லிகோரியார் ஆலய பங்குமக்கள் தயாரித்து வழங்கும்

**"திருப்பாடுகளின் காட்சி"**

இடம் : ஆலய வளாகம்
திகதி : 30.03.2012(வெள்ளிக்கிழமை)
நேரம் : இரவு 7 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம் இலவசம்

மேடை
மேடை அலங்காரம்
ஒப்பனை
ஒலி,ஒளி
} சாள்ஸ் மீசாலை

(16124)(6,9,12)

பங்குத் தந்தையும்,பங்கு மக்களும்.

**விற்பனைக்கு**

பாவனையில் உள்ள Computer உபகரணங்கள் (NET CAFE) விற்பனைக்குண்டு.

தொ.பே. 077 658 9752

(16137)(45.8.9)

**விற்பனைக்குண்டு**

40 நாள்கள் நிரம்பிய கறுப்பு, வெள்ளை கொக்கஸ் பனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ஒன்றின் விலை (10,000) பத்தாயிரம்.

தொடர்பு: 021 300 6646
பஞ்சாட்சர நாதன்
குளங்கரை, கொக்குவில் கிழக்கு, (ஆதிரா பார்மசிக்கு அருகில்)

(16138)(45,8,9)

**மலிவு விற்பனை**

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் JAPAN SONY WEGA FLAT TV கள் 21'',25'' - 13,500/=, 29''-16,000/=, 12'' BOX - 12,000/=, பைனியர் AMP -10,000/= குளிர்சாதனப் பெட்டிகள், 19,500/= C.D ரேடியோ கசெற் - 3000/=

தொடர்பு: 077 0440570
சோனி ரேட் சென்ரர்
(கொமர்ஷல் வங்கி எதிரில்), 56, K.K.S வீதி, கன்னாதம்

**கூலித் தொழிலாளர்கள் தேவை**

சோடா போத்தல்கள் ஏற்றி இறக்குவதற்கு கூலியாள்கள் தேவை.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**உங்களுக்கு சுத்திகரிப்புத் தேவைகளில் பிரச்சினையா?**

உங்களுக்கான எமது சேவைகள்

நிறுவனங்கள், வீடு, ஹோட்டல், Tiles, அல்ஹபோன் பார்டிஷன், ஷோ றூம், Show Room Glass, Floor Polishing / Vaccine / Carpet Shampoo போன்ற சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்


**Specialized Janitorial Services**

தொடர்பு: இல. 536/1 கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி,யாழ்ப்பாணம்.
T.P: 021 4921108, 0777286069

**சட்டமாணிக்கற்கை (LL.B-U.K)**

**யாழ்ப்பாணத்தில் முதல்தடவையாக**

★இலங்கை மற்றும் சர்வதேச அங்கீகாரம்
★முதல் 100மாணவர்களுக்கு விசேடசலுகை கட்டணம்



நாளை நீங்களும் சட்டத்தரணிஆகலாம்

**வழிகாட்டிக் கருத்தரங்கும் பதிவுகளும்**

திகதி:-31.03.2012, 01.04.2012
நாள்கள் :-சனி, ஞாயிறு
நேரம்:- 2.00 P.M - 5.00P.M

T.P:-0775949272



இடம்:- யாழ்ப்பாணக் கல்லூரி (பட்டப்படிப்புக்கள் பிரிவு)
போதனாவைத்தியசாலை முன்பாக
இல.464, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



பிறப்பு
1958★11★09

இறப்பு
2012★03★02

அமரர் **கனகன் ஜெயம்**

கடந்த (2012.03.02) இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனலைதீவு (16103)(6-9-8) குடும்பத்தினர்

**ஆத்ம சாந்திப் பிரார்த்தனை**



அமரர்
**சிவலிங்கம் கதிர்காமத்தம்பி**

எமது ஆலயத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவரும் பரிபாலனசபை செயலாளராக சிறந்த முறையில் செயலாற்றியவரும் எமது தந்தையாரிடம் மிகுந்த அபிமானமுடையவருமான திரு. சிவலிங்கம் கதிர்காமத்தம்பி 29.02.2012 அன்று அமரத்துவமடைந்தமையிட்டு மனம் வருந்துகின்றோம். 30.03.2012 வெள்ளிக்கிழமை அன்னாரது 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது. நீர்வைக்கந்தன் பாத நிழலில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

ஸ்ரீகந்தசுவாமி தேவஸ்தானம், நீர்வேலி. (16125)(6-7-8) இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள்

# தென்னைகளை வெட்டியமை அரசியல் அடாவடிச் செயல்

## அட்டாளைச்சேனை பிரதே சபை தவிசாளர் குற்றச்சாட்டு

அட்டாளைச்சேனை,மார்ச் 29

காணி உரிமையாளர்களின் அனுமதி பெறப்படாமல் அட்டாளைச்சேனை, கோணாவத்தை ஆற்றினை அண்மித்த ஏழை மக்களின் குடியிருப்பு நிலங்களில் இருந்த நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டமையானது அரசியல் அடாவடித்தனத்தின் செயலாகும் என்று கண்டித்துள்ளார் அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர்.

''தான்தோன்றித்தனமான அதிகாரங்களும், அடாவடித்தன அரசியலும் வரலாற்றில் ஒரு போதும் நின்று நிலைத்ததில்லை'' என்றும் ஏ.ஏல். எம்.நசீர் தெரிவித்தார்

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-


கோணாவத்தை ஆற்றங்கரையோர காணிகளில் உள்ள தென்னை மரங்களின் மூலமாக ஓரளவு வருமானத்தைப் பெற்று வந்தார்கள். ஆனால், இப்போது அவர்களின் காணிகளிலிருந்த தென்னை மரங்கள் எந்தவித அனுமதியும் பெறப்படாமல் நள்ளிரவில் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன.

இந்தச் செயலால் பல காணி உரிமையாளர்கள் தென்னைகள் மூலமாகப் பெற்று வந்த வருமானம் இழக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் என்கிற வகையில் என்னிடம் முறையிட்டுள்ளதோடு, இது தொடர்பில் தமக்கு உரிய நியாயத்தினைப் பெற்றுத் தருமாறும் கோரியுள்ளனர்.

நிலத்தை அரிக்காமல் சுமார் 30 வருட காலமாக இந்தத் தென்னை மரங்கள் சூழலுக்கு பாதுகாப்பாக இருந்தன. ஆனால், இப்போது அந்த மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டமையால் சூழலுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அபிவிருத்தி என்பது மக்களுக்கு நன்மைகளை வழங்கும் பொருட்டு செய்யப்படுகின்றவையாகும். ஆனால், மக்களுக்கு பயன் தரும் மரங்களை அழித்து விட்டுச் செய்யப்படுபவை ஒருபோதும் அபிவிருத்தி ஆகாது.

கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெப்பை இவ்வாறு நூற்றுக்கணக்கான தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தியிருப்பதன் மூலம் பல ஏழை மக்கள் அன்றாட வாழ்வைக் கூட கொண்டு செலுத்தமுடியாதுள்ளனர். -என்றார். (ச)



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் பாலமுனை கிராமத்தில் 55 மில்லியன் ரூபா செலவில் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. வீதி புனரமைப்பு ஆரம்ப நிகழ்வில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதா உல்லா கலந்து கொண்டு பெயர் பலகையை திரைநீக்கம் செய்கின்றார்.

## வாகன விபத்தில் ஒருவர் சாவு; நால்வர் காயம்

நுவரெலியா, மார்ச் 29

அலவத்துகொடை பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் இறந்ததுடன், 4 பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ் ஒன்று லொறியுடன் நேருக்குநேர் மோதுண்டே இந்த விபத்து ஏற்பட்டதாக அலவத்துகொடை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.பண்டார தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் அலவத்துகொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கொல்களத்தை மூட உத்தரவு

மட்டக்களப்பு,மார்ச் 29

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்திலுள்ள கொல்களத்தை எதிர்வரும் ஜுன் மாதம் 15 ஆம் திகதியுடன் மூட வேண்டும் என்று காத்தான்குடி நகர சபைக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி சிவபாதசுந்தரம் இந்த உத்தரவை விடுத்தார்.

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள கொல்களத்தை மூடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரி மக்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த வருடம் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.அப்துல்லா, கடந்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் இந்தக் கொல்களத்தை மூட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து காத்தான்குடி நகர சபை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த வருடம் மேன்முறையீடு செய்தது.

இந்த நிலையிலேயே எதிர்வரும் ஜுன் மாதம் 15ஆம் திகயுடன் கொல்களத்தை மூட வேண்டும் என்றும் அதுவரை கொல்களத்தை சுகாதார ரீதியாக பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாதவாறு கவனிக்க வேண்டும் என்றும் நகர சபைக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

## 15 சமுர்த்தி அலுவலர்களின் பதவிகள் பறிப்பு

நுவரெலியா,மார்ச் 29

நுவரெலியா மாவட்டத்தில் நிதி மோசடி செய்த 15 சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பதவி நீக்கப்பட்டுள்ளது என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜீ.குமாரசிறி தெரிவித்தார்.

இந்த 15 பேரும் நுவரெலியா மாவட்ட சமுர்த்தி வங்கிகள் ஊடாக 98 லட்சம் ரூபா நிதி மோசடி செய்துள்ளனர் என்று அவர் கூறினார்.

சமுர்த்தி பெறுவோர் என்று போலியான பெயர்களைச் சமர்பித்து சமுர்த்தி வங்கிகளில் கடனுக்கு பணம் பெற்று இவர்கள் மோசடி செய்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிதி மோசடி 2005 ஆம் ஆண்டு நடந்துள்ளது. (ச)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணில் 1951 ★ 01 ★ 15

விண்ணில் 2012 ★ 02 ★ 28

அமரர் சரஸ்வதி கந்தசாமி

28.02.2012 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி அமரர் சரஸ்வதி கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியகிரியைகள் இன்று (29.03.2012) வியாழக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும்.

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலய அன்னதானமண்டபத்தில் நடைபெறும். அன்றையதினம் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை

(16134)(6-9-8)

கணவர் கந்தசாமியும்,
மக்கள், மருமக்கள்



8ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1948 • 08 • 20

மறைவு 2012 • 03 • 22

மரியாம்பிள்ளை மேரிறோஸ்
(மணி)

அம்மா எங்கள் இதயக் கோயிலில்
வாழும் அன்புத் தெய்வமே
எட்டு நாள்கள் ஆன போதிலும்
பரிதவிக்குதே இன்னும் எம் உள்ளம்.
உங்களைக் காண ஏங்குது எம் உள்ளம்
எம் ஏக்கத்தைத் தீர்க்க
வருவீர்களா மண்ணுலகம்
தெய்வமாகி விட்ட எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டைக்காடு,
முள்ளியான்,
வடமராட்சி கிழக்கு.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

(16141) (6.9.10)




தெளிவான மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# மீண்டும் போராட்டத்தில் குதிக்க பல்கலை. ஆசிரியர்கள் முடிவு

கொழும்பு, மார்ச் 29

அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மீண்டும் தொழிற் சங்கப் போராட்டத்தில் குதிக்க வுள்ளனர் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கல்வித் துறையின் நெருக்கடி தொடர்பான பிரச்சினைகள் குறித்து உயர் கல்வி அமைச்சுடன் பேசுவதை கைவிட்டு அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையிலேயே இந்தப் போராட்டத்தை நடத்துகின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் ஏப்ரல் 26ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறும். குறித்த தினத்தில் கொழும்பில் பொது ஆர்ப்பாட்டமும் நடைபெறும் என கூறி யுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அந்தச் சங்கத்தினர் மேலும் தெரிவித்ததாவது:

தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என கடந்த ஜூன் மாதம் அரசு உறுதியளித்தது. பின்னர் நாம் தொழிற் சங்க நடவடிக்கையை நிறுத்தியிருந்தோம்.

வழங்கப்பட்ட உறுதி மொழிகள் இன்னும் செயற்படுத்தப்படவில்லை.

எமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நாம் அமைச்சருக்கு ஞாபகப்படுத்தினோம். ஆனால், எமக்கு பதிலேதும் கிடைக்கவில்லை. நாம் இனிமேல் அவர்களுடன் பேசப்போவதுமில்லை, கடிதம் எழுதப் போவதுமில்லை. எமது கோரிக்கைகளை நிறைவேற்ற எமது ஒற்றுமையின் பலத்தில் மட்டும் தங்கியிருப்போம்.

பங்குதாரர் சகலரிடையேயும் கலந்துரையாடல் இடம்பெற்று முடிவு எடுக்கும் உயர்கல்வி தொடர்பான சகல மறுசீரமைப்புக்களையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்பது பல் கலைக் கழக ஆசிரிய சங்கத்தின் கோரிக்கைகளில் ஒன்றாகும்.

இதேவேளை, சம்பளத்தை 20 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்பதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஆறு சதவீதத்தை உயர் கல்விக்கு ஒதுக்க வேண்டும் என்பதும் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தினரின் கோரிக்கைகளில் சிலவாகும். - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## மனமாற்றம் ஈடேற்றம் தரும்

வரி தண்டுபவர் என்றால் இரக்கமற்றவர் என்ற கண்ணோட்டம் ஒரு காலத்தில் நிலவியது. மக்களின் சுமைகளை கருத்திற்கொள்ளாது பணம் வசூலிப்பதிலேயே அவர்கள் குறியாய் இருப்பர். இவ்வாறானவர்களோடு மக்கள் ஒட்டி உறவாடுவதில்லை. இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த லேவி என்பவரை இயேசு ''என்னைப் பின்பற்றி வா'' என அழைத்தார். அவர் அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின் தொடர்ந்தார். மனமாற்றத்தால் உண்டான மகிழ்ச்சி விருந்தில் பரிமாறப்படு கிறது.

நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையானவர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன் (லுக்கு 5:31-32) என்கிறார் இயேசு. இதை, பாவிகளோடு உணவருந்துகிறாரே என்று பரி கசித்த மறைநூல் அறிஞருக்கு மட்டுமல்ல எமக்கும் விழுந்த சம்மட்டி அடியாகக் கருதவேண்டும்.

சமூகத்தில் அவன் அப்படி, இவன் இப்படி என்று விமர்சிப்பதை விடுத்து சரியான பாதையில் பயணிக்க வழி காட்டும் கலங்கரை விளக்காக நாம் விளங்க வேண்டும். அதற்கு எமது செயற்பாடுகளும் முன்னு தாரணமாக இருக்கவேண்டும். பாவிகள்தான் பரமனின் அருள் வேண்டுபவர்கள். இவர்களை இறைவனின் பாதைக்கு க் கொண்டு வருவது தான் நற்செய்திப் பணியின் தலையாய நோக்காக இருக்கவேண்டும்.




பாவிகள் வெறுத்து ஒதுக்கப்படவேண்டியவர்களல்லர். மதிக்கப்பட வேண்டியவர்கள், மன்னிக்கப்பட வேண்டியவர்கள்; மனமாற்றம் பெறவேண்டியவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வுடன் அன்பைப் பரிமாறுவோம். அனைவரும் விண்ணக விருந்தில் சம பங்காளிகளாவோம்.

எஸ். யேசுதாஸ்

## விளையாட்டு விழா

தாழையடி சென்.அன்ரனிஸ் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வடமராட்சி கிழக்கு பொது மைதானத்தில் முன்பள்ளித் தலைவர் பெ.சிறிதரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

பிரதம விருந்தினராகத் தாழையடி பங்குத் தந்தை அருட்திரு எம். யாகரட்ணம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாகத் தாழையடி உதவிப் பங்குத் தந்தை அருட்திரு ஆ.ஜஸ்ரின், நுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.பத்மராஜா, வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், தாழையடி றா.க.த.க. பாடசாலை அதிபர் என். கண்ணதாசன், மருதங் கேணி கிராம சேவையாளர் எம்.வி.தவராசா ஆகியோர் கலந்து கொள்வர். (ம-8)

* * *

வேலணை அம்பிகைநகர் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 8மணிக்கு அம்பிகை நகர் முன்பள்ளி பெற்றோர், ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி எம்.சுதாஜினி தலைமையில் ஸ்ரீ மகேஸ்வரி விளை யாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், தீவக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன், வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, பிரதேச சபைச்செயலாளர் செரமேஸ் உட்படப் பலர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(ம-7)

## மின்னல் தாக்கி 51 பேர் சாவு

கடந்த வருடம் இலங்கையில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற மின்னல் தாக்குதலல்களில் 51 பேர் உயிரிழந்துள்ளனர்.

மக்களுக்கு எச்சரிக்கை செய்த போதும் இந்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது என்று கால நிலைய மையம் தெரிவித்துள்ளது.

அதிகளவானோர் தெற்குப் பகுதியிலேயே இறந்துள்ளனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன. (ந)

# மின்சாரம் தடைப்பட்டால் ம.எண்ணெய்க்கும் தடை

சாவகச்சேரி, மார்ச் 29

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்தில் மின் தடை ஏற்படும் நாள்களில் மண்ணெண்ணெய் பெற முடியவில்லையெனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

மின்பிறப்பாக்கி மூலம் பெற்றோல், டீசல் போன்றவை வாகனங்களுக்கு விநியோகிக்கப்பட்டாலும் விவசாயிகளின் தேவைக்கான மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதில்லை என்று குறை கூறப்படுகிறது ''மின் தடை ஏற்படும் நாள்களில் எரிபொருள் நிலையத்தில் பெறமுடியாமல் தனியார் கடைகளில் வாங்க வேண்டியுள்ளது'' என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் தமது தேவைக்கான மண்ணெண்ணெய் மின் தடை ஏற்படும் நாள்களில் எரிபொருள் நிலையத்தில் பெறமுடியாமல் தனியார் கடைகளில் வாங்க வேண்டியுள்ளது.**

இது தொடர்பாக எரிபொருள் நிலைய பணியாளர்களுடன் தொடர்பு கொண்டபோது, மண்ணெண்ணெய் பம்பிக்கு மின் பிறப்பாக்கி மூலம் மின் இணைப்பு வழங்கப்படாததால் மின்தடை நாள் களில் வழங்கப்படுவதில்லையெனத் தெரிவித்தனர்.

(ந-9)




சிவமயம்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கலுக்கான தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்



புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெற வுள்ளது. இதற்கமைவாக தண்டல் ஒழுங்குகள் நாளை 30.03.2012 வெள்ளி தொடக்கம் வட்டக்கச்சி, இராமநாதபுரம், விசுவமடு, கல்மடு, திருவையாறு, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், உடையார்கட்டு சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலய சின்னங் களுடன் உழவு இயந்திரங்களில் தொண்டர்கள் வருகைதரவுள்ளார்கள் என்பதை முன்கூட்டியே அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலனசபை

C/2000))(6-9-8)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'

கிருஸ்ணராஜா- தேவரூபசினி தம்பதியரின்

அருந்தவச் செல்வி மாதுளா

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 8A, 1B பெறுபேற்றை பெற்றதையிட்டு அவர் கல்வியிலும் வாழ்க்கையிலும் சகல சௌபாக்கியங்களும் பெற்று மேன்மேலும் உயர்வு வேண்டி நீடூழி வாழ்கவென இறைவனை வேண்டுகின்றோம்.

தேவானந்தன் குடும்பம்

2714) (6-9-12)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"கண்கண்டு திளைத்த காட்சிகள் யாவும் கதையாகிப் போன தம்மா"

திதி : அபரபட்ச தசமி

அகம் மலர
11
11
1928



மனம் நெகிழ
29
03
2011

திருமதி. கனகம்மா நடராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியர், உப அதிபர் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, St.Anns மானிப்பாய்)

கிடைக்கின்ற பிடி சோற்றை தனக்கென்று உண்ணாமல் கொடுக்கின்ற கோயிலது.

Amma!
There were no time to say
good bye

There were no farewell
speech

You rushed so quickly
we don't know why?
If tears were stairs
memories were lanes
We would come to Heaven
to bring you home!.....

Dearly Missed by Your
Husband, Kids & Grand Kids
Contact - 00441248371587.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும்

அமரர்

சிவலிங்கம் கதிர்காமத்தம்பி

(நீர்வேலி தெற்கு)



29.02.2012 கனடாவில் அமரத்துவம் அடைந்த சிவலிங்கம் கதிர்காமத்தம்பியின் 31ஆம் நாள் நினைவுதினம் 30.03.2012 வெள்ளிக்கிழமை அன்று நீர்வை கந்தன் ஆலயத்தில் முற்பகல் 11 மணிக்கு அவரது நினைவாக பூஜை வழிபாடு பிரார்த்தனை, மகேஸ்வர பூசை இடம்பெறும். அன்றைய தினம் நீர்வை மக்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய நீர்வைக் கந்தனை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!

கந்தன் கருணை,
நீர்வை தெற்கு,
நீர்வேலி.

அன்னாரது குடும்பத்தினர் சார்பாக
நம்பிமுத்து சோதிலிங்கம் (J.P)
(மாமனார்).

(16126) (6,9,10)

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(29.02.2012 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. கபீப் பாங்க் லிமிடெட்
10. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
17. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
18. த கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
6. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
7. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
8. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் பிஎல்சி
9. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
10. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
11. கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
12. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
13. கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
14. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
15. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
16. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
17. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
22. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
27. திவச பினான்ஸ் லிமிடெட்
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
29. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
30. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் பிஎல்சி
31. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
32. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
33. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
34. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
35. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
36. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
37. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
38. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
39. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
40. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் கண்காணிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களும் மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன.
- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் தொ.பேசி: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம் : 02.04.2012**

### 1. COMPUTER COURSES (கணினி பயிற்சிநெறி)

| | |
|---|---|
| A. Advanced in Computer Programming | Duration 8 Months |
| B. Diploma in Microsoft Office | Duration 4 Months |
| C. Diploma in Desk Top Publishing | Duration 4 Months |
| D. Diploma in Video Editing | Duration 4 Months |
| E. Diploma in Type Setting | Duration 3 Months |
| F. Diploma in Computerized Accounting | Duration 4 Months |
| G. Diploma in Software Engineering | Duration 6 Months |
| H. Diploma in Micro media | Duration 4 Months |
| I. Diploma in Web Multimedia | Duration 4 Months |
| J. Professional Diploma in Graphic Design | Duration 6 Months |
| K. Computer Hardware Technology | Duration 4 Months |
| L. Internet & E-mail | Duration 1 Month |
| M. General Information Technology (GIT) | Duration 4 Months |
| N. Information & Communication Technology (ICT) | Duration 4 Months |
| O. Children's Kids | Duration 4 Months |

### 2. CERTIFICATE COURSES

I. MS Word
II. MS Excel
III. MS Access
IV. MS PowerPoint
V. Visual Basic
VI. Java Script
VII. MYOB
VIII. Adobe Photoshop
IX. PageMaker
X. Flash
XI. Quick Book
XII. Tally
XIII. Corel Draw
XIV. Peestree

2. Short Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3. Short Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
4. Sewing (தையல்)
5. General Moto Mechanism (மோட்டார் வாகனம் திருத்தல்)
6. General Electrician (ஜெனரல் எலக்ரீஸன்)
7. Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
8. Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி)
9. Carpentry (மரவேலை)
10. Refrigeration and Air conditioning (குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்)

**குறிப்பு:**

1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக்கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலதிக விவரங்களுக்கு:**

**Registrar,**
**Patrician Institute,**
**61 (59), St. Patrick's Road, Jaffna.**
**T.P:0212226148,**
**Fax:0212226148.**
**Email:Spitee@sltnet.lk.**

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச் 29

வட்டுக்கோட்டை- தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும். திருவிழாவில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தேர்த் திருவிழாவும் எதிர்வரும் 9 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-13)

* * *

வவுனியா கோயில் குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில் வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 17 நாள்கள் இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (வ-13)

* * *

நயினாதீவு பெருங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை அதிகாலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமையாக பூசையைத் தொடர்ந்து காலை 7 மணி தொடக்கம் 7.45 மணிக்குள் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும். (வ-13)

# ஆசியாவில் தனது அதீத சக்தியை இன்று இழந்துவிட்டது இந்தியா

## தம்பி மீது அண்ணன் சண்டித்தனம் காட்டுவதா எனக் கேட்கிறார் விமல்

கொழும்பு, மார்ச் 29

தமிழ்நாட்டு அழுத்தங்களுக்குப் பணிந்து அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்ததன் மூலம் ஆசிய வலயத்தில் தனக்கிருந்த அதீத சக்தியை அந்த நாடு இழந்துவிட்டது.

மாற்றானுடன் இணைந்து தம்பிக்குச் சண்டித்தனம் காண்பிக்கும் அண்ணன் உரிமையுள்ள அண்ணன் அல்லர்.

இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ வீராவேசம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கக் கொடியும், ஈழக் கொடியும் சர்வதேசத்தில் இணைந்து பறப்பதை நாம் சாதாரணமாகக் கருதி விடக்கூடாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காலி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எதிராக போர்க் குற்றங்கள் தொடர்பில் பிரேரணை கொண்டு வருவதற்கான அனைத்து சந்தர்ப்பங்களும் தற்போது உள்ளன என்று எரிக்சொல்ஹெய்ம் கூறுகின்றார்.

ஜெனிவாவில் எமக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதனூடாக சர்வதேச புலி வலையமைப்பின் தேவைப்பாடு என்னவென்று தெளிவாகப் புலப்படுகின்றது.

சொல்ஹெய்ம் துரை இங்கு ஏன் வந்துசென்றார் என்ற விடயம் காலம் கடந்துதான் புலப்படுகின்றது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் இனிவரும் மாநாடுகளில் பிரேரணை கொண்டுவரப்படும் எனவும் சொல்ஹெய்ம் கூறுகின்றார்.

22 ஆவது மனித உரிமைகள் பேரவையின் போது இந்தப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாட்டு மக்கள் ஜனாதிபதியுடன் இருப்பதன் காரணமாகவே போர்க் குற்றம் தொடர்பான பிரேரணை இந்தமுறை கொண்டு வரப்படவில்லை. அதைக்கொண்டு வருவதற்கு சதித்திட்டம் தீட்டுவதற்கே கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிராக மக்களை வீதியில் இறக்குவதற்கு அமெரிக்கா, நோர்வே ஆகிய நாடுகள் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளன. அது முடியாமல் போனால் அந்த நாடுகள் சொல்வதை அரசு செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அவை உள்ளன. சர்வதேச புலிகளுக்குத் தேவையானவற்றையே அமெரிக்கா பிரேரணையாகச் சமர்ப்பித்துள்ளது.

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றி மாகாண சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமெரிக்கப் பிரேரணையில் பிரதானமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. அவற்றைச் செய்யப் போனால் மக்கள் அரசுக்கு எதிராகத் திரும்புவர்.

ஆசியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நோக்கில் அமெரிக்கா கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

இந்த நிலையில், தமிழ்நாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து இந்தியா அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவளித்து ஆசியாவில் தனக்கிருந்த அதீத சக்தியை இழந்துள்ளது என்றார். (ம)

## நன்றியறிதல் பண்பானது மனிதனுக்கு ஏன் முக்கியமானதாகும்?

ஒருவர் எமக்குச் செய்த நன்றிக்கு நாம் நன்றியுணர்வு பெறாவிடில் எம்மை நாம் மிருகத்திலும் கீழான நிலைக்கு இட்டுச் செல்கின்றோம் என்பதாகும்.

கடவுள் மனிதனுக்கு மிக்க காருண்யமாகவே வழங்கிய அதிமதிப்பு வாய்ந்த பொருள்களுக்கெல்லாம் மனிதன் கடவுளுக்கு நன்றி கூற ஒருபோதும் எண்ணுவதில்லை.

கடவுள் மனிதனை இந்தப்பரந்த அதிசயமான பிரபஞ்சத்தில் நிறுத்தி சுவாசிக்கச் சுத்தமான காற்று, குடிப்பதற்குத் தூய்மையான நீர், வாழ்வதற்கு அன்னை பூமியையும் வழங்கியுள்ளார்.

இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஐம்பூதங்களான பூமி, நீர், தீ, காற்று, ஆகாயம் இல்லாது மனிதன் ஒரு விநாடி கூட வாழ இயலாது. ஆகவே இத்தகைய கருணைமிக்க கடவுளுக்கு எமது நன்றியை வழங்க மறப்பதிலும் மேலான பாவம் வேறு என்ன உண்டு? உலகுக்கு ஒளியைப் பரப்பும் சூரியன், எம்மைக் களை தீர்க்கும் காற்று, பூமியைக் குளிர்வித்து, வாழ்வை நிலைக்கச் செய்யும் மழை, இத்தகைய வசதிகளை யெல்லாம் எமக்கு நல்கிய இறைவனுக்கு, அவர் செயலுக்காக நாம் எதுவுமே கொடுப்பதில்லை. இறைவனுக்கு நன்றியையும், நன்றியுணர்வையும் வழங்காது விடுவது தாமோ குண இயல்பாகும்.

இது சிந்தையை மாசுபடுத்தும் சோம்பேறித்தனம்.



சாயி சிந்தனை

## சாவகச்சேரி புகையிரத நிலைய புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்


சாவகச்சேரி, மார்ச் 29

சேதமடைந்து காணப்படும் சாவகச்சேரி புகையிரத நிலையத்தை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புகையிரத நிலையக் கட்டடத்துடன் அந்தப் பகுதியில் உள்ள விடுதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. அத்துடன் புகையிரத நிலையத்தை அண்டிய பகுதியில் உள்ள புகையிரத வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரையுள்ள புகையிரத நிலையக் கட்டடங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் கட்டடங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (வ-9)

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் சிவமணி

*(சமாதான நீதிவான்)*

(வர்த்தகர், மாணிக்கம் ரிறேடேர்ஸ், மணி மார்க்கேட், கொழும்பு)

*வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவமணி (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சந்திரவதனாவின் (நிர்மலா- ஓய்வுபெற்ற ஆசிரியை) பாசமிகு கணவரும், விவேக்காவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் கனகம்மா தம்பதியரின் மருமகனும், மாசிலாமணி (கனடா, முன்னாள் தலைவர், ப.நோ.கூ. சங்கம், வேலணை), நடனசிகாமணி (வேலணை), நடராஜமணி (காலி), புஸ்பமாலா (கனடா), பிரபுசிகாமணி (கனடா), கலையரசி (கனடா), மாதினியார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காஞ்சனமாலா (கனடா), சிவகலை (வெள்ளவத்தை), ஞானசொரூபி, சுப்பிரமணியம் (கனடா), குகாநந்தி (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), விஜயன் (கனடா), சந்திரோதயம், சந்திரகாந்தி, தவநாயகி (ஆசிரியை - ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்), உதயகுமார், சந்திரவடிவு, செல்வகுமார், நந்தகுமார், சந்திரமதி, ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும், மகேஷன், கனகரத்தினம் (அதிபர் - மண்டைதீவு ம.வி), சிந்தா ரவீந்திரன், அனுஷா, அனுஷா, இந்திரன், குமுதா ஆகியோரின் சகலனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.03.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு (மண்டைதீவு) அவரது இல்லத்தில் ஆரம்பமாகி பின்னர் 12 மணிக்கு வேலணை 6ஆம், வட்டாரத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் வேலணை அம்பலவி இந்து மயானத்தில் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

"கனகாபுரி",
6ஆம் வட்டாரம், மண்டை தீவு.

தகவல்:
சி. சந்திரவதனா (மனைவி - நிர்மலா)

(16148) (45-6-9)

# இலங்கையில் போர் முடிந்தும் அமைதி திரும்பவே இல்லை

## இந்திய ராணுவ ஆலோசகர் கருத்து

புதுடில்லி, மார்ச் 29

இலங்கையில் போர் முடிந்த பின்னரும் அங்கு இன்னமும் அமைதி திரும்பவில்லை என்று இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் குழுவின் ராணுவ ஆலோசகர் பிரகாஷ்மேனன் தெரிவித்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு, போர்க் கலைத்துறை மற்றும் தென் பிராந்திய ராணுவத் தலைமையகம் சார்பில், 21 ஆம் நூற்றாண்டின் தேசிய பாதுகாப்பில் இந்தியா சந்திக்கும் சவால்கள் குறித்த கருத்தரங்கம்கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஏராளமான முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு அவர்கள் அமைதியாக வாழ்கிறார்கள். சமூக விரோதச் செயற்பாடுகள் தான் பொலிஸார் சந்திக்கும் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இலங்கையில் போர் முடிந்த பின்னரும் அங்கு அமைதி திரும்பவில்லை. அபிவிருத்திப் பணிகள் நடைபெறவில்லை. எதிலும் தன்னம்பிக்கை வேண்டும்.

இந்தியாவுக்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்து வருகிறது. இதற்கு நிலவியல் அமைப்பும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

நாட்டின் பாது காப்புக்கு வலிமையை விட திட்டமிடுதல் முக்கியமானது. இந்தியா நட்புறவில் நம்பிக்கை கொண்ட நாடு. இந்த நட்புறவு என்பது கொள்கை களை அடிப்படையாகக் கொண்டது - என்றார் அவர். (வ)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
06 ★ 02 ★ 1954



உதிர்வு
29 ★ 03 ★ 2007

அமரர்
## எஸ்.ஜே. செல்லத்துரை

*(முன்னாள் கிராம சேவை அலுவலர் அதிவிசேட தரம், யாழ் பிரதேச செயலகம்)*

உம்மைப் பிரிந்த எம் விழிகள்
மலையருவியாய் வடிகின்றது
மனதில் உம் நினைவுகள்
ஓயாமல் உதிக்கின்றது
தேடி வருவதற்கு
முகவரி தெரியவில்லை
தனிமைப் படுத்தி சென்று விட்டீர்.

**என்றும் உம் நினைவால் வாடும்
குடும்பத்தினர்.**

(சி/9988) (6-9-12)

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

**யூனியன் கல்லூரி தெல்லிப்பழை**

ம.கோகுலசாயி 9ஏ, வி.துவாரகா 9ஏ, இ.ஜெனாத்தனி 8ஏ,பி, ஜெ.ஜெனார்த்தனன் 8ஏ,எஸ், நா.சிவஞானச்செல்வன் 8ஏ,எஸ், த.மயூரதன் 7ஏ,பி,சி, செ.பிரணவன் 7ஏ,2சி, ர.நிதர்சன் 7ஏ,பி, சா.திர்சாந்தா 6ஏ,3பி, ம.பிரியங்கன் 6ஏ,2பி,சி, நா.ஜெயப்பிரியா 6ஏ,2பி,சி, உ.உஷாந்தன் 6ஏ,2பி,எஸ், பா.தமிழ்நாத் 6ஏ,2பி,எஸ்.

நா.கவிராஜ் 6ஏ,பி,2சி, கோ.சங்கீதா 6ஏ,பி,2சி, த.பகிர்தா 6ஏ,பி,2சி, இ.கரிராம் 6ஏ,பி,சி,எஸ், கு.கீர்த்தனா 5ஏ,4பி, வி.சுவேதா 5ஏ,2பி,2சி, த.ரவிசாந் 5ஏ, 2பி,2சி, ம.துவாரகன் 5ஏ, 2பி,சி,எஸ், ஸ்ரீ.கௌதமன் 5ஏ,பி,3சி, ப.வனஜா 5ஏ,2சி, 2எஸ்.

ச.சிந்துஜன் 4ஏ,3பி,2சி, செ.லனுசன் 4ஏ,3பி,2சி, தே.ராகுலன் 4ஏ,2பி,3சி, யோ.டிலக்சனா 4ஏ,2பி,2சி, எஸ், சு.கம்ஷா 4ஏ,2பி,2சி, எஸ், சி.லக்ஷியா 4ஏ,பி,2சி, 2எஸ், க.கிரிதரன் 4ஏ,3பி,சி,

**மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை**

கே.கௌசிகன் 9ஏ, இ.ஜனார்த்தனன் 8ஏ,சி, து.மேதுஷா 8ஏ.சி, ச.தரண்யா 7ஏ,2பி, ச.மோகனராஜி 7ஏ,2பி, பா.தனுஷாந் 7ஏ,பி, எஸ், து.தர்ஷியா 6ஏ,3பி, ந.சதாசிவகுமாரன் 6ஏ,பி2சி, ஜெ.மயூரன் 6ஏ,பி,சி,எஸ்.

சு.விஜிதா 5ஏ,3பி,சி, சோ.வனஜா 5ஏ,3பி,சி, சே.ஜனுயா 5ஏ,2பி,2சி, சி.அனோதினி 5ஏ,2பி,2சி, க.சிவகாயத்திரிநாயகி 5ஏ,2பி,சி,எஸ், க.மேனுஷா 5ஏ,பி,2சி,எஸ், ச.அபிராம் 5ஏ,பி,சி,2எஸ்.

ம.வினிஷ்ரா 4ஏ,3பி,3சி, ந.பிரிந்தா 4ஏ,3பி,3சி, த.டன்சிகா 4ஏ,2பி,2சி,எஸ், ஜெ.ஜெயவர்மன் 4ஏ,2பி, 2சி,எஸ், கி.தனுஷா 4ஏ,2பி, சி,2எஸ், கி.கிரிதரன் 4ஏ,பி, 2சி,2எஸ், ர.துரந்தரன் 4ஏ, 3சி,2எஸ்.

**விக்ரோரியா கல்லூரி சுழிபுரம்**

சு பிரியதர்சன் 8ஏ,பி, சே.ரோகுலமேனன் 8ஏ,சி, த.நிதுஜா 7ஏ,பி,சி, ந.அபிராமி 7ஏ,பி,எஸ்.

க.சிதம்பரபாலினி 6ஏ,3பி, சி.அனோஜிதா 6ஏ,2பி,சி, ச.கோபிசாந் 6ஏ,பி,2சி, ஜெ.ஜெயப்பிரதாபன் 5ஏ,3பி,சி, செ.சுகன்ஜா 5ஏ,3பி,சி, ந.சியாமினி 3ஏ, 5பி,சி, ப.குமுதினி 3ஏ,2பி, 2சி,எஸ், பா.வர்சனா 2ஏ,5பி, 2சி, ச.பிரியங்கா 2ஏ,4பி,3சி,

**ஆங்கில மொழி மூலம்**

த.விஜிதா 7ஏ,பி,எஸ், தே.காயத்திரி 5ஏ,3பி,எஸ், ச.ஜெயராம் 3ஏ,4பி,2சி.

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

**ஆங்கில மொழி மூலம்**

ஜே.கே.ஹயசிந் ஹிரான் 9ஏ,எப்.ஜே.பி.தனுஷன்9ஏ, ஏ.சுபநேசன் 6 ஏ 3 பி சி, ஏ.எக்ஸ்.ஸாம்ஸன் 6 ஏ பி, சிஎஸ்,ஜே.ஜோன் டனுஷன் 4 ஏ 4 பி எஸ், ஏ.ஆர்.டனிஸ்ரன் 5ஏ 3பி சி,எஸ்.பென்ஜமின் 5 ஏ 2பி 2சி.

**தமிழ்மொழி மூலம்**

எம்.கஜீந்திரன் 6 ஏ 2பி சி, வை.தனுஷன் 5 ஏ 4சி, ரி.சதுஷன் 5 ஏ 2பி சி எஸ்,றெஜினோல்ட் 4ஏ 3பி 2சி, கே.சாரங்கன் 4 ஏ 2பி 2சி எஸ், ஜே.றொமாறோ நிலவன் 4 ஏ 2பி 2சி எஸ்.

**கோப்பாய் மகா வித்தியாலயம்**

ந.கார்த்திகாயினி 6ஏ 2 பி சி , கோ.டெனிஸ்ரன் 5 ஏ 2 பி சி எஸ், லோ.மிதுசா 3 ஏ பி 4 சி எஸ், ப.சுபாங்கி 2 ஏ பி 3 சி 3 எஸ், ப.யாழினி ஏ பி 3 சி 2 எஸ்,க.கஜேந்தினி ஏ பி 3சி 2எஸ், ச.சாதனா ஏ பி சி 4எஸ், செ.லவீந்திரன் 2பி 4சி 3 எஸ், உ.தனுஜா ஏ பி 2 சி 3 எஸ்.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**தமிழ்மொழி மூலம்**

நிதுஷா ராஜேந்திரன் 7 ஏ பி சி, யாழினி அன்பழகன் 6 ஏ 3பி, மிதுலா இலட்சுமிகாந்தன் 6 ஏ 2பி சி, ஆனந்த பைரவி ஆறுமுகம் 6 ஏ பிசிஎஸ், கீர்த்திகா ஜெயபாலசிங்கம் 5 ஏ 3பி சி, கௌசியா திருச்செல்வம் 5 ஏ பி 3 சி, அர்ச்சனா சிவகுமார் 4 ஏ பி 3சி எஸ், தன்சிகா மதியழகன் 3 ஏ 5 பி சி.

தருசனா மகேந்திரன் 3 ஏ 5பி சி,லுசாயினி இரத்னகுமார் 3 ஏ 4 பி 2 சி, அர்ச்சனா முருகானந்தன் 2 ஏ 2பி 5 சி, கம்சிகா சிவராசா 2 ஏ 2பி 3 சி 2எஸ், கசிந்தினி குலநந்தராஜா 2 ஏ 4பி 3சி, றேணுகாரகு 2 ஏ 2பி 3சி 2எஸ், மீராஜினி சுகந்தன் 2ஏ பி 3 சி 3 எஸ், கஜனி ஞானசேகரம் 2ஏ பி 2 சி 3 எஸ்.

**ஆங்கில மொழி மூலம்**

மஞ்சுஷா பத்மநாதன் 3ஏ பி 5 சி, விதுசாயி மனோகரன் 3ஏ பி 4 சி எஸ், டயானமதிவதனன் 3ஏ 2பி சி 3 எஸ், நிரஞ்சனா ஜெயமனோகரன் ஏ 6பி சி எஸ், வசுமதி கணேசலிங்கம் ஏ 2பி 3சி 3 எஸ்,தனுரேகா ஜெயக்குமார் ஏ 2பி 4சி 2 எஸ், கீர்த்தனா உமாகாந்தன் ஏ பி சி 6 எஸ்.

**கிளிநொச்சி வன்னேரிக்குளம் ம.வி**

வ.மதிகீர்த்தனா 7 ஏ பி சி, ந.காயத்திரி 3 ஏ 4பி சி, க.மோகனரூபன் 3ஏ 2பி 2சி எஸ், ச.சிந்துஜா 2ஏ பி 2சி 3 எஸ், யே.துஸாந்தினி ஏ பி 6 சி, லி.டினோஷன் ஏ 5சி 2எஸ், வி.கோகிலா ஏ பி 2சி 4 எஸ், பா.விதுர்ஷன் 3சி 3 எஸ், யோ.தூஜீவன் ஏ 2பி 3சி எஸ்.

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

ஞானசேகரம் விதுசன் 9 ஏ, உபமன்னியதாசன் உமாதன் 9ஏ, பிறேமானந்தன் பிறேமிசா 9ஏ.

ஸ்ரீதரன் கிரிட 8 ஏபி, பொன்னுத்துரை கஸ்ரோ 8ஏ பி, பாலசுப்பிரமணியம் அஜீபன் 8 ஏபி, ஸ்ரீ முருகதாஸ் துளசிகரன் 8ஏ பி, ரங்கநாதன் ஆராதனா 8. ஏ பி, தவராசா செந்தாளன் 8 ஏ சி, சிவபாலன் சுஜீபன் 8 ஏ சி, சிவஞானமூர்த்தி அனுராஜ் 8 ஏ சி.

சுந்தரலிங்கம் சுகேனியா 7 ஏ பி சி, கருணாகரன் கனன் 7 ஏ பிசி, திருஞானசம்பந்தர் ஆரணி 7 ஏ பிசி, பூபாலசிங்கம் பிரியா 7 ஏ பி எஸ், கதிர்காமநாதன் நிரஞ்சன் 7 ஏ பி எஸ்.

நாகேந்திரன் கோதண்ஜா 6 ஏ 2பி சி, நவரத்தினம் சஜீத்தா 6 ஏ 2 பி சி, குமாரவேல்ராஜா கபிலன் 6 ஏ பி 2 சி, ஜெயகணேசன் ஜெயகீதன் 6 ஏ பி 2சி, பாலச்சந்திரன் தமிழினி 6 ஏ பி 2சி, வேலாயுதப்பிள்ளை திருஷா 6 ஏ பி சி எஸ், பரமநாதன் அனோஜா 6 ஏ 3சி, தேவதாசன் சுஜீவன் 6 ஏ 2பி.

கங்காதன் கோவர்த்தனன் 5 ஏ 3பி சி, யோகராசா கபீர்த்தனா 5 ஏ 3 பி சி, சிவானந்தம் தயூரா 5 ஏ 3பி சி, வித்தியநாதன் பாகீசன் 5ஏ 3 பி எஸ், கமலநாதன் மதுசூதனன் 5 ஏ 3பி எஸ், கணேசலிங்கம் சிவனுஜன் 5 ஏ 2பி 2சி,கார்த்திகேசு திருக்குமரன் 5 ஏ 2பி 2 சி, தேவராஜா தரணிகா 5ஏ பி 3சி, சிவப்பிரகாசம் ஜெய்னோதன் 5 ஏ 2பி சி எஸ், பாலச்சந்திரன் சஜீஜன் 5ஏ 2பி சி எஸ், அருட்செல்வன் திபூஜன் 5ஏ 2பி சி , சோதிலிங்கம் கஜானி 5ஏ 2பி சி எஸ், மோகனதாசன் நிதர்சன் 5ஏ 3பி.

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

**ஆங்கிலமொழி மூலம்**

கி.மாதங்கி 9 ஏ, சி.விதுர்ஷா 7 ஏ 2பி, மே.ரோஜிதா 7ஏ பி சி, கி.துஷாரா 6ஏ பி 2சி, சி.சௌமினி 6 ஏ 2 பி சி.

**தமிழ் மொழி மூலம்**

ரா.ஸ்ரீதிவாகரன் 8 ஏ பி, நி.சாமந்தி 8ஏ பி, கி.மாதுளா 8ஏ 2பி, சி.ஜெனோசன் 7 ஏபி, ஜெ.கீர்த்தனன் 6 ஏ 3 பி, தே.இரட்சகன் 5ஏ 4 பி, த.கோகுலராஜன் 5ஏ பி 2சி எஸ், ஆ.துஷ்யந்தன் 5ஏ பி 2சி, த.விேனாபா 5 ஏ 3 பி சி.

த சிலம்பரசன் 4ஏ 4பி சி, ரா.பிரசாந்தன் 4ஏ 2பி 2சி எஸ், பா. அரவிந்தன் 4ஏ 3பி சி எஸ், அ.ராகவேந்திரன் 4 ஏ 3பி 2சி எஸ்,ம.லக்ஸ்மன் 4ஏ 2பி 3சி, செ.ஆரூர் 4ஏ 2பி 3சி, தெ.ஜெயராம் 4ஏ 3சி 2 எஸ், ச.துஷாரா 4ஏ பி 4 சி, கு.பிரதீபா 4ஏ பி 4 சி, ர .அனிதா 4ஏ பி 3 சி எஸ்.

(வ-253)

---

தருவது
வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். சில விடயங்களில் அஜாக்கிரதையாக செயற்படுவதன் மூலம் அவதிகளுக்கு ஆள்படலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக செலவுகள் செய்ய வேண்டாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள்.



**இடபம்:** உங்களுக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திக்கலாம். உங்களிடம் நாளை வருவதாகச் சொன்ன சிலர் இன்றே வரலாம். வியாபாரிகள் எதிலும் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். சோம்பல் இல்லாமல் எதிலும் சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பிள்ளைகளால் பெருமைப்படுவீர்கள்.



**மிதுனம்:** உறவினர்கள் சிலர் கொடுத்த வாக்குறுதியை நம்பி முக்கியமான காரியங்களில் இறங்குவீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் இருந்த ஒருவரைப் பிரிய நேரிடலாம். கையில் பணம் இருந்தும் சிலருக்கு உதவி செய்ய மறுத்து விடுவீர்கள். கணவன், மனைவி இடையே மனஸ்தாபம் வராமல் இருக்க பொறுமை அவசியம். உடல் உபாதை உண்டாகும்.



**கடகம்:** கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். சிலர் மீது கோபம் கொண்டாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். ஒரு உறவினரிடம் கேட்டு கிடைக்காத உதவி, மற்றொரு உறவினரிடம் கிடைக்கலாம். மனைவி, பிள்ளைகளின் சின்ன, சின்ன விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.



**சிங்கம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்கும் நாள். எந்த வேலையையும் முடியாது என்று சொல்லாமல் முடிக்க முற்படுவீர்கள். தந்தையுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணியலாம். சிறிய வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.



**கன்னி:** விரும்பாத ஒருவரை நீங்கள் செல்லும் இடத்தில் சந்திக்கலாம். உதவி கேட்ட சிலருக்கு மற்றவர்களிடம் வாங்கி கொடுத்தாவது உதவுவீர்கள். நண்பர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். உறவினர் ஒருவர் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை பற்றி உங்களிடம் சொல்லலாம். சில விடயங்களில் குழப்பங்கள் உண்டாகும்.

**நாளை**

பங்குனி 17 வெள்ளிக்கிழமை 30.03.2012
திதி: ஸப்தமி மு.ப 08.52 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.இ 04.12 வரை
சுபநேரம்: 06.12- 07.42 வரை
ராகு காலம்: 10.42- 12.12 வரை



**துலாம்:** வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு, அதில் திருப்தி இல்லாமல் போகலாம். ஒருவரிடம் கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்கலாம். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம். பயணங்களில் தடை, தாமதங்கள் ஏற்படலாம்.



**விருச்சிகம்:** எந்த காரியத்தையும் தயங்காமல் உற்சாகமாக செய்வீர்கள். கணிசமான பணவரவுகளால் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். பிரியமான உறவினர்களின் பாசமழையில் நனையலாம். சுக துக்கங்களை பற்றி நண்பர் ஒருவரிடம் பேசலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். வாகனங்களில் நீண்ட தூர பயணம் செல்லலாம்.



**தனுசு:** பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். அலைச்சல்களில் இருந்து ஓய்வு பெறுவீர்கள். சில விடயங்களில் தனிமையில் இனிமை காண முற்படுவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அனுகூல செய்தி தேடி வரும்.



**மகரம்:** தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். நீங்கள் எதிர்பார்த்தது போல சில விடயங்கள் நடக்காமல் அதற்கு ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். வயிறு தொடர்பான உபாதைகளுக்கு ஆள்படலாம். பெற்றோரின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பர்கள். மாமன், மைத்துனர்கள் உதவிகள் கேட்கலாம். எதிர்பாராத திடீர் பணவரவுகளை பெறலாம்.



**கும்பம்:** உங்களுக்கு தெரியாத விடயம் ஒன்றை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பிள்ளைகள் விரும்பியவற்றை வாங்கிக் கொடுக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். பரபரப்பாகச் செயற்படலாம்.



**மீனம்:** மகிழ்ச்சியான, சந்தோஷமான அனுபவங்களை பெறலாம். தொழில் ரீதியான பதற்றம் இல்லாமல் அமைதியாக இருப்பீர்கள். அயலாரிடம் கடனாகக் கொடுத்த பணம் வரலாம். நீண்ட நாள்களாகப் பேசாத நண்பர் ஒருவருடன் பேச நேரிடலாம். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்கலாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | | 4 | 7 | |
| 8 | | | 4 | | | 2 | 3 | |
| | | 3 | | 5 | | | | 1 |
| | 8 | | 9 | | 6 | 3 | 5 | |
| | 9 | 6 | | 2 | | 7 | 1 | |
| | 2 | 7 | 1 | | 8 | | 9 | |
| 2 | | | | 6 | | 8 | | |
| | 6 | 8 | | | 5 | | | 7 |
| | 7 | 1 | | | | | | 3 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 3 | 1 | 2 | 9 | 6 | 5 | 4 |
| 5 | 9 | 2 | 6 | 4 | 7 | 1 | 3 | 8 |
| 1 | 4 | 6 | 5 | 8 | 3 | 7 | 9 | 2 |
| 3 | 1 | 7 | 2 | 5 | 4 | 9 | 8 | 6 |
| 2 | 5 | 9 | 8 | 3 | 6 | 4 | 7 | 1 |
| 6 | 8 | 4 | 7 | 9 | 1 | 5 | 2 | 3 |
| 9 | 6 | 1 | 3 | 7 | 2 | 8 | 4 | 5 |
| 7 | 3 | 5 | 4 | 6 | 8 | 2 | 1 | 9 |
| 4 | 2 | 8 | 9 | 1 | 5 | 3 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க அமெ. வழங்கிய இராணுவ உதவிகள்

## புட்டு வைக்கிறார் இலங்கை இராணுவ அதிகாரி

**அமெரிக்க இராணுவத்திடம் இருந்து பெறப்பட்ட உதவியின் மூலம் உயர்திறன் கொண்ட ஆயுதங்கள் மற்றும் கருவிகளை ஏற்றி வந்த விடுதலைப் புலிகளின் எல்லாக் கப்பல்களையும் இலங்கைக் கடற்படை ஆழ்கடலில் தாக்கியழித்தது.**

**தாக்கியழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் 7–8 கப்பல்களில் இருந்த ஆயுதங்கள் வடக்கைச் சென்றடைந்திருந்தால், போரின் இறுதி முடிவு வேறுமாதிரியாக அமைந்திருக்கும்**

கொழும்பு,மார்ச் 29

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்கப் பாதுகாப்புப் பிரிவுகள் எவ்வாறு உதவின என்பது பற்றிய இரகசியத் தகவல்களை, இறுதிக்கட்டப் போரின் போது இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் உருவாக்கப்பட்ட முக்கியமான படை ஒன்றின் உறுப்பினர் வெளியிட்டுள்ளார்.

வெளிநாடுகளின் எந்த உதவியும் இன்றியே விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து போரை முடிவுக்குக் கொண்டு வந்ததாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் கூறியிருந்தார்.

அவரது இந்தக் கருத்தை நிராகரிக்கும் வகையிலேயே, இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா எவ்வாறு உதவியது என்ற தகவலை சரத் பொன்சேகாவினால் உருவாக்கப்பட்ட முக்கிய படை ஒன்றைச் சேர்ந்தவர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வெளியிட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டில் அப்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டலிசா ரைசிடம்விடுத்த வேண்டுகோளை அடுத்து அமெரிக்காவில் விடுதலைப் புலிகளின் எல்லாச் செயற்பாடுகளையும் தடுப்பதற்கு, ஒரு செயலணிக் குழு அமைக்கப்பட்டது.

இதன்படி, கனேடிய எல்லை வழியாக அமெரிக்காவில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை கொள்வனவு செய்ய வந்த விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டனர்.

2007 ஜனவரியில் இவர்கள் கைது செய்யப்பட்டவுடன், புலிகளின் ஆயுத வலையமைப்பின் செயற்பாடுகளைத் தடுக்க முடிந்தது.

அமெரிக்காவுடன் மங்கள சமரவீர கொண்டிருந்த நல்லுறவினால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கைஅரசின்வேண்டுகோளை ஏற்று, அமெரிக்க அரசு ஹவாயில் உள்ள பசுபிக் கட்டளைப்பீடத்தின் கீழ் உள்ள, 7வது கடற்படை அணியின் போர்க்கப்பலான யு.எஸ். எஸ். புளூ றிட்ஸ் இல் இருந்து, விடுதலைப் புலிகளின் கப்பல்களின் நடமாட்டம் பற்றிய- குறிப்பாக ஆயுதக் கப்பல்களின் நகர்வுகள் பற்றிய செய்மதிப் படங்கள் இலங்கை அரசுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஊடாக, இந்தச் செய்மதிப் படங்கள் இலங்கை இராணுவத்திடம் கொடுக்கப்பட்டன. இந்த செய்மதிப் படங்களை கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் மிக்க அதிகாரிகள் எவரையும் இலங்கை இராணுவம் அப்போது கொண்டிருக்கவில்லை. இதையடுத்துக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், மேஜர் கெலும் மத்துமகே என்ற இலங்கை இராணுவ அதிகாரிக்கு புலமைப்பரிசில் வழங்கி, கொலராடோவில் உள்ள இராணுவ அக்கடமியில் இது பற்றிய பயிற்சிநெறியை மேற்கொள்ள உதவியது.

அதன்பின்னர், இலங்கைக் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட பேர்ல் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான சிறப்பு பயிற்சிகள், கரையில் இருந்த 700 கடல்மைல் தொலைவில் வைத்து அளிக்கப்பட்டன.

இந்தச் சிறப்புப் பயிற்சியை அடுத்து அமெரிக்காவின் 7ஆவது கடற்படை அணியின் யு.எஸ்.எஸ். புளூ றிட்ஜ் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியதுடன், இலங்கை இராணுவத்தினால் பெறப்பட்ட செய்மதிப் படங்களின் அடிப்படையில் ஆழ்கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல்களை அழிக்க இலங்கைக் கடற்படை மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்து வந்தது.

அமெரிக்க இராணுவத்திடம் இருந்து பெறப்பட்ட உதவியின் மூலம் உயர்திறன் கொண்ட ஆயுதங்கள் மற்றும் கருவிகளை ஏற்றி வந்த விடுதலைப் புலிகளின் எல்லாக் கப்பல்களையும் இலங்கைக் கடற்படை ஆழ்கடலில் தாக்கியழித்தது. தாக்கியழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் 7-8 கப்பல்களில் இருந்த ஆயுதங்கள் வடக்கைச் சென்றடைந்திருந்தால், போரின் இறுதி முடிவு வேறுமாதிரியாக அமைந்திருக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை எதிர்காலத்தில் தாம், இந்தப் போரின் போது இஸ்ரேல் மற்றும் பிரித்தானியா என்பன இலங்கைக்கு எவ்வாறு உதவி வழங்கின என்ற தகவலையும் வெளியிடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## வளி மாசடையும் வீதம் கொழும்பில் குறைந்தது

கொழும்பு, மார்ச் 29

கொழும்பு நகரில் வளி மாசடையும் வீதம் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்ட வளி ஆய்வுப் பிரிவின் தரவுகளுக்கமைய, இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டதாகச் சுற்றாடல் அமைச்சின், வளி முகாமைத்துவம் மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் தொடர்பிலான பணிப்பாளர் அனுர ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் வளிமண்டலத்தில் காணப்படும் 10 மைக்ரோ மீற்றருக்கும் குறைவான துணிக்கைகள் 62 வரையில் குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு நகரில் வளியின் தரத்தைக் கண்டறிவதற்கு சில புதிய பிரிவுகள் நிறுவப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனூடாக நகரிலுள்ள வளியின் நிலைமை தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் செயற்றிட்டமொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்தின் பலாங்கொடை பகுதியில் நிலவுகின்ற கடுமையான வரட்சி மற்றும் காற்று காரணமாக பிரதேசத்தின் நீர் நிலைகள் வற்றிக் காணப்படுகின்றன.

கொழும்பு - பதுளை பிரதான வீதியில் பெருமளவு உல்லாசப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்த ஆறுகள் நீர் இன்றிக் காய்ந்து போயுள்ளதாக தெரியவருகிறது.

இந்த ஆறுகளால் நீரைப்பெற்றுக் கொண்ட பல குளங்களும் தற்போது வற்றிப் போயுள்ளன.

பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக கால்நடைகள் தமது உணவாக காய்ந்த புல்லையே உட்கொள்வதையும் காணமுடிகிறது. (எ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வண்ணார்பண்ணை பொன்னப்பா வீதி, பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்தது அவ் வீதியை திருத்தி புனரமைப்புச் செய்வதற்கு உதவிய யாழ். மாநகர சபை முதல்வர்

*திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்களையும்*

இவ் வீதியைத் திருத்துவதில் முன்னின்று அரும்பணி ஆற்றிய யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. நடராஜா இராஜதேவன் அவர்களையும் மற்றும் ஊழியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பொன்னப்பா வீதி வாழ் மக்கள்
சார்பில் பொ. மகேந்திரன்.

யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்
தென்மராட்சிக் கிளை - 06

## அறிவித்தல்

01.04.2012 தொடக்கம் கீழ் காணும் கட்டண விகிதம் அறவிடப்படுகின்றது.

| | |
|---|---|
| முடி மட்டும் (Hair Dressing Only | 130.00 |
| முடியுடன் சேவ் (Hair Dressing & Shave) | 200.00 |
| சேவ் மட்டும் (Shaving Only) | 70.00 |
| முடிவெட்டி தாடி ஒதுக்க (Hair Dressing & Shaping Beard) | 230.00 |
| தாடி ஒதுக்க (Shaping Beard) | 100.00 |
| சிறுவர்களுக்கு (Children) | 100.00 |
| குழந்தைகளுக்கு (Infants) | 80.00 |
| பெண்களுக்கு (Ladies) | 150.00 |
| பெண் பிள்ளைகளுக்கு (Girls Grown Up) | 100.00 |
| முடியுடன் சேவ் செய்து டை அடிக்க (Hair Dressing Shaving & Hair Dying) | 350.00 |
| மொட்டை வழித்தல் (Shaving off Hair) | 300.00 |
| மசாஜ் செய்ய (Massaging) | 70.00 |

(கூமை நேரம் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 9.00 வரை, ஞாயிறு விடுமுறை தினம் )

குறிப்பு :- மேற்குறிப்பிட்ட கட்டணவிகிதத்தினையும் நேரக் கட்டுப்பாட்டையும் மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

-நிர்வாகம்-

## புத்திக்க மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில்

கொழும்பு, மார்ச் 29

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவின் கட்சி அங்கத்துவத்தை நிபந்தனைகளின் அடிப்படையில் மீண்டும் வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவின் கட்சி அங்கத்துவத்தை இடைநிறுத்துவது தொடர்பான தீர்மானம் நேற்றைய செயற்குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் ஒழுக்காற்றுக் குழு முன்னிலையில் வழங்கிய இணக்கப்பாட்டுக்கு அமைய, செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மூன்று மாத நன்னடத்தைக் காலத்தை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (எ)



## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பன்

*அமரர் அந்தோனிப்பிள்ளை றெனோல்ட் எல்ரன்*

நேற்று (28.03.2012) அகால மரணமடைந்த செய்திகேட்டு துயரடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை ப் பிரார்த்திக்கின்றோம்.

இராமநாதன் வீதி,
கம்பஸ் முன்பாக யாழ்ப்பாணம்.

நண்பன்: வசந்தன்
(அமுதா ஹோட்டல் - உரிமையாளர்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னப்பிள்ளை கந்தசாமி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன்னப்பிள்ளை கந்தசாமி நேற்று (28.03.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து கந்தசாமியின் (இ.மி.ச.) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லர் - முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், தவஞ்ஞானம், காலஞ்சென்ற நடேசன் மற்றும் கணேஸ், காலஞ்சென்ற குவேந்திரம் மற்றும் மகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்ற சசி ஆகியோரின் அன்புத் தாயும் பரமலிங்கத்தின் மாமியும், தாரகனின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### அந்தோனிப்பிள்ளை றெனோல்ட் எல்ரன்



கட்டைக்காடு, முள்ளியானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை றெனோல்ட் எல்ரன் நேற்று (28.03.2012) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை - பிலோமினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மரிய யூலஸ் மற்றும் வின்சன்லாஸ் ததேயு றொட்றிக்கோ பெனடிக்ற், கனிஸ்ரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (29.03.2012) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் கட்டைக்காடு, கப்பலேந்தி மாதா ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டைக்காடு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டைக்காடு,
முள்ளியான்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மானிப்பாயை வீழ்த்தியது மாதகல்

**மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி விட்ட சிறு தவறு மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்துக்கு சாதகமாக மாற, வலிகாமம் வலயச் சம்பியன் கிண்ணத்தை அந்த அணி சுவீகரித்தது.**



மாதகல் அணித் தலைவி சம்பியன் கிண்ணம் பெறுகின்றார்.

வலி.வடக்கு, மார்ச் 29

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற அமரர் சேவியர் யூலியஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம் வலயச் சம்பியனானது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 27ஆம் திகதி பிற்பகல் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை மைதானத்தில் வீராங்கனைகள் துடிப்புடன் விளையாடினர். மைதானத்துக்கு வெளியே நின்ற பெண் ஆசிரியைகளும், சக மாணவிகளும் உற்சாகமாகக் குரல் எழுப்பி தமது அணிக்கு ஆதரவை வழங்கினர். இதனால் களத்தில் நின்ற வீராங்கனைகள் இன்னும் உத்வேகத்துடன் ஆட்டத்தில் அனல் கிளப்பினர்.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறும் வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்த தவறின. இதனால் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் முன்னரைக் காட்டிலும் அதிக வேகத்துடன் களமிறங்கின. பயிற்றுவிப்பாளர்களின் அறிவுரைகளைப் பெற்று அதற்கேற்ப தமது ஆட்ட வியூகத்தை மாற்றி அமைத்து இரு அணிகளும் வெற்றி பெறுவதற்காகப் போராடின.

இந்த நிலையில் தண்டனை உதை எல்லைக்கு அருகாமையில் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்துக்கு ஒரு நேர் உதை கிடைத்தது. அதனை அவர்கள் கோல் கம்பத்தை நோக்கி பலமாக உதைத்தனர். அதனை தடுத்து விளையாட முயன்றனர் மானிப்பாய் மகளிர் கல்லாரி வீராங்கனைகள். எனினும் துரதிர்ஷ்டவசமாக பந்து மானிப்பாய் மகளிர் கல்லூரி வீராங்கனை ஒருவரின் காலில் தற்செயலாகப் பட்டு அவர்களுடைய கோல் கம்பத்தினுள் நுழைந்தது. இதனால் சென்.ஜோசப் மகா வித்தியாலத்துக்கு ஒரு கோல் கிடைத்தது.

ஆனாலும் மனம் சோராத மானிப்பாய் மகளிர் கல்லூரி வீராங்கனைகள் எப்படியேனும் கோல் மழை பொழிந்து தமது அணியை வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற வெறியுடன் தொடர்ந்தும் போராடினர். பந்து அடிக்கடி மாதகல் சென்.ஜோசப் அணியின் கோல் கம்பத்துக்கு நெருக்கமாகச் சென்ற போதும் போட்டி முடியும் வரை மானிப்பாய் மகளிர் கல்லூரி வீராங்கனைகளால் கோல்கள் எதனையும் அடிக்க முடியவில்லை. மாதகல் சென்.ஜோசப் அணியின் கோல் காப்பாளர் மிகத் திறமையாகச் செயற்பட்டு மானிப்பாய் மகளிர் அணியின் கோல் கனவை தவிடு பொடியாக்கினார்.

இதனால் ஆட்ட நிறைவில் மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம் 1:0 என்னும் கோல் கணக்கில் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியை வீழ்த்தி அமரர் சேவியர் யூலியஸ் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இந்தச் சுற்றுப்போட்டியில் மூன்றாம் இடத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

இந்த போட்டிகள் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் மற்றும் யாழ் மாவட்ட உதவிச் சாரண ஆணையாளரும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆசிரியருமான திருமதி பவானி கைலாசநாதனும், சிறப்பு விருந்தினர்களாக மல்லாகம் மகா வித்தியாலய உப அதிபர் ந.ஆனந்தகுமார், மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலய ஆசிரியர் யே.அனுஸ்ரதாசும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-86)

## வடமாகாண விளையாட்டுப் போட்டிகள் வவுனியாவில்



வலி.வடக்கு, மார்ச் 29

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் நான்கு கட்டங்களாக இம்முறையும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை வட மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

முதற் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இதற்கான சுற்று நிருபங்கள் வட மாகாணத்திற்கு உட்பட்ட சகல வலயங்களையும் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களுக்கு வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முதலாம் சுற்றில் ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் வவுனியாவில் ஆரம்பமாவதைத் தொடர்ந்து ஏனைய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் இடம் பெறவுள்ள ஏனைய போட்டிகளின் விவரங்கள் வருமாறு.

ஜூன் மாதம் 06 ஆம் திகதி - ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான உடற் பயிற்சிப் போட்டிகள்

ஜூன் மாதம் 7, 8ஆம் திகதிகள் - ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான மட்டுப்படுத்திய மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகள்


ஜூன் 08, 09ஆம் திகதிகள் - ஆண்களுக்கான பளுத் தூக்கும் போட்டிகள்.

ஜூன் 09 ஆம் 10 ஆம் திகதிகள் - ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான ஹொக்கி போட்டிகள்.

ஜூன் 11 ஆம் 12 ஆம் 13 ஆம் திகதிகள் - ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-86)

## வென்றது பட்டிணமும் சூழலும்

### ஆண்கள், பெண்கள் உதைபந்தாட்டத்தில்



யாழ்ப்பாணம், மார்ச் 29

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலகங்களுக்கு இடையிலான குழுநிலைப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கடந்த சனிக்கிழமை திருகோணமலை 'மக்கெய்சர்' விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆண் பெண் இருபாலருக்குமான உதைபந்தாட்டப் போட்டியில் பட்டிணமும் சூழலும் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

முதலில்இடம்பெற்றஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு அணியை எதிர்த்து தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவு அணி களமிறங்கியது.

இதில் பட்டிணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவு அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பட்டிணமும் சூழலும் பிதேச செயலகப் பிரிவு அணியோடு கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவு அணி மோதிக் கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் எந்தவொரு கோலையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே போட்டியில் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பட்டிணமும் சூழலும்பிரதேசசெயலகப்பிரிவு அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## மயூரன் 'ஹட்ரிக்'

யாழ்ப்பாணம்,மார்ச் 29

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படுகின்ற 2012 ஆம் ஆண்டுக்கான அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 பந்துப் பரி மாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் ஜொனியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சென்றல் விளையாட்டுக்கழக வீரர் மயூரன் ஹட்ரிக் சாதனை புரிந்துள்ளார்.

சென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் பந்து வீசிய சென்றல் வீரர் மயூரன் தனது இரண்டாவது பந்து பரிமாற்றத்தின் போது ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியின் மூன்று இலக்குகளை குறித்த பந்துப் பரிமாற்றத்தின் 2 ஆவது 3 ஆவது 4 ஆவது பந்துகளில் கைப்பற்றினார் . இதன்மூலம் இந்த வருடம் கழகங்களுக்கு இடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் முதலாவதாக ஹட்ரிக் சாதனை படைத்துள்ளார் மயூரன். இந்தப் போட்டியில் சென்றல் அணி தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது. (ங-23)

## விக்ரோறியா சம்பியன்

வலி.வடக்கு, மார்ச் 29


வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஆரம்பத்திலிருந்தே ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தின. எனினும் விக்ரோறியாக் கல்லூரி இறுதி நிமிடத்தில் உரிய கவனம் எடுத்து விளையாடி மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் 02 நேர் சுற்றுக்களை 25:22, 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அமரர் முருகையா வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

முதலாம், இரண்டாம் இடங்களை பெற்ற அணிகளுக்கு மல்லாகம் மகா வித்தியாலய அதிபர் ந.சுப்பிரமணியம் பரிசில்களை வழங்கினார். (ங-86)

## நாங்களும் வெற்றியாளர்கள் தான்



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் இரண்டாம் இடம்பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்களும், 3ஆம் இடம்பெற்ற வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வீரர்களும் தத்தம் பாடசாலை அணியின் பயிற்றுநர்கள், ஆசிரியர்கள் சகிதம் வீற்றிருக்கிறார்கள். (ங-86)

## வலயப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். வலய பாடசாலைகளுக்கு இடையேயான போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில் எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதன்போது நடைபெறவுள்ள போட்டிகளின் விவரங்கள் வருமாறு:-

* 15, 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி,
* 19 வயது பிரிவு ஆண், பெண் எல்லேப் போட்டி,
* 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான கரம் போட்டி. (ங-23)

# இன்றும் சுழல் வீசுமா?





காலி, மார்ச் 29

இங்கிலாந்து அணிக்கு இலங்கை அணி 340 என்ற வெற்றி இலக்கை காலி டெஸ்டில் நிர்ணயித்து உள்ளது.

இலங்கை இங்கிலாந்து அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள்ஆட்ட நேர நிறைவில் இலங்கை அணி 5 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களை பெற்றிருந்தது. தினேஷ் சந்திமால் 17 ஓட்டங்களுடனும், சுராஜ் ரந்தீவ் இரண்டு ஓட்டங்களுடனும் களத்தில் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

3 நாள் ஆட்டம் நேற்றுக் காலை ஆரம்பமானது. சந்திமாலும் ரந்தீவும் நிதானமாக ஆடி, இலக்கு இழப்பை தவிர்க்க முயன்றனர். இதனால் இலங்கை அணி ஓரளவு கௌரவமான இலக்கை நோக்கி நகர முடிந்தது. எனினும் நேற்றும் காலியில் சுழல் சுவான், பனேஸர் ரூபத்தில் மீண்டும் மையம் கொள்ள,சந்திமால் 31 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார். அவரைத் தொடர்ந்து ரந்தீவும் வெளியேற இலங்கை அணி தத்தளிக்கத் தொடங்கியது.

எனினும் இலங்கையின் இலக்குக் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தன ஆபத்பாந்தவனாக தன்னுடைய துடுப்பால் சுவான், பனேஸர் சுழல் கூட்டணிக்கு பதிலடி கொடுக்கத் தொடங்கினார். தேவையற்ற, அபாயகரமான பந்துகளைத் தடுத்தாடிய பிரசன்ன, இடைக்கிடையே சிக்ஸர், பவுண்டரிகளையும் விளாசி இலங்கை ரசிகர்களுக்கு நம்பிக்கை ஊட்டத்தொடங்கினார்.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் சுழல் சூறாவளியைத் தொடக்கி வைத்த இலங்கையின் ரங்கன ஹேரத், இங்கிலாந்தின் சுழல் மையமான சுவானின் பந்தில் இலக்குத் தகர்ந்து ஆட்டமிழந்தார். அதன் பின்னர் வந்த வெல ஹெதரவும், லக்மாலும் பிரசன்னவுக்கு ஓரளவு துணையாக நிற்க இலங்கை 200 ஓட்டங்களைக் கடந்தது. இறுதியில் 84.3 பந்துப் பரிமாற்றங்களில் 214 ஓட்டங்களை எடுத்து தன்னுடைய சகல இலக்குகளையும் இலங்கை இழந்தது. வீழ்த்தப்பட முடியாத வீரனாக அரைச் சதம் கடந்து 61ஓட்டத்துடன் பிரசன்ன ஜெயவர்த்தன களத்தில் நின்றார்.

இங்கிலாந்து அணி சார்பில் சுழலில் கலக்கிய சுவான் 6 இலக்குகளையும், இங்கிலாந்தின் ஹர்பஜன் சிங் என்று வர்ணிக்கப்படும் பனேஸர் 2 இலக்குகளையும் கைப்பற்றி இருந்தனர்.

340 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்று களம் இறங்கிய இங்கிலாந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும், மீண்டும் ஹேரத்தின் சுழல் மையம் கொள்ளத் தொடங்கியது. இதில் சிக்கி இங்கிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் குக் மற்றும் ஸ்ட்ரோஸ் வீழ்ந்தனர். எனினும் ஜொனத்தன் ரொட்டும், கெவின் பீற்றர்சனும் நிலைமையை உணர்ந்து விளையாட இங்கிலாந்து அணி 100 ஓட்டங்களைக் கடந்தது. நேற்றைய ஆட்ட நேர நிறைவில் இங்கிலாந்து 2 இலக்குளை இழந்து 111 ஓட்டங்களை பெற்றிருந்தது. ரொட் 40 ஓட்டங்களுடனும், பீற்றர்சன் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இன்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்தும் ஹேரத்தின் சுழல் வீசுமா அல்லது இங்கிலாந்து வெற்றியைப் பறிக்குமா? (ங)

இரு அணிகளுக்கும் வெற்றிவாய்ப்பு சம விகிதத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இன்றைய ஆட்டத்தில் மேலெழும் அணியே வெற்றியைச் சுவைக்கும்.

**இலங்கை எதிர் இங்கிலாந்து**
இலங்கை - 318 & 214 இங்கிலாந்து - 193 & 111/2
இங்கிலாந்து வெற்றி பெற இன்னும் 229 ஓட்டங்கள் தேவை

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| திரிமன்னே | b சுவான் | 06 | 23 | 0 | 0 |
| டில்ஷான் | b புரோட் | 00 | 02 | 0 | 0 |
| சங்ககார | c இயன்பெல் b சுவான் | 14 | 44 | 1 | 0 |
| மஹேல | c அன்டர்சன் b சுவான் | 05 | 07 | 1 | 0 |
| சமரவீர | st பிரையர்.b சுவான் | 36 | 74 | 5 | 0 |
| சந்திமால் | b சுவான் | 31 | 83 | 5 | 0 |
| ரந்தீவ் | lbw b சுவான் | 18 | 63 | 2 | 0 |
| பிரசன்ன ஜெயவர்த்தன | (ஆட்டமிழக்காமல்) | 61 | 123 | 3 | 3 |
| ஹேரத் | b சுவான் | 07 | 10 | 1 | 0 |
| வெலஹெதர | c ஸ்ட்ரோஸ் b பனேஸர் | 13 | 55 | 2 | 0 |
| லக்மால் | ரன் அவுட் | 13 | 29 | 3 | 0 |

இலக்கு இழப்பு: 1-04, 2-08, 3-14, 4-41, 5-72, 6-114, 7-115, 8-127, 9-167, 10-214
உதிரிகள் 10
மொத்த ஓட்டங்கள் 214

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அன்டர்சன் | 10.3 | 2 | 26 | 0 |
| புரோட் | 11 | 2 | 33 | 1 |
| பனேஸர் | 24 | 6 | 59 | 2 |
| சுவான் | 30 | 5 | 82 | 6 |
| பட்டேல் | 09 | 4 | 09 | 0 |

இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்ட்ரோஸ் | c டில்ஷான் b ஹேரத் | 27 | 60 | 2 | 0 |
| குக் | c பிர.ஜெயவர்த்தன b ஹேரத் | 14 | 25 | 3 | 0 |
| ரொட் | (ஆட்டமிழக்காமல்) | 40 | 96 | 5 | 0 |
| பீற்றர்சன் | (ஆட்டமிழக்காமல்) | 29 | 58 | 4 | 0 |

இலக்கு இழப்பு: 1-31, 2-48
உதிரிகள் 01
மொத்த ஓட்டங்கள் 111

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வெலகெதர | 05 | 2 | 16 | 0 |
| லக்மல் | 03 | 1 | 09 | 0 |
| ஹேரத் | 15 | 3 | 52 | 2 |
| டில்ஷான் | 09 | 1 | 14 | 0 |
| ரந்தீவ் | 08 | 1 | 19 | 0 |



# சமரசம்



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் தலைவரான கிறிஸ் கெயிலுக்கும், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்குமிடையில் நிபந்தனைகளுக்குட்பட்ட ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் முகவரிற்கிடையிலான ஒப்பந்தமாக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரதியொன்று சென் லூசியாவின் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை, கெயிலுடனான ஒப்பந்தம் குறித்து கிரிக்கெட் சபை மட்டத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும், குறித்த ஒப்பந்தம் தொடர்பான விளக்கம் பிரதமருக்கு விரைவில் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

எனினும் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கிறிஸ் கெயில் எப்போது போட்டியில் பங்குபற்றுவார் என்பது குறித்த சந்தேகம் தொடர்ந்தும் நிலவுகிறது. ஏப்ரல் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். தொடரில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக விளையாட கிறிஸ் கெயில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதோடு, இங்கிலாந்து பிராந்தியப் போட்டியில் சமர்செற் அணி சார்பாக பங்குபற்றவும் அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்தாண்டு வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்கு எதிராகவும், பயிற்சியாளருக்கு எதிராகவும் கிறிஸ் கெயில் தெரிவித்த கருத்துக்களை மீளப்பெறுமாறு தெரிவிப்பதோடு, அவ்வாறு மீளப்பெற்றால் மாத்திரமே கிறிஸ் கெயில் மீண்டும் அணியில் சேர்க்கப்படுவார் என்று மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையும், தெரிவித்த கருத்துக்களை மீளப்பெற முடியாது என்று கிறிஸ் கெயிலும் தொடர்ந்து தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள நிபந்தனைகள் எப்படியானவை என்பது தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை. (5)

## ஷரபோவாக்கு டும் டும் டும்...

பிரபல ரெனிஸ் வீராங்கனை மரியா ஷரபோவாக்கு, ரஷ்யாவைச் சேர்ந்த கூடைப் பந்து வீரருடன் விரைவில் திருமணம் நடைபெற உள்ளது.

முன்னணி ரெனிஸ் வீராங்கனைகளில் ஒருவர் மரியா ஷரபோவா. இவர் ரஷ்யாவைச் சேர்ந்த கூடைப்பந்து வீரர் வுஜாசிக்கை காதலித்து வருகிறார். இருவருக்கும் இடையே திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்று விட்டது.

இந்த நிலையில், ஷரபோவா-வுஜாசிக் திருமணம் நவம்பர் 10 ஆம் திகதி துருக்கி தலைநகர் இஸ்தான்புல் நகரில் நடைபெற உள்ளது. (5)



## நடால், அசரென்கா முன்னேற்றம்



மியாமி சர்வதேச ரெனிஸ் போட்டியில் முன்னணி டென்னிஸ் வீரர் ரபேல் நடால் மற்றும் முன்னணி வீராங்கனை அசரென்கா ஆகியோர் மூன்றாவது சுற்றில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

மியாமி மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டிகள் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு 3 வது சுற்றில் ஆடிய ரபேல் நடால், 6- 2, 6- 2 என்ற நேர் செட்களில் ராடக் ஸ்டெபாணெக் என்பவரை வீழ்த்தி 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

கனடா நாட்டு வீரர் மிலோஸ் ரவோனிக் கணுக்கால் காயம் காரணமாக வெளியேறியதால் அன்டி முர்ரே அடுத்த சுற்றுக்கு முன்னேறி அதில் பிரான்ஸ் வீரர்கில் சிமோனைச் சந்திக்கிறார்.

பல்கேரிய வீரர் டிமிட்ரோவ் என்பவரிடம் 6- 3, 2- 6, 6- 4 என்ற செட்களில் டொமாஸ் பெர்டிச்சை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

பிரான்ஸ் வீரர் வில்பிரெட் சொங்கா, ஜேர்மனி வீரர் கோல்ஷ்ரெய்பரை 6- 4, 7- 6 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு 3 வது சுற்றில், பிரான்ஸ் வீராங்கனை மரியோன் பர்டோலி 6-4, 7-6 (10-8) என்ற செட் கணக்கில் ருமேனியாவைச் சேர்ந்த சிமோனா ஹாலப்பை வீழ்த்தினார்.

அசரென்கா (பெலாரஸ்), கிரிலென்கோ (ரஷ்யா), வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), அனா இவானோவிச் (செர்பியா) ஆகியோரும் மூன்றாவது சுற்றில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். (5)

# மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 24,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499

# NEC

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி சந்தி,
யாழ்ப்பாணம்.

A/L 2014

ஆரம்பம்:
31-03-2012 சனி 8.00மணி

## கலை, வர்த்தகப் பிரிவு - 2

-ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்-

# ACA

கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்
(சுன்னாகம் ப.நோ.கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக)

**A/L 2014**

கலை, வர்த்தக கணித உயிரியல் பிரிவுகள்

மாணவர்கள் விரும்பும் பிரபல ஆசிரியர்கள் இப்பொழுது எமது நிறுவனத்தில்...

ஆரம்பம்
31.03.2012 (சனி)
மாலை - 3 மணி

### கலை, வர்த்தக பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| கணக்கீடு<br>D.SAM | வணி. கல்வி<br>B.S. பசில் | பொருளியல்<br>S.S. சிறி | தமிழ்<br>இரா. அகிலன் |
| நா/அரங்<br>மங்களேஸ் | இ. நாகரிகம்<br>ஜெயக்குமார் | அளவையியல்<br>E.S. பவன் | வரலாறு<br>R.S. சந்திரன் |
| அரசியல்<br>பொன். சந்துரு | புவியியல்<br>தினேஸ் | விவசாயம்<br>சசிகரன் | இ. சமயம்<br>மனோஜ் |
| சித்திரம்<br>மதீஸ் | மனையியல்<br>ரஜித்தா | கிறிஸ்தவம்<br>வசந்தன் | |

### கணித, உயிரியல் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| இ. கணிதம்<br>ஐங்கரன் | உயிரியல்<br>குருபரன் | இரசாயனவியல்<br>வாகீசன் | பௌதிகவியல்<br>பார்த்தீபன் |

# புதிய பொருளியல் கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.(பெருமாள் கோவில் அருகாமை)

## A/L 2014

ஆரம்பம் : 31.03.2012
சனி காலை 8.00
ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்

**வர்த்தகப்பிரிவு**

கணக்கீடு : K.பாலகஜன்
பொருளியல் : NB.கஜீதரன்
வணிகக்கல்வி : S.K.பாலசுபேஸ், S.யசோதரன்

**கலைப்பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | : A.K கீர்த்திராஜன் | அளவையியல் | : P. கமல் |
| இந்து நாகரீகம் | : T.ஶ்ரீஸ் | பொருளியல் | : NB. கஜீதரன் |
| வரலாறு | : RR.ஆனந்தன் | அரசியல் | : A.K றொபின்சன் |
| புவியியல் | : P.S.V.தினேஸ் | நாட.அரங்கியல் | : S.R. ரமேஸ் |
| இலகு கணிதம் | : S.சயந்தன் | இந்து சமயம் | : T. ஶ்ரீஸ் |
| விவசாயம் | : S.M.V.தேவா | ஊடகவியல் | : R. இராஜேஸ்வரன் |
| கிறிஸ்தவம் | : R.கஸ்ரோன் | சித்திரம் | : S.டொமினிக் |
| சங்கீதம் | : T.ராகினி | மனைப் பொருளியல் | : S.தர்சி |
| ICT | : R.இராஜேஸ்வரன் | English | : S.Jaisan |

# NEC

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி சந்தி,
யாழ்ப்பாணம்.

A/L 2014

## கணித, விஞ்ஞான பிரிவு

ஆரம்பம்: 31-03-2012 சனிக்கிழமை
Batch 1- 8Am
Batch 2- 3Pm

CHEMISTRY : வாசு COM.MAT : சயந்தன்
PHYSICS : எடிசன் BIOLOGY : ஞானேந்திரன் சுதா

-ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்-

# பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளில் பணியாற்றுவதற்கு தகுதியும் அனுபவமும் உள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*01. சிட்டை எழுதுநர்கள்* (Bill Clearks)
*02. விற்பனையாளர்கள்* (Sales Men)
(வயது 25 - 40 இற்கு இடைப்பட்டவர்கள்)

இந்தப் பதவிகளில் இணைந்துகொள்ள விரும்புவோர் தமது சுயவிவரம் கொண்ட விண்ணப்பத்துடன் 30.03.2012ஆம் திகதி மு.ப. 10 - 12 மணிக்கு இடையில் கீழ்வரும் விலாசத்துக்கு நேரில் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**முகாமையாளர்,**
**நாராயணா செராமிக் யுனிற்,**
113, கண்டி வீதி, கிளிநொச்சி.

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## 2014 கலை, வர்த்தகம்

*புதிய பிரிவு ஆரம்பம் 31.03.2012 8 மணி*

| Eco | Tam | H.C. | P.Sci |
|---|---|---|---|
| M.C. சுதாகர் | N. குழந்தை | பத்மராஜா | ஶ்ரீரங்கநாத் |

| Geo | Log | Chi | Ram | His |
|---|---|---|---|---|
| P.S.V. தினேஸ் | வாகீசன் | அமலன் | கஜீதரன் | தாஸ் |

### வர்த்தகப் பிரிவு

| Ec | Ac | B.St |
|---|---|---|
| M.C. சுதாகர் | றொஜிந்தன் | S. முகுந்தன் |

அனுமதிகள் இன்று முதல்

# Deutsch, Dutch, French வகுப்புகள்

திருமணம் மற்றும் Sponsor மூலம் வெளிநாடு செல்ல விருப்பவர்களுக்கு தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

**German - Deutsch (டொச்)**
30/03 Friday - 9 - 1 Batch - I
31/03 Saturday - 10 - 1 Batch - II

**Netherland - Dutch (டச்)**
30/03 Friday - 10 - 2 Batch - I
31/03 Saturday - 9 - 1 Batch - II

French, Italian புதிய வகுப்புகளும் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

## Vivekananda Academy

(Centre for International Launguage Studies)
அரசாங்க பதிவு இல. - W/A 76795
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 4842464, 021 3216928, 021 2220393
குறிப்பு: எமது நிறுவனம் வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்கு அரசாங்கத்திலும், தூதரகங்களிலும் பதியப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமாகும்.

# SHAMROCK

ஈச்சமோட்டை, யாழ்

**A/L 2014**
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன்
Gen. Eng & GIT

★. O/L Repeat
★. O/L English (Paper Class)
★. Gr 1 முதல் O/L வரை
★. Eng. Med 6 to11

# A/L - 2014

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஏப்ரல் 7
சனி - காலை
9 மணி

**DMI**
**Jaffna**

# ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன்

யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரியில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
வார வகுப்புக்கள் : 30.03.2012 [நாளை]
சனி,ஞாயிறு பிரிவு : 31.03.2012 [சனி]

சலுகைக்கட்டணத்துடன் சேர கடைசி சந்தர்ப்பம்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | 12,000/- | 3,000/- |
| பிரெஞ்ச் | 60,000/- | 15,000/- |
| ஜெர்மன் | 60,000/- | 15,000/- |

இச்சலுகை இரண்டு நாட்களுக்கு மட்டும்

**MyWay**
077 33 63 456

# BEACON

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

## A/L - 2014

பிரிவு - 2

**வர்த்தகப்பிரிவு**
பொருளியல் : வரதராஜன்
கணக்கீடு : பகீரதன்
வணிகக்கல்வி : முரளி

ஆரம்பம்: 31.03.2012 (சனி 8.00 மணி)

# புதிய நாவலர்

கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

## O/L DAY CLASS

ஆரம்பம்
02.04.2012 திங்கள் காலை 8.00 மணி

கடந்த வருட O/L Day Class பிரிவில் 90% மாணவர் களை சித்தி அடைய வைத்த ஒரே ஒரு கல்வி நிலையம்

அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்.

# தேவை

வீட்டுப்பெண் உதவியாளர் உடன் தேவை.
தொடர்புக்கு : 077 6178521

# A/L 2014 கலை வர்த்தகம்

| | |
|---|---|
| தமிழ்<br>திரு.குகன் | கணக்கீடு<br>திரு.தவா |
| இந்.நாகரிகம்<br>திரு.ஜெயக்குமார் | பொருளியல்<br>திரு.சண் |
| அளவையியல்<br>திரு.துரை<br>திரு.நீதன் | வணிகக்கல்வி<br>திரு.பிரதீபன் |
| அரசியல்<br>திரு.பொன்.சந்துரு | விவசாயம்<br>திரு.விஷ்னு |
| புவியியல்<br>திரு.கரன் | கிறிஸ்தவம்<br>திருமதி.மல்லிகா |
| வரலாறு<br>திரு.தாஸ் | ஆரம்பம்<br>31.03.2012 10am |
| மனை.பொருளியல்<br>திரு.மஜீபன் | யூனிவேர்சல்<br>கந்தர்மடம்<br>விரைவில் நகரத்திலும் |

# மருத்துவ உதவியாளர் பயிற்சி

O/L தகமையுடன் கற்கலாம்.
கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்புடனான பயிற்சி நெறி.
M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.
Fee : 12,500/= (4/6 Months)
லாவா வைத்தியசாலையில் பயிற்சி.

**Knowledge Universe**
No 75,Temple Road,Jaffna
Call : 0776458253

O/L தகைமையுடன் பட்டதாரி ஆகும் அரிய வாய்ப்பினை வழங்குகின்றது

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்



*தகைமைகள் O/L ஐந்து (5) பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்*

1. முதல் இரண்டு வருடங்களுக்கு அடிப்படை நிலை (Foundation Course) கல்வியைத் தொடர வேண்டும்.
   பிரிவு 1: கணிதம், உளவியல், வணிகவியல் சூழ்நிலைக்கல்வி
   பிரிவு 2: கணிதம், அரசியல், புவியியல், சிறப்புத் தமிழ்
   பிரிவு 3: வணிகவியல், வங்கியியல், கணக்கியல், பொருளியல்
   பிரிவு 4: வரலாறு, பொருளியல், அரசியல், சூழ்நிலைக்கல்வி
   பிரிவு 5: வரலாறு, புவியியல், உளவியல், சிறப்பு தமிழ்
3. இப்பிரிவுகளுக்குள் ஏதாவது ஒரு பிரிவினை நீங்கள் தெரிவு செய்யலாம்.
4. கிழமை நாள்களுக்குரிய வகுப்புக்கள் ஆரம்பம் 02.04.2012 காலை 8 மணி
   வார இறுதி நாள்கள் (சனி, ஞாயிறு) வகுப்புக்கள் ஆரம்பம் 07.04.2012 காலை 8 மணி
5. இந்த இரண்டு வருட கற்கை நெறியினை நிறைவு செய்த பின்னர் மூன்று வருட கற்கை நெறியாக B.A, B.com, B.sc ஆகிய பட்ட நெறியினை நிறைவு செய்ய முடியும்.
6. இப் பட்டநெறியானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

**முக்கிய குறிப்பு:**

A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்கள் மூன்று வருட கற்கை நெறியாக B.A, B.com, B.sc ஆகிய பட்ட நெறியினை நிறைவு செய்து கொள்ளலாம். இவர்களுக்கு அடிப்படை நிலைக்கல்வி (Foundation Course) தேவை இல்லை.

1. பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.
2. பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரிப் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
தொலைபேசி இல: 2228148

**புதிய உயர் கல்லூரி**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.